தர்மசக்கரம்



ரௌத்திரி வருஷ ஆடி மீ சக்கரம் 28 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம் - 17

1, 2 & 3 – 8 – 80

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி வெள்ளி, 2ஆம் தேதி சனி, 3ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறுமைல் தூரத்தில் பாபநாசம் என்னும் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், நபர் ஒன்றுக்கு ரு. 21-00 விதம், திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார் அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து, அனுமதி கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். பதிவு பெற்ற முதல் 200 பேர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக் கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் 31ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன்கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போகப் பஸ்கள் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

சாதனை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6.00
நீராடல் முதலியன	6-00	7-30
காலை தியானம்	7-30	8 00
சிற்றுண்டி	8-00	9-00
காலை உபந்யாசம்	9-00	10-00
மௌனம், உழவாரப்பணி	10-00	11-00
பஜனை	11-00	11-45
கோவில் வழிபாடு	11-45	12-30

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-30	3-00
மாலை உபந்யாசம்	3-00	4-00
தனியாக வாசித்தல்	4-00	4-30
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-30
நாமஜபம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
இரவு போஜனம்	7-30	8-30
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு: மூன்றாவது நாள் ஞாயிறு மாலை 5.00 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

காரியதரிசி
Sv. Rm. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம்.

ஸதானந்த
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

16-7/30

83-2

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29 | ரௌத்திரி ஹூ ஆடி மீ | ஆரம் 7

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

ஆன்மிகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதிப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் அன்பர்களின் உதவியால் தர்ம சக்கரம்தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

அந்தர்யோக விவரங்கள்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 20—7—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பெரிய காளியம்மன் கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 20—7—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் கோவில் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 20—7—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ முத்தையா பிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—தேனியில் 23—7—80 புதன்கிழமை
இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி அசலானந்தர்
உணவு வசதி: பகல் உணவு தேவைப்படுபவர்கள் ரூ. 1-00 நேரில் செலுத்தி சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 3—8—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: சுதந்திரம் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மானந்தர்

திருச்சி ஜில்லா—துறையூரில் 3—8—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி துருவானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 3—8—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல்மில் ஆரம்பப்பாடசாலை
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 10—8—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி அசலானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 10—8—80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: சாத்தூர் எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (பஸ்ஸ்டாண்டு எதிரில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மானந்தர்

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி



ராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமான சுவாமி சமாதிக்கோயில் அடிமட்டம் கருங்கல் திருப்பணி முடிவுபெற்றது. அதற்கு மேல் பூமி மட்டத்திலிருந்து ஏழரை அடி உயரம் செங்கல் திருப்பணி முடிவுபெற்றிருக்கிறது. இப்பொழுது மழையையும் வெய்யிலையும் தடுக்கின்ற (Sun shade) சிமிண்ட் கான்கிரீட் பலகை வேலை நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

விருந்தினர் விடுதியாகவும் குழந்தைகள் களிக்கூடமாகவும் கட்டப்பெற்று வரும் கட்டடத்தின் அஸ்திவார வேலை பூர்த்தியாய் இருக்கிறது. தரைமட்டத்திற்கு மேல் செங்கல் சுவர் வேலை நிகழ்ந்து வருகிறது.

திருப்பூருக்குப் பக்கத்தில் இருக்கும் திருமுருகன்பூண்டியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் திருவுருவம் செதுக்கி எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வேலை பூர்த்தியாகி தியான நிஷ்டையிலுள்ள சுவாமிகளின் கருங்கல் விக்ரகம் இப்பொழுது திருப்பராய்த்துறை வந்து சேர்ந்திருக்கின்றது. தக்க தருணத்தில் அது ராமநாதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

1980 ஜுன் மாத நன்கொடை விவரம் வருமாறு :

விலாசம்		ரூபாய்
மே மாதம் முடிய நன்கொடை வசூல்		8 55 988
M/s. A. M. P. L. வள்ளியம்மை ஆச்சி டிரஸ்ட்	ராமன் தெரு, சென்னை	2 001
ஓர் அன்பர்	கோவை ஜில்லா	501
Dr. N. M. கிருஷ்ணன்	சாரதா கிளினிக், பாம்பே கேஸ்ல், உதகமண்டலம்	501
ஸ்ரீமதி K. ராஜம்மாள்	மேற்கு கல்மண்டபம் ரோடு, சென்னை	501
ஸ்ரீமதி J. உண்ணுமலை	ஒப்பணக்கார தெரு, கோவை	500
ஸ்ரீமதி N. லக்ஷ்மிகாந்தம்மாள்	வடக்கு தெரு, அம்பாசமுத்திரம்	500
M/s. S. T. சங்கரமுதலியார் & சன்ஸ்	ரைஸ்மில் ,,	251
M/s. ஸ்ரீ முருகப்பா இண்டஸ்டிரீஸ்	காட்டூர், கொமரபாளையம், சேலம்	250
ஸ்ரீ ராமகிருஷ்ண சமாஜ்	காமராஜர் சாலை, மதுரை	250
M/s. G. A. ஹனுமந்திர் & பிரதர்	காமராஜர் சாலை, மதுரை	250
M/s. ஸ்ரீ விவேகானந்தா ஸ்டோர்ஸ்	எழுகடல்வீதி ,,	250
M/s. S. V. ராமய்யா முதலியார் & சன்ஸ்	ஜவுளிவியாபாரம் அம்பாசமுத்திரம்	250
ஸ்ரீ N. சங்கரன்	கல்லிடைக்குறிச்சி	250
M/s. ஆதிநாராயண செட்டியார் பிரதர்ஸ்	போளுர், வ. ஆ. மாவட்டம்	200

ஸ்ரீ M. K. கோபால் செட்டியார்	வைசியாள் தெரு, போளூர், வ. ஆ. மாவட்டம்	200
நெல்லை கலர் கெம்	பெரியதெரு, திருநெல்வேலி	200
ஸ்ரீ A. R. M. S. சோமசுந்தர முதலியார்	ரைஸ்மில், அம்பாசமுத்திரம்	151
ஸ்ரீமதி அ. சோ. விஜயரத்தினம்மாள்	கத்தாளம்பட்டிதெரு, விருதுநகர்	150
M/s. ஸ்ரீ மஹாலக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ்	பந்தடி 3வது தெரு, மதுரை	150
சில அன்பர்கள	கணபதி, கோவை	125
சில அன்பர்கள்	கஞ்சிக்கோடு, கேரளா	125
ஸ்ரீ K. S. பெருமாள் முதலியார்	பனகல், ஸ்ரீ ஹாளஹஸ்தி, சித்தூர்	101
சைவ வேளாளர் பெருமக்கள் பேரவை	கச்சேரிவீதி, ஈரோடு	101
ஸ்ரீமதி S. கோவிந்தம்மாள்	ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி	101
ஸ்ரீ S. R. வேலுபிள்ளை	விஜயபுரம், திருவாரூர்	101
ஸ்ரீ V. நல்லுசாமிபிள்ளை	சிவகங்கை, இராமநாதபுரம்	101
ஸ்ரீ C. K. பாலசுந்தரம் செட்டியார்	நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை	101
ஸ்ரீ L. அப்பாசாமி	ஆம்பூர், வ. ஆ. மாவட்டம்	101
அன்பர்கள்	எர்ணுகுளம்	101
ஸ்ரீ A. S. ராமுடு அய்யர் தர்ம டிரஸ்ட்	தெற்குமாசி வீதி, மதுரை	101
ஸ்ரீ K. V. ராமமூர்த்தி	நவபத்கானாதெரு ,,	101
ஸ்ரீமதி T. துர்க்காவதி	பந்தடி 5வது தெரு ,,	101
M/s. M. B. வெங்கட்ராமய்யர் & சன்ஸ்	கான்பாளையம் 1வது தெரு ,,	101
ஸ்ரீ S. வேலாயுதம்	பழனியம்பா ஸ்டோர்ஸ், அம்பாசமுத்திரம்	101
ஸ்ரீ N. A. S. சண்முகம் பிள்ளை	மேலப்பாளையம் தெரு, அம்பாசமுத்திரம்	101
,, A. வேலாயுத முதலியார்	மதுரை கோட்ஸ் டீலர், கல்லிடைக்குறிச்சி	101
,, T. N. C. பாலசுப்ரமணியம் முதலியார்	,,	101
,, A. கருப்பையா ஆச்சாரி	வல்லத்தரகோட்டை, புதுக்கோட்டை	101
,, A. S. அருணாசல நாடார்	அம்மன் சன்னதி, மதுரை	100
,, M. S. பழனிச்சுவாமி செட்டியார்	குறிச்சிகாரா, திருச்சூர், கேரளா	100
,, M. நடேசபிள்ளை	பெரம்பலூர், திருச்சி	100
,, U. V. தக்ஷிணாமூர்த்தி முதலியார்	வேலப்பாடி, வேலூர், வ. ஆ. மாவட்டம்	100
ஸ்ரீமதி சீதாஜனக ரத்தினம் அம்மாள்	திருக்கோயிலூர், தெ. ஆ. மாவட்டம்	100
ஸ்ரீ S. ராஜமாணிக்கம்	மதுரை	100
,, S. S. திருப்பதி ராஜா	ரைஸ்மில், அம்பாசமுத்திரம்	100
,, V. S. P. S நாடார் & கோ.,	தெற்கு ரதவீதி, விருதுநகர்	100
,, V. S ராஜகோபால்	ரயில்வே குவார்டர்ஸ், எக்மோர், சென்னை	100
,, அய்யாசாமி சுவாமி	வழுக்குப்பாறை, கோவை	100
,, M. சுப்பையா	நடராஜன் லாரி சர்வீஸ், நியூரோடு, கோவில்பட்டி	100
,, M. துரைசுவாமி	,, ,, ,,	100
,, S. தங்க பாண்டியன்	S. P. S. லாரி சர்விஸ் ,,	100
M/s. E. M. A. சண்முக சுந்தரம் &கோ	எட்டயபுரம்	100
M/s. கணபதி மேட்ச் இண்டஸ்ரீஸ்	கோவில்பட்டி	100
M/s ஸ்ரீனிவாசன் & கோ.,	H. P. டீலர் ,,	100
ஸ்ரீ R. ராஜசேகரன்	,,	100
ரூபாய் நூறுக்குக் கீழ் வந்த நன்கொடைகள்		4 287
	ஆகக் கூடுதல் ரூ.	8 71 248

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29	ரௌத்திரி ௵ ஆடி ௴	ஆரம் 7

பிரார்த்தனை

न गुरोरधिकं तत्त्वं न गुरोरधिकं तपः ।
तत्त्वज्ञानात् परं नास्ति तस्मै श्रीगुरवे नमः ॥

— गुरुस्तोत्रम्

ந குரோரதிகம் தத்த்வம் ந குரோரதிகம் தப:
தத்த்வஞானத் பரம் நாஸ்தி தஸ்மை ஸ்ரீ குரவே நம:

— குருஸ்தோத்திரம்

குருவுக்கு மேல் மெய்ப்பொருள் இல்லை. குருசேவைக்கு மேல் தபசு இல்லை. மெய்ப்பொருளே பரம். ஆகவே குருவுக்கு வணக்கம்.

குருவுக்குங் குருவான சொரூப நீயே
குணதோட மெவையுமிலாச் சொரூப நீயே
யருளுக்கு மருளான சொரூப நீயே
யகளங்க மானபர சொரூப நீயே
தெரிவிக்குந் தெரிவான சொரூப நீயே
திருசியமோ ரணுவுமிலாச் சொரூப நீயே
சுருதிக்குஞ் சொல்லவொணுச் சொரூப நீயே
சும்மாவே இருக்கின்ற சொரூப நீயே.

— ரிபு கீதை

அருள் விருந்து

இறைவனை அணுகுபவனுக்கு அச்சமில்லை.

இன்பத்தின் எதிர்மறைத் தோற்றம் துன்பம்.

திண்ணியனைப் பாபச்செயல் மயக்கிவிட மாட்டாது.

அகத்தில் உள்ள குறை புறத்தில் தோல்வியாகத் தென்படுகிறது.

உள்ளம் தூய்மை அடைவதற்கேற்பத் தெய்விகம் தானாகத் திகழ்கிறது.

முயற்சி மகிழ்ச்சிக்கு வித்து. முழு முயற்சி வெற்றியாக வடிவெடுக்கிறது.

தூய அன்பை வளர்க்குமளவு பண்பாட்டில் சாதகன் மேலே வருகிறான்.

அன்புக்கு ஆற்றல் மிக உண்டு ; ஆயினும் அது பணிவுடன் இருக்கிறது.

சோம்பல் வாழ்வைத் தேய்க்கிறது. சுறுசுறுப்போ வாழ்வை வளர்க்கிறது.

மிகைப்பட்ட செல்வமும் வாழ்க்கை வசதியும் உழைப்புக்கு இடைஞ்சல்களாம்.

அயர்ந்த உறக்க நிலையை நனவு நிலையோடு இணைக்க வல்லவன் ஞானியாகிறான்.

ஆட்சி முறையில் கட்டுப்பாடுகளை அதிகரிப்பதற்கேற்ப மக்கள் திணறுகின்றனர்.

உணவின் சுவையை நா அறிந்துகொள்வது போன்று நல்லாரை நல்லார் அறிகின்றனர்.

புனித வாழ்வும், தெய்வப் பெற்றியும் ஒன்றேயாம். புனித வாழ்வு மேலாம் பிறப்புக்கு நிகரானது.

உடற்பயிற்சியால் சதையை உறுதிப்படுத்துவது போன்று தியானத்தால் உள்ளத்தை உறுதிப்படுத்தலாம்.

பிற்போக்கான வாழ்வு திண்டாட்டத்தையும் முற்போக்கான வாழ்வு ஆனந்தத்தையும் விளைவிக்கின்றன.

கடமையை முறையாகச் செய்பவனுக்கு உரிமை தானாக வந்து அமைகிறது. கடமையைச் செய்யாது உரிமையை நாடுபவனுக்கு அது ஒரு பொழுதும் வாய்ப்பதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்ச தேவருக்கும் கிரீஷ்சந்திரகோஷருக்குமிடையில் சம்பாஷணை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "ஹனுமான் ஸ்ரீ ராமனிடம் இங்ஙனம் பகர்ந்தான்."

'ஓ ராமா! சில வேளைகளில் உன்னை நான் ஆண்டவனாகவும், என்னை உன் தொண்டனாகவும் கருதுகிறேன். இன்னும் சில வேளைகளில் உன்னைப் பூரணனாகவும், அந்தப் பூரணத்தில் என்னை ஓர் அம்சமாகவும் கருதுகிறேன். இதற்குமேல் ஓ, ராமா! ஆத்மபோதம் தலையெடுக்குமிடத்து நீயே நான், நானே நீ என்னும் பான்மையைப் பெறுகிறேன்.' ஆக, பக்தனொருவன் தன்னை உடலாகக் கருதுகின்றபொழுது ஆண்டவனுக்கு அவன் அடிமையாக இருக்கிறான். தன்னை ஜீவாத்மாவாகக் கருதுகிற பொழுது பரம்பொருளில் ஓர் அம்சமாக அவன் தன்னை வைத்துக் கொள்ளுகிறான். சுத்த சைதன்யமாக அவன் தன்னை உணருகிறபொழுது அபேத நிலையை எட்டுகிறான். ஆங்கு ஜீவாத்மா, பரமாத்மா என்னும் பாகுபாடு இல்லை. சுத்த சைதன்யமே நிலவுகிறது."

கிரீஷ்: "ஆஹா! என்ன அற்புதம்."

பரமஹம்சதேவர்: "உலகில் வாழ்ந்திருக்கும் மானுடனொருவன் ஈசுவரானுபூதியை ஏன் அடைய முடியாது? ஈசுவரானுபூதி அனைவருக்கும் சாத்தியம். ஆனால் பரத்தை நாடுகிற ஒருவனுக்கு விவேகமும் வைராக்கியமும் இன்றியமையாதவைகளாம். கடவுள் ஒருவரே மெய்ப்பொருள், ஏனைய யாவும் வெறும் தோற்றங்களாம். இரண்டு நாளில் அவையாவும் மறைந்துபட்டுப்போம் என்னும் திடச்சித்தத்தில் அவன் உறுதிபெற்றிருக்க வேண்டும். மேற்போக்காக வெறும் வாய்ப்பேச்சு உதவாது. கடலினின்று முத்தை எடுக்கவிரும்புகின்றவன் ஆழ்ந்து கடலினுள் மூழ்கவேண்டும். மேற்பரப்பில் நீந்திக்கொண்டிருந்தால் போதாது. அதே விதத்தில் பரநாட்டத்தில் ஆத்மசாதகன் ஆழ்ந்து மூழ்கவேண்டும். இங்ஙனம் இயம்பிய பரமஹம்சதேவர் பாடல் ஒன்று பாடலாயினர். அந்தப் பாடலில் அடங்கியிருந்த கருத்தாவது.

"ஓ மனமே, ஆழ்ந்து மூழ்கு. அழகுதெய்வம் என்னும் ஆழ்கடலிலே ஆழ்ந்து மூழ்கு. அப்படி மூழ்குகிற நீ அடிமட்டத்தை எட்டுவாயாகில் ஆங்கு நீ பராபக்தி என்னும் இரத்தினத்தைக் காண்பாய்."

பரமஹம்சதேவர்: "மற்றும் ஒரு விஷயத்தை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கடலுக்குள்ளே முதலைபோன்ற ஆபத்தான விலங்குகள் இருக்கின்றன. ஆத்மசாதகனுக்குக் காமம் முதலியன ஆபத்தான விலங்குகள் ஆகின்றன."

கிரீஷ்: "எமதர்ம ராஜனைப்பற்றி எனக்கு அச்சமில்லை."

பரமஹம்சதேவர்: "நான் பகர்வது மரணத்தைப்பற்றியதன்று. காமம் கொடிய விலங்கு என்று ஞாபகமூட்டுகிறேன். காமத்துக்கு இரையாகின்றவன் கடவுள் நாட்டத்துக்கு உதவமாட்டான். நீருக்குள்ளிருக்கும் முதலையினின்று தப்பித்துக்கொள்ள விரும்புகிறவன் தன் மேனி முழுவதிலும் மஞ்சளைப் பூசிக்கொள்ள வேண்டும். மஞ்சள் மணத்துக்குப் பக்கத்தில் முதலை தலைநீட்டாது. ஆத்ம சாதகன் ஒருவனுக்கு விவேகமும் வைராக்கியமும் அவனைக் காக்கும் மஞ்சள் ஆகின்றன.

"உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதற்கிடையிலேயே ஒரு சிலர் ஈசுவரானுபூதியை அடையப் பெறுகின்றனர். யோகியர்களுள் இரண்டுதரத்தார் இருக்கின்றனர். குப்தயோகி என்பவன் ஒரு தரத்தான். வெட்டவெளியோகி என்பவன் மற்றொரு தரத்தான். உலகைத் துறந்து வெளியேகி இருப்பவன் வெட்டவெளி யோகியாகிறான். அவன் யோகி என்பது மற்றவர்களுக்கும் வெளிப்படையாகிறது. மற்று, குப்த யோகியோ உலகத்தவன் போன்று உலகில் வாழ்ந்திருக்கின்றான். அவன் யோக சாதனத்தில் ஈடுபடுகிறவன் என்பது உலகத்தவர்களுக்குத் தெரியாது. குப்த யோகி ஒருவனைப்

பணக்காரன் வீட்டில் வேலை செய்கிற வேலைக் காரி ஒருத்தியோடு ஒப்பிடலாம். தன் எஜமானன் வீட்டில் பணிவிடைகள் பண்ணிக்கொண் டிருப்பதற்கிடையில் தன் வீட்டில் இருக்கும் குழந்தைகளைப்பற்றி அவள் எண்ணிக்கொண் டிருக்கின்றாள். குப்த யோகியைக் கற்பிழந்த மாதோடும் ஒப்பிடலாம். கற்பிழந்த மாதொருத்தி தன் வீட்டு அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பதற்கிடையில் தன்னுடைய கள்ளக் காதலன் மீது தன் கருத்தைச் செலுத்து கிறாள். அதே விதத்தில் குப்தயோகி ஒருவன் தனக்கு அமைந்துள்ள உலகக் கிருத்தியங்களை நிறைவேற்றுவதற்கிடையில் தன்னுடைய கருத்தைத் தீவிரமாகக் கடவுளிடத்துச் செலுத்து கிறான். விவேகத்தையும் வைராக்கியத்தையும் பெறுவது எளிதன்று. அவை இரண்டும்கிடைப் பதற்கரிய தெய்விகப் பேறுகள் ஆகின்றன. என்னுடைய சொத்துச் சுகங்களுக்கு 'நான் அதிபன்' என்னும் எண்ணத்தை ஒதுக்கித் தள்ளுவது எளிதன்று. டெபுடி மேஜிஸ்ட்ரேட் ஒருவரை நான் சந்திக்கலானேன். அவருக்கு மாதச் சம்பளம் ரூபாய் எண்ணூறு. பாரமார்த்திக வாழ்வைப்பற்றி அவருக்குக் கவலை கிடையாது. பரதத்துவ விசாரத்திலும் அவர் கருத்தைச் செலுத்துவதில்லை. சத் சம்பாஷணை நிகழ்ந்துகொண்டிருந்த ஓர் இடத்துக்குத் தம்முடைய செல்வர்களில் ஒருவனை அழைத்துக்கொண்டு அவர் வந்திருந்தார். அமர்வதற்கு வசதியான இடம் தேடுவதிலேயே அவர் கருத்தைச் செலுத்தினார். நிகழ்ந்த சத்சம்பாஷணைக்கு அவர் செவிசாய்க்கவில்லை. மற்றொரு பிரமுகரை நான் அறிவேன். அவருடைய பெயரை ஈண்டு இயம்பவேண்டிய அவசியமில்லை. ஜபம் பண்ணுவதில் நெடுநேரம் எடுத்துக்கொள்ளுவது அவர் வழக்கம். அதனால் என்ன? பத்தாயிரம் ரூபாய் கைக்கூலியாக ஏற்றுக்கொண்டு நியாய மன்றத்தில் அவர் பொய்ச்சாட்சி சொன்னார். உலகில் அப்படிப் பட்ட மாந்தர் இருக்கின்றார்கள். இது ஒரு புறமிருக்க உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருப் பவர்களும் ஈசுவர சாக்ஷாத்காரம் பெறமுடியும். நிபந்தனை ஒன்று அதற்கு முற்றிலும் இன்றியமையாதது. விவேகமும் வைராக்கியமும் யாரிடத்தில் இருக்கின்றனவோ அவர்கள் துறவிகளாகவிருக்கலாம், அல்லது குடும்பிகளாகவிருக்கலாம். அதற்கிடையில் தக்க நல்லறிவும், நல்வாழ்வும் அமைந்திருக்குமானால் ஈசுவரானுபூதி வாய்ப்பது சாத்தியம்."

கிரீஷ்: "என்போன்ற பாபி ஒருவனுடைய கதி என்ன ஆகும்?"

தமது கண்பார்வையை மேல் நோக்கித் திருப்பியவராக அன்பு கலந்த குரலிலே பரமஹம்சதேவர் பாடல் ஒன்று பாடினார். "நரகத்திலுள்ள துயரங்களையெல்லாம் துடைக்க வல்லவர் இறையவன். அத்தகைய இறைவனைக் குறித்துத் தியானம் பண்ணு. மரண பயத்தைப் போக்க வல்லவர் பரமன். அத்தகைய பரமனிடத்துக் கருத்தைச் செலுத்துவதற்கேற்ப இவ்வுலகுக்குரிய இன்னல்களும் துன்பங்களும் துடைக்கப்படுகின்றன. கடவுளிடத்துக் கருத்தை வைக்கிறவன் இமைப் பொழுதில் பிறவிக் கடலைத் தாண்டி முக்தியாம் கரையேறுவது திண்ணம். ஓ மனமே, இவ்வுலகுக்குள் நீ ஏன் வந்துள்ளாய் என்பதை எண்ணிப்பார். கெட்ட எண்ணங்களினின்றும், செயல்களினின்றும் நீ அடைந்துள்ள ஊதியம்தான் யாது? கீழான எண்ணங்களும் தீச்செயல்களும் பரமனை அடைவதற்கு வழிகள் ஆக மாட்டா. தவம் என்னும் நல்வாழ்விலே நீ ஈடுபடு. மெய்ப்பொருளாகிய பரமனிடத்து உன்னுடைய ஆழ்ந்த சிந்தனையை நெடிது செலுத்திப் பழகுவாயாக."

பரமஹம்சதேவர்: "இந்தப் பாடலில் அடங்கியிருக்கிற கருத்தை எண்ணிப் பார். கடவுளிடத்துக் கருத்தை வைக்கிறவன் இமைப் பொழுதில் பிறவிக் கடலைத் தாண்டி முக்தியாம் கரை ஏறுவது திண்ணம். இதில் அடங்கியிருக்கும் கருத்தை எண்ணிப் பார். மகாமாயை வாயிலில் நின்றுகொண்டு இறைவனுடைய காட்சியை மறைத்து வைத்திருக்கின்றாள். அவள் கிருபைகூர்ந்து சற்று விலகி நிற்பாளாகில் இறைவனுடைய காட்சி அக்கணமே பக்தனுக்கு வாய்க்கிறது. ஆதலால் பகவானுடைய காட்சியைக் காண விரும்புகிறவர்களுக்குப் பகவதியாகிய மகாமாயையின் கிருபை முற்றிலும் அவசியம். ஆதலால் சக்தி தேவியை வழுத்துதல் வேண்டும். நமக்கு மிக மிக அருகிலிருக்கும் பொருள் கடவுள். ஆயி

னும் அவரை நாம் அறிந்துகொள்ளாதிருக்கிறோம். ஏனென்றால் மகா மாயாதேவி மறைத்தல் என்னும் செயலில் ஈடுபட்டிருக்கிறாள். அதை ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகிறேன் கேள். வனவாசத்துக்குச் சென்ற ராமனும், இலக்ஷ்மணனும், சீதையும் வனத்துக்குள் நடந்து சென்றனர். முதலில் சென்றவன் ராமன். அவனுக்குப் பின் சீதை சென்றாள். இலக்ஷ்மணன் அவர்களுக்குப்பின் சென்றான். இலக்ஷ்மணனுக்கும் இராமனுக்குமிடையிலே இரண்டரை முழம் தூரம்தான் இருந்தது. ஆயினும் ராமனைப் பார்க்க இலக்ஷ்மணனுக்கு இயலவில்லை. ஏனென்றால் சீதை என்னும் மகாமாயாதேவி இடையில் இருந்தாள். இதே விதத்தில்தான் நம் உள்ளத்தின் உள்ளே இருக்கும் இறைவனைக்காண நமக்கு இயலுவதில்லை. மறைத்தல் என்னும் செயலை அன்னை பராசக்தி செய்துகொண்டிருப்பதே அதற்குக் காரணமாகும்.

"கடவுளை வழுத்துகின்றபொழுது பொருத்தமான மனநிலையைச்சாதகன் ஒருவன்வரவழைத்துக்கொள்ளவேண்டும். மூன்று விதமான மனநிலைகளை நான் அனுஷ்டித்து வருகிறேன். அவைகளுள் ஒன்று ஒரு குழந்தையின் மனப்பான்மை. குழந்தை ஒன்று தன் தாயினிடம் எத்தகைய இணக்கம் பூணுகிறதோ அத்தகைய இணக்கத்தைத் தெய்வத்தோடு நாம் வைத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய இணக்கத்துக்கு வாத்ஸல்ய பாவம் என்று பெயர். இரண்டாவதாகப் பணக்காரன் வீட்டில் பணிவிடை பண்ணும் வேலைக்காரி ஒருத்தியின் மனநிலையை நான் அம்பிகையோடு பூணுகிறேன். இதற்குத் தொண்டு மனப்பான்மை என்று பெயர். தாஸ்ய பாவம் என்றும் இதனை அழைப்பது உண்டு. மூன்றாவதாகத் தோழமை மனப்பான்மையை எனக்கு நான் அமைத்துக் கொள்ளுகிறேன். தோழர்களுக்கு இடையில் எந்த விதமான வேற்றுமையும் இல்லாது நெருங்கிய இணக்கம் உண்டாகிறது. இது சகா பாவம் என்று அழைக்கப்படுகிறது. நெடு நாளாக நான் என்னை அம்பிகையின் பணிவிடைப் பெண் என்றும், அம்பிகையின் தோழி என்றும் கருதி வந்தேன். அத்தகைய சாதனங்கள் நான் புரிந்தபொழுது நான் புடவை அணிந்திருந்தேன். பெண்ணொருத்தி போன்று நகைகள் சிலவற்றையும் நான் அணிந்திருந்தேன். இந்த மூன்று விதமான இணக்கங்களுள் ஒரு குழந்தை பூணுகிற இணக்கம் சாலச் சிறந்தது.

"வீரபாவம் அல்லது கெட்டியக்கார இணக்கம் பாராட்டத்தக்கதன்று. சாதகர்களுள் சிலர் இந்தக் கெட்டியக்கார இணக்கத்தை இன்னொரு போக்கில் அனுஷ்டிக்கின்றனர். அத்தகைய சாதகர்கள் தங்களைச் சிவ சொரூபமாகக் கருதிக் கொள்ளுகின்றனர். பெண்பாலரை அவர்கள் அன்னை பராசக்தியின் சொரூபமாகக் கருதுகின்றனர். இம்முறையைக் கையாண்டு முன்னேறியவர்கள் மிகச் சிலர். கெட்டுப் போனவர்களோ பலர். இம்முறை சாஸ்திரத்தில் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது எனினும், இதைப் பழக்கத்தில் கொண்டு வருவது பொருந்தாது."

கிரீஷ்: "கொஞ்ச காலத்துக்கு முன்பு நானும் இத்தகைய மனப்பான்மை படைத்திருந்தேன்."

இதைக் கேட்ட பரமஹம்சதேவர் கிரீஷ் சந்திரகோஷரைப் பரிவுடன் கூர்ந்து கவனித்துப் பார்த்தார்.

கிரீஷ்: "இடையிடையே அத்தகைய மனக் கோணல் இப்பொழுதும் வந்து வாட்டுகிறது. இதை அகற்றுதற்கு ஐயனே, நான் செய்யக் கிடப்பது யாது? தயை கூர்ந்துசொல்லுங்கள்."

ஒரு நிமிஷ நேரம் பரமஹம்சதேவர் சிந்தனையிலிருந்தார். பிறகு அவர் இயம்பியதாவது: "உன்னைத் தடுத்தாட்கொள்ளும்படி இறைவனிடம் உன்னை ஒப்படைத்து விடு. இறைவனோ தம்முடைய விருப்பப்படி உன்னை வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்."

அடுத்தபடியாகப் பேச்சு பரமஹம்சதேவருடைய வாலிப சிஷ்யர்களைப் பற்றியதாக வடிவெடுத்தது.

பரமஹம்சதேவர்: "நான் தியானத்தில் இருக்கின்றபொழுது இந்த இளைஞர்களுடைய மன அமைப்புக்களைத் தெளிவுறக் காண்கிறேன். செல்வத்தையோ, வீடுவாசலையோ தேடுவதைப் பற்றிய எண்ணம் அவர்களுக்கு இல்லை. இந்திரிய சுகத்திலும், போக வாழ்விலும் அவர்களுக்கு நாட்டமில்லை."

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

34\. நீர்க்குமிழி போன்றஉடல் நிற்கையிலே சாசுவதம்
சேர்க்க அறி யாமல் திகைப்பேனே பைங்கிளியே.

சாசுவதம்-யாண்டும் உள்ள மெய்ப்பொருள். அநித்தியத்தின் துணையைக்கொண்டு நித்தியத்தை நாடு என்பது கோட்பாடு. உலக நிலையில் வைத்து இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். விடு கட்ட முன்வருகிறவர்கள் முதலில் அதற்காகச் சாரம் கட்டுகின்றனர். சாரம் கட்டாது வீடுகட்ட முடியாது. வீடுகட்டி முடித்தானபிறகு சாரத்தில் பயன் ஒன்றுமில்லை. அதைக் கலைத்து அப்புறப்படுத்தியே ஆக வேண்டும். ஆகவே, நித்தியமாயுள்ள வீட்டை அமைப்பதற்கு அநித்தியமாயுள்ள சாரத்தைப் பயன் படுத்துகிறோம். நாம் வாழ்ந்துவரும் மண்ணுலக வாழ்க்கையில் நமக்கு அநித்தியமாயிருப்பது நாம் படைத்துள்ள உடல். சல சல வென்று ஓடும் நீரில் நீர்க்குமிழி ஒன்று வடிவெடுக்கிறது. அந்த நீர்க்குமிழி எவ்வளவு நேரம் நிலைத்திருக்கும் என்பது நமக்குத்தெரியாது. ஒரு நொடிப் பொழுதில் அது மறைந்து பட்டுப் போகலாம், அல்லது ஒருநிமிஷம் அது தாக்குப்பிடிக்கலாம். அதற்குமேல் நீர்க்குமிழி நிலைத்திராது. அதற்கு நிகர் நாம் படைத்துள்ள உடல். அது நம் கைவசம் இருக்கிறபொழுது ஒரு கணப்பொழுதையும் வீண் போக்காது சாசுவதமாயிருக்கும் சிவனை நாட நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். நிலையற்ற உடலை நிலையுற்றதென்றெண்ணி நாம் ஏமாற்றமடையலாகாது. பரநாட்டத்துக்கு இப்பொழுது என்ன அவசரம்? வாழ்க்கையின் பிற்பகுதியில் அதனிடத்துக்கருத்தைச்செலுத்துவோம் என்று எண்ணியிருந்து நாம் ஏமாற்றமடையலாகாது. மரணம் இப்பொழுதே நம்மை அடுத்து வந்துள்ளது என்னும் எண்ணத்துடன் பரநாட்டத்தில் தீவிரமாக நாம் கருத்தைச் செலுத்தவேண்டும் என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

35\. நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வேறு
என்று அணையார்
வஞ்சகத்தார் அல்லர்அவர் மார்க்கம்என்னே
பைங்கிளியே.

பரமாத்மாவாகிய இறைவன் நீக்கமற எங்கும் நிறைபொருளாக இலங்குகிறார். அத்தகைய பரம்பொருள் ஜீவாத்மாவின் உள்ளத்தினுள் மனசாட்சியாக வீற்றிருக்கிறார். அவருடைய காட்சிக்குப் புறம்பாக எந்த எண்ணமும் உள்ளத்தினுள் வடிவெடுக்க மாட்டாது. நனவில் ஆனாலும் சரி, கனவில் ஆனாலும் சரி, நெஞ்சகத்தில் நிகழ்கிற எண்ணங்கள் யாவையும் அவர் அறிபவராக ஆங்கு வீற்றிருக்கிறார். ஜீவாத்மன் எத்தனை கோடி பிறவிகள் எடுத்தாலும் அத்தனை கோடி பிறவிகளில் ஜீவாத்மனை விட்டுப் பிரியாது மனசாட்சியாகவே அவர் இலங்கி வருகிறார். அப்படி ஜீவனை விட்டுப் பிரியாது அவன் உள்ளத்தில் அவர் யாண்டும் வீற்றிருந்து வருகிறார் எனினும், ஜீவாத்மனோடு அவர் வைத்திருக்கிற இணக்கம் அலாதியானது. அவருடைய சாந்நித்தியத்தை உணர்ந்து ஜீவாத்மன் அவரோடு இணக்கம் பூண விரும்பினால் அக்கணமே நல்ல உறவினனாக அந்த ஜீவாத்மனுக்கு வாழ்வாங்கு வாழுதற்கு வழிகாட்டித் தர அவர் ஆயத்தமாயிருக்கிறார். பின்பு ஜீவாத்மன் அவருடைய சாந்நித்தியத்தைப் புறக்கணித்து விட்டுத் தன் போக்கில் போனால் அதைக் குறித்துப் பரமாத்மன் கவலைப்படுவதில்லை. உள்ளத்தினுள் வீற்றிருப்பதற்கிடையில் ஆங்கு இல்லாதவர் போன்று பராமுகமாக இருக்கிறார். அந்த ஜீவாத்மனை ஏமாற்றி விடவேண்டுமென்று இருப்பவரல்லர். அவன் செல்லுகிற வழி நல்லதா கெட்டதா என்று ஆராய்ச்சி பண்ணித் தம்மோடு உறவாட வரும்வரையில் அவர் அமைதியாகக் காத்திருக்கிறார். இக்கோட்பாட்டை மற்றோர் இடத்தில் தாயுமானவர் 'கள்ளனறிவூடுமே மெள்ளமெள்ள வெளியாய்க் கலக்கவரு நல்ல உறவே' என்று இயம்புகின்றார். ஜீவாத்மன் நன்றி படைத்தவனாகவிருந்தாலும் சரி, நன்றி கெட்டவனாகவிருந்தாலும் சரி, பரமாத்மன் நல்ல உறவாகவே இருந்து வருகிறார். அவர் வஞ்சகம் படைத்தவர் அல்லர். பொறுமையே வடிவெடுத்தவராக ஜீவாத்மாவின் உள்ளத்தினுள் பிரியாது இருந்து கொண்டு படிப்படியாக அவனை அவர் பக்குவப்படுத்துகிறார் என்றால் அவர் கையாளு

கிற மார்க்கத்தை அல்லது உபாயத்தை சரியாக மதிப்புப் போட யாருக்குத்தான் இயலும்? அவர் போக்கை முற்றிலும் அவர் தாம் அறிவாரே ஒழிய ஜீவாத்மனுக்கு அது முற்றிலும் புலப்படாது. அழகிய கிளியே! இறையவனுருடைய மகிமை இத்தகையது என்பதை நீ யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்.

36. பன்முத்திரைச்சமயம் பாழ்படக்கல் ஆல் அடிவாழ்
சின்முத் திரைஅரசைச் சேர்வேனே பைங்கிளியே.

ஜீவாத்மா, பரமாத்மா இணக்கத்தைப் பற்றிய தத்துவங்களை விளக்குதற்கு உபாயங்கள் பல உள. இவ் உபாயங்களை ஆன்றோர்கள் கற்றறிந்து கையாண்டு வந்திருக்கின்றனர். நன்மக்கள் சமுதாயம் இருக்கும் வரையில் சமய அனுஷ்டானத்தில் இந்த உபாயங்களும் நிலைபெற்று இருக்கும். பேச்சு இன்றி வெறும் கை விரல்கள் அமைப்பைக்கொண்டு கருத்தை விளக்கும் உபாயம் ஒன்று உளது. இந்த உபாயம் முத்திரை என்று இயம்பப் பெறுகிறது. முத்திரைகள் பல உள. மத்ஸ்ய முத்திரை, யோனி முத்திரை, லிங்க முத்திரை, தேனு முத்திரை இங்ஙனம் முத்திரைகளின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகிறது. இந்த முத்திரைகள் வைதிக மதங்களுக்கும், புத்த மதத்துக்கும் பொதுவானவைகள். இவைகளின் சிறு சிறு பகுதிகள் மற்ற மதங்களிலும் இடம்பெற்று இருக்கின்றன. எத்தனை மனிதர்களோ அத்தனை மதங்கள் என்பது பரமஹம்ச தேவருடைய போதனை. அதாவது முற்றிலும் ஒரே மனப்பான்மையில் அமைந்துள்ள இரண்டு மக்களை உலகில் காணமுடியாது. கருத்து வேறுபாடே மக்களின் போக்கு ஆகும். ஒவ்வொரு கருத்தையும் ஒவ்வோர் அடையாளத்தின் மூலம் வாய் பேசாது விளக்குவது சாத்தியம். இத்ததைய விளக்கத்திற்கே முத்திரை என்று பெயர். மொழிகள் அனைத்துக்கும் முத்திரைகள் பொதுவானவை.

ஒரு சான்றின் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவோம். வெவ்வேறு மொழிபேசுகிற வெவ்வேறு நாட்டவர்கள் நெடும் பாதையில் மோட்டார் வண்டி ஓட்டிக்கொண்டு போகிறார்கள். பாதையின் போக்கு அடையாளங்கள் வாயிலாக அவர்களுக்கு விளக்கப்படுகிறது. அண்மையில் பாதையில் ஒரு பள்ளம் வருகிறதென்றால் அதற்கு ஓர் அடையாளம் அமைத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒடுங்கிய பாலம் வருகிறதென்றால் அல்லது ஒரு குறுகிய திண்டுக்கரை வருகிறதென்றால் அது அதற்கேற்ற அடையாளம் பாதையோரம் அமைக்கப் பெற்றிருக்கிறது. வலப்பக்கம் திரும்புவதற்கும், இடப்பக்கம் திரும்புவதற்கும், வளைந்து வளைந்து போவதற்கும் ஏற்ற அடையாளங்கள் பாதையோரம் அமைக்கப் பெற்றிருக்கின்றன. எந்த மொழியின் துணையின்றியே வெவ்வேறு மொழி பேசுகின்றவர்கள் இந்த அடையாளங்களைக்கொண்டு பாதையின் பாங்கைப் பிழை போகாது அறிந்துகொள்ளுகின்றனர். முத்திரை அமைப்பின் பாங்கும் இத்தகையதேயாம். இப்படி அமைந்துள்ள எண்ணிறந்த முத்திரைகளெல்லாம் சமயக் கோட்பாடுகளை விரிவுபடுத்திக்கொண்டே போகின்றன. இத்தனை முத்திரைகளுள் சின் முத்திரை ஒன்றுதான் மன ஒடுக்கத்துக்கும் ஜீவாத்மா, பரமாத்மா இணக்கத்துக்கும் அடையாளமாக அமைந்திருக்கின்றது சித்த விருத்தியை வளர்த்துக்கொண்டு போவது பாரமார்த்திக வாழ்க்கையின் நோக்கமன்று. சித்தத்தை ஒடுக்கி ஜீவாத்மன் பரமாத்மனோடு இணைந்திருப்பது சமயத்தின் முடிந்த குறிக்கோள்.

கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. அவைகளுள் தனித்திருக்கும் கட்டை விரல் பரமாத்மாவின் சின்னம். ஏனைய நான்கு விரல்களுள் சுட்டு விரல் ஜீவாத்மாவின் சின்னம். இந்த ஜீவாத்மா கால, தேச, வர்த்தமான மயமாயுள்ள பிரபஞ்சத்தோடு இணைந்து கிடக்கிறது. அந்தக் கால, தேச, வர்த்தமானத்துக்கு அடையாளங்களாயிருப்பவை நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல். ஜீவாத்மன் கால, தேச, வர்த்தமான மயமாயுள்ள பிரபஞ்சத்தினின்று தன்னை விடுவிததுக்கொண்டு பரமாத்மாவோடு இணங்கியிருத்தல் வேண்டும் என்பதே மெய்ச்சமயத்தின் சாரம் ஆகும். ஆக, தீவிர ஆத்மசாதகன் பரநாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்பது இக்கண்ணியின் உட் கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

8. நேர்மைக்காகத் துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் பரலோக ராஜ்யம் அவர்களுடையது ஆகும்.

பாரமார்த்த நெறியில் செல்கின்றவர்கள் துன்பப் படுத்தப்படுவார்கள். பிறரால் நிந்திக்கப்படுவார்கள். பரம்பொருளை முன்னிட்டுத் துன்பத்தையும், நிந்திக்கப் படுவதையும் ஏற்றுக்கொள்பவர்கள் பாக்கியவான்கள். இங்குத் துன்பமும் நிந்தனையும் வரும்பொழுது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு யாண்டும் இன்புற்று இருப்பவர்கள் பரமன் அருளை மிகுதியாகப் பெறுகின்றனர்கள். முன்பிருந்த பெரிய மகான்களெல்லாம் துன்பப்பட்டிருக்கிறார்கள்.

இரத்தினத்தின் மதிப்பைச் சாதாரணப் பண்டங்களைத் தெருவில் விற்கும் மனிதன் அறிய மாட்டான். இரத்தினத்தின் மதிப்பை இரத்தின வியாபாரிதான் அறிவான். உலகப்பற்றில் உழன்று கிடப்பவர்கள் ஆன்மீக வாழ்வின் மகிமையை அறியமாட்டார்கள். ஆன்மீக வாழ்வின் மகிமையை அறியாத மக்கள் ஆன்மீக வாழ்வில் செல்லும் சாதகனைக் கேலி செய்வார்கள். சிற்சில சமயங்களில் அவனை இழித்துப் பேசுவார்கள். இன்னும் சில சமயங்களில் அவனுக்கு ஊறும் செய்வார்கள். ஆனால் ஆன்மீக வாழ்வில் செல்லும் சாதகன் இவற்றை மனதில் வாங்கிக்கொள்ளக்கூடாது. அவன் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்குப் புத்தர் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். ஒரு சமயம் புத்தருடைய சீடர் புத்தரைப் பார்த்து "உலக மக்கள் என்னை ஏளனம் செய்கிறபொழுது நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?" என்று கேட்டார். அதற்குப் புத்தர் தம்மிடமிருந்த கனி ஒன்றைச் சிஷ்யரிடம் தந்தார். அவர் அதை வாங்கிக்கொண்டார். அவர் கனியை வாங்கிக் கொண்ட பிறகு கனி யாரிடம் இருக்கிறது என்று கேட்டார். சிஷ்யர் கனி தம்மிடம் இருப்பதாகக் கூறினர். சிஷ்யரிடமிருந்து கனியைப் புத்தர் வாங்கிக்கொண்டு, "இப்பொழுது நான் உனக்கு அக் கனியைத் தருவேன். நீ அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்றார். புத்தர் கனியைத் தந்தபொழுது சிஷ்யர் கனியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். "இப்பொழுது கனி யாரிடமிருக்கிறது?" என்று புத்தர் சிஷ்யரைக் கேட்டார். "கனி உங்களிடம்தான் இருக்கிறது" என்று சிஷ்யர் பகர்ந்தார். "நான் தந்த கனியை நீ ஏற்றுக்கொண்டபொழுது அது உன்னிடம் வந்துவிட்டது. நான் தந்த கனியை நீ ஏற்றுக்கொள்ள மறுத்தபொழுது அது என்னிடமே இருந்தது. அங்ஙனம் உலகத்தவர் உன்னைத் திட்டினால் அதை ஏற்றுக்கொண்டால்அதுஉன்னிடம்வந்துவிடும். நீ உள்ளத்தால் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால் திட்டினவரிடமே இருக்கும்" என்று புத்தர் அறிவுரை கூறினர். புத்தரின் அறிவுரைப்படி ஆத்ம சாதகன் உலகத்தவருடைய பேச்சுக்களை மனதில் வாங்கிக்கொள்ளாது இருந்து பழகவேண்டும்.

ஆத்ம சாதகனுடைய மனது யாண்டும் தெய்வச் சிந்தனையில் மூழ்கி இருக்கவேண்டும். தெய்வச் சிந்தனை வலுத்து வரும்பொழுது அனைத்தும் தெய்வ மயமாக அவனுக்குத் தென்படுகிறது. அவன் உள்ளம் ஐக்கிய உணர்வு உடையதாகிறது. உலக மக்களிடம் அவனுக்கு இரக்கம் ஏற்படுகிறது. தன்னைத் தூற்றுகிறவர்களையும், போற்றுகிறவர்களையும் சமநோக்கோடு பார்க்கின்றான். தன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்கு எதிர்த்துன்பம் விளைவிக்க வேண்டும் என்று அவன் எண்ணுவதில்லை. யாரையும் புகழவேண்டுமென்று அவன் நினைப்பதில்லை.

துறவி ஒருவர் இருந்தார். ஈசுவரன் சித்தப்படி யாவும் நிகழ்ந்து வருகின்றன என்பதில் அவருக்குப் பூரண விசுவாசம் உண்டு. அவர் வழியில் நடந்துபோய்க்கொண்டே இருந்தார். களைப்பு ஏற்பட்டதும் ஒரு மரத்தடியில் படுத்தார். சில செங்கற்களை அடுக்கி அவற்றின் மீது தலையை வைத்துப்படுத்திருந்தார். ஆற்றிலிருந்து ஜலம் எடுத்து வருவதற்காகப் பெண்மணிகள் சிலர் அவ்வழியே சென்றனர். அந்தச் சாது ஒரு திண்டு அமைத்து அதன்மீது தலையை வைத்துப் படுத்திருப்பதைப் பார்த்தனர். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்ட

தாவது: "இந்த இளஞ் சந்நியாசியைப் பாருங்கள். இளமையிலேயே அவர் துறவு பூண்டிருக்கிறார் எனினும் அவருக்குத் தலைக்குத் திண்டு வேண்டி இருக்கிறது. ஆகையால் செங்கற்களைத் தலையணையாக வைத்துக்கொண்டு இருக்கிறார்." இங்ஙனம் பகர்ந்து கொண்டே அவர்கள் சென்றார்கள். அந்தச் சாது தனக்குத் தானே பகர்ந்து கொண்டதாவது: "அவர்கள் சொன்னது சரிதானே. செங்கற்களை நான் தலைக்குவைத்திருப்பதுகுறித்து அவர்கள்குறை காண்கின்றார்கள். அவற்றை ஏன் நாம் வைத்திருக்கவேண்டும்?" இங்ஙனம் கூறிக்கொண்டே செங்கற்களைத் தூக்கி எட்ட எறிந்து விட்டுத் தலையைத் தரைமீது வைத்துப் படுத்திருந்தார். தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்பி வந்த பெண்கள் அந்தச் சாதுதலையைத் தரையின்மீது வைத்திருப்பதைப் பார்த்தார்கள். அப்பொழுது அவர்களுக்கிடையில் பகர்ந்து கொண்டதாவது: "தலையணை வைத்துப் படுத்திருக்கிறார் என்று நாம் சொன்னதும் அந்தச் சாதுவுக்குக் கோபம் வந்து விட்டது. அதனால் அந்தத் தலையணையை அப்புறப்படுத்தி விட்டார்." அவர்கள் கூற்றைக் கேட்டதும் அந்தச் சாது எண்ணிப் பார்த்ததாவது: "நான் தலையணையை வைத்திருந்தால் அது குற்றமுடையது என்று குறை கூறுகிறார்கள். தலையணையை எடுத்து விட்டாலும் அவர்கள் குறை கூறுகிறார்கள். மக்களை ஒருநாளும் நான் சந்தோஷப்படுத்தமுடியாது. கடவுளைத்தான் நான் சந்தோஷப்படுத்த முடியும்."

உலக மக்கள் பேர், புகழுக்காகக் கர்மம் புரிகின்றார்கள். புகழ் வரும்பொழுது மகிழ்ச்சி அடைகிறார்கள். இகழ்ச்சி வரும்பொழுது துன்பப்படுகிறார்கள். ஆனால் ஆத்மசாதகன் சித்தசுத்திக்காகக் கர்மம் புரிகின்றான். புகழையோ, கீர்த்தியையோ ஆத்மசாதகன் நாடுவதில்லை. தனக்கு அமைந்த கடமைகளை உலக நன்மையின் பொருட்டு ஆத்மசாதகன் செய்கின்றான். தனக்கு மதிப்பு வரவேண்டுமென்றோ, பிறரை மகிழ்விக்க வேண்டும் என்றோ ஆத்மசாதகன் கர்மம் செய்வதில்லை. தெய்வ காரியமாக ஆத்மசாதகன் காரியம் செய்கின்றான். அத்தகைய தெய்வ காரியத்தில் ஆத்மசாதகன் ஈடுபடும்பொழுது சிலசமயம் உலகமே அவனுக்கு எதிர்ப்பாக இருக்கலாம். அவன் அதைப் பொருட்படுத்தாது தனிமையாக இருந்து கடவுள் காரியத்தைச் செய்கின்றான். கடவுள் காரியத்தைச் செய்யும் பொழுது பிறர் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பது பற்றி அவன் கவலைப்படுவதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடவுள் பித்தேறியவராக இருந்தார். அவருடைய சில செயல்கள் மற்றவர்களுக்கு அதிருப்தியை உண்டு பண்ணின. தெய்வத்திற்காகப் பறித்த மலரைச் சில சமயங்களில் தம் தலையிலேயே சாத்திக்கொள்வார். தெய்வத்திற்கு நைவேத்தியம் படைக்கு முன்பு அதீத நிலையில் இருந்துகொண்டு நைவேத்தியத்தைத் தம் வாயிலும் போட்டுக்கொள்வார். அவருடைய செயல்களைப் பார்த்த மக்கள் அவரைப் பைத்தியக்காரர் என்று அழைத்தார்கள். தம்மைப் பற்றி மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. அவரிடம் அன்பர் ஒருவர் வந்து "நீங்கள் நடந்துகொள்வது சரியில்லை. உங்கள் செயலைப் பார்த்த மக்கள் பைத்தியக்காரர் என்று உங்களை அழைக்கிறார்கள்" என்று கூறினார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் விடை பகர்ந்ததாவது: "நான் ஒரு பைத்தியக்காரன், நீயும் ஒரு பைத்தியக்காரர். உலகத்தவர்களும் பைத்தியக்காரர்கள். நான் கடவுளைக் குறித்துப் பைத்தியம் உடையவனாக இருக்கிறேன். நீங்கள் உலகப் பைத்தியம் உடையவர்களாக இருக்கிறீர்கள். நான் கொண்டுள்ள பைத்தியம் உண்மைக்கருகில் என்னை எடுத்துச் செல்கிறது. நீங்கள் கொண்டுள்ள பைத்தியம் உண்மையைவிட்டு விலக்கி வெகுதூரத்திற்கப்பால் உங்களை இழுத்துச் செல்கிறது. நீங்கள் கொண்டுள்ள பைத்தியத்திற்கும், நான் கொண்டுள்ள பைத்தியத்திற்கும் இதுதான் வித்தியாசமாகும்." மனம் உயர்ந்த லட்சியத்தில் தீவிரமாகச் செல்லும்போது உலகத்தில் இருந்து வருகிற பழியையோ, துன்பத்தையோ அது பொருட்படுத்துவதில்லை. லட்சியத்திலேயே மனது தீவிரமாகச் செல்லுகிறது.

நம்மைப் பற்றிப் பிறர் குறையாகப் பேசும் பொழுதோ, பிறர் நமக்குத்துன்பம் விளைவிக்கும் பொழுதோ நம்மிடத்து அகங்காரம் தோன்றுகிறது. அந்த அகங்காரத்திற்கு வசப்பட்ட

வர்களாக ஆகிவிடுகின்றோம். அப்பொழுது கடவுளை மறந்து விடுகிறோம். அகங்காரத்திற்கு வசப்படும்பொழுது நமக்குத் தீங்கு செய்தவர்களுக்குப் பிரதி தீங்கு செய்ய வேண்டுமென்ற எண்ணம் நம் உள்ளத்தில் உண்டாகிறது. அந்த எண்ணத்திற்கு இடம் தருகிறபொழுது மற்றவர்களுக்கு நாம் தீங்கு செய்வதோடு நமக்கும் நாம் தீங்கு செய்து கொள்கின்றோம். மனதில் வெறுப்போ, கோபமோ உண்டாகும்பொழுது கடவுளைப் பற்றிய சிந்தனை மனதில் இருந்து மறைந்து விடுகிறது. அது நமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். கடவுள் நாட்டமுடைய சான்றோர்கள் பகர்ந்திருப்பதாவது: "நீ யாருக்கும் தீங்கு செய்யாதே. உனக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நலமே விளைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொள். தீங்கைத் தீங்காகப் பொருட்படுத்தாத நிலை உயர்ந்த நிலையாகும். அந்நிலையை நீ அடைகிற பொழுதுதான் தீங்கை நீ வெல்ல முடியும்."

எல்லாராலும் தீமையை முற்றும் எதிர்க்காது இருக்க முடியாது. அருள் உள்ளம் படைத்தவர்கள் கடவுள் காட்சி காண்கின்றார்கள். மனம் அத்தகைய உயர்நிலையை அடையாத பொழுது உலகத்தில் தீமை இருப்பதை அது காண்கிறது. தீமையைக் காண்கின்ற பொழுது அதை எதிர்த்துப் போராடுவது கடமையாகிறது. தீமையைக் காண்கின்றவன் அகிம்சை என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு கோழைத்தனத்திற்கு இடம் தந்து விடக்கூடாது. பலஹீனன் ஒருவன் தீமையை எதிர்க்கத் திறமை இல்லாது 'அகிம்சையைக் கடைப்பிடிக்கிறேன்' என்று சொல்வானனால் அவன் கோழையாகின்றான். வலக்கன்னத்தில் அடி விழுந்தால் இடக்கன்னத்தைத் திருப்பிக் காட்டுபவன் ஆத்மீகத்துறையில் பூரண நிலையை அடைந்தவனாக இருக்க வேண்டும். ஞானம் அடையப் பெற்று அனைத்துயிர்களிடத்தும் கடவுளைக் காண்பவன் அகிம்சாமூர்த்தி ஆகின்றான். அவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் அமைதியே குடிகொண்டவனாக இருக்கின்றான். போராட்டங்களுக்கும், குழப்பங்களுக்கும், எதிர்ப்புக்களுக்குமிடையில் பொறுமையையும் சாந்தத்தையும், அடக்கத்தையும் கடைப்பிடிப்பவன் அருளாளன் ஆகின்றான்.

அருளாளர்கள் சமய வரலாற்றில் எல்லாக் காலங்களிலும் இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். உயிர்களிடத்தில் பேரன்பும், பேரிரக்கமும் உடையவர்களாக அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தங்களுக்குத் துன்பம் செய்தவர்களை மன்னிக்கும் இயல்புடையவர்களாக இருந்து வருகிறார்கள். இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபொழுது "பிதாவே என்னைச் சிலுவையில் அறைகின்ற இவர்களை மன்னித்துவிடு. இவர்கள் அறியாமல் இதைச் செய்கிறார்கள்" என்று பிரார்த்தித்தார். அருளாளர்களுக்கு அவர் நல்லசான்று ஆகிறார். சமீபகாலத்தில் வாழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளுள்ளமே வடிவெடுத்தவராக வாழ்ந்து வந்தார். தமக்குத் தீங்கிழைத்தவர்களுக்குப் பிரதி தீங்கு செய்யாத பேருள்ளம் அவரிடம் இருந்தது என்பதை அவருடைய வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி விளக்குகிறது.

தட்சிணேசுவர ஆலயத்தில் பூஜாரி ஒருவர் இருந்தார். அவர் மதுர்பாபுவின்கீழ் வேலை செய்து வந்தார். மதுர்பாபு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் காட்டிய அன்பு அவருக்குப் பிடிக்கவில்லை. மதுர்பாபுவின் அன்புக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் உரியவராகிவிட்டால் அது, தான் அவரிடம் சில வசதிகளைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும் என்று எண்ணினர். எனவே ஸ்ரீராமகிருஷ்ணர்மீது அப்பூஜாரிக்குப் பொறாமை ஏற்பட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடமுள்ள வசீகரச் சக்தியைக்கொண்டு மதுர்பாபுவைத் தமக்குக் கட்டுப்பட்டு இருக்கும்படி வைத்திருக்கிறார் என்று அந்தப் பூஜாரி எண்ணினர். மதுர்பாபுவை வசப்படுத்தும் சித்து சக்தியைத் தமக்குக் காட்டித்தரும்படி ஸ்ரீராமகிருஷ்ணரைஅவர் பலதடவை வேண்டிக்கொண்டார். தமக்கு எந்தவிதமான சித்தும் தெரியாது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் பகர்ந்தார். ஆனால், அந்தப் பூஜாரி ராமகிருஷ்ணர் சொன்னதை நம்பவில்லை. ராமகிருஷ்ணர்மீது அவர் கொண்டிருந்த பொறாமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. ஒருநாள் ஸ்ரீராம கிருஷ்ணர் அறையில் தனிமையில் சமாதியில் மூழ்கியிருப்பதைப் பார்த்தார். அந்தப் பூஜாரி சந்தடியில்லாமல் அறைக்குள் நுழைந்து ஸ்ரீராம கிருஷ்ணரைக் காலால் உதைத்து இரத்தக்

காயம் ஏற்படும்படியாக அடித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்நிகழ்ச்சியைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அந்தப்பூஜாரி அவர்செய்த மற்றொரு குற்றத்துக்காக வெளியேற்றப்பட்டார். அவர் அங்கிருந்து போன பிறகு முன்பொரு சமயம் தம்மிடம் அவர் நடந்துகொண்ட விதத்தை மதுர்பாபுவிடம் சொல்லவேண்டிய நிலை வந்தது. மதுர்பாபு அதைக் கேட்டதும் கோபம் அடைந்தார். "நீங்கள் ஏன் இந்தச் செய்தியை முன்பே என்னிடம் கூறவில்லை? உங்களிடம் இந்தப் பூஜாரி அவ்வளவு மோசமாக நடந்துகொண்டதை நான் அறிந்திருந்தால் அவருடைய தலையை அறுத்து எறிந்திருப்பேன்" என்று மதுர்பாபு கூறினர். "நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் என்றுதான் நான் அந்த விஷயத்தை உங்களிடம் சொல்லாதிருந்தேன். அப்படிச் செய்தது அவருடைய குற்றமன்று. என்னிடம் உங்களை வசப்படுத்தும் சித்துத் தன்மை இருந்ததாக அவர் நம்பினர். என்னிடம் அத்தகைய சித்துத்தன்மை இல்லை என்று நான் உண்மையைக் கூறினேன். நான் அப்படிச் சொன்னது அவருக்குச் சமாதானம் ஆகவில்லை. அவரைச் சமாதானப் படுத்தாதது என் குற்றமாகும்." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுமொழி பகர்ந்தார். சான்றோர்கள் யாரிடமும் குற்றம் காண்பதில்லை. பிறரிடமுள்ள நன்மையைக் கண்டு அந்த நன்மையைப் பாராட்டுவதன் மூலம் அவர்களை முன்னுக்குக் கொண்டுவருகிறார்கள்.

தம்மைத் துன்புறுத்துகிறவர்களுக்கும் நலமே செய்கின்றவர்களுக்குக் கடவுள் இன்பம் என்னும் வெகுமதியை அளிக்கிறார் என்று இயேசுநாதர் பகர்கிறார். ஞானிகள் பேரின்பநிலையில் இருக்கின்றனர். உலக இன்ப துன்பங்கள் அவர்களுக்கு இல்லை. ஞானிகள் தங்களிடத்தில் கடவுளைக் காண்கிறார்கள். புறவுலகிலும் அவர்கள் கடவுளையே காண்கிறார்கள். தங்கள் உள்ளத்தில் கடவுள் சான்னித்தியத்தை உணர்கின்ற ஞானிகள் புறவுலகிலும் கடவுள் சான்னித்தியத்தைக் காண்கிறார்கள். எல்லாவுயிர்களிடத்திலும் கடவுள் இருப்பதைக் கண்டு எல்லாவுயிர்களையும் கடவுளாகக் கருதி வழிபடுகிறார்கள்.

பக்தர்கள் துன்பத்திற்கு உள்ளாகி இருப்பதை மக்கள் காண்கின்றார்கள். பக்தர்களை உலகத்தவர்கள் துன்புறுத்துகிறார்கள். ஆனால் பக்தர்கள் அத்துன்பத்தைத் துன்பமாக ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் மனம் யாண்டும் இறை சிந்தனையில் மூழ்கி இருப்பதால் உலகத்தவர்கள் அவர்களுக்குத் துன்பம் செய்தாலும் அவர்கள் மகிழ்வுற்று இருக்கின்றனர். பக்தர்களுடைய சரீரத்தையோ,மனத்தையோ உலகத்தவர்கள் துன்பத்துக்கு ஆளாக்குகின்றார்கள். பக்தர்கள் சரீர உணர்வைக் கடந்து மனதைத் தெய்வத்தினிடம் கொடுத்துவிடுவதால் சரீரத் துன்பத்தையும், மனத் துன்பத்தையும் கடந்து அப்பால் போய்விடுகின்றனர். ஹிரண்யகசிபு தன் மகன் பிரஹலாதனைக் கொடுமைப்படுத்துகின்றான். தந்தை செய்த கொடுமைகளை எல்லாம் பிரஹலாதன் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றான். கொடுமை செய்த தந்தையையோ மற்றவர்களையோ பிரஹலாதன் வெறுக்கவில்லை. தந்தைக்கும் நலனே வந்து அமைய வேண்டும் என்று பிரஹலாதன் பிரார்த்தித்துக்கொண்டான். திருநாவுக்கரசர் சமண மன்னன் செய்த துன்பங்களை எல்லாம் 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே' என்று அமைதியோடு ஏற்றுக்கொண்டார்.

சான்றோர்களுடைய வாழ்விலிருந்து மற்றவர்கள் நம்மைத் துன்பப்படுத்த முடியாது என்பதை நாம் அறிகிறோம். சரீர உணர்வு படைத்திருப்பது சரீரத் துன்பத்துக்குக் காரணமாகிறது. மனதின் புல்லிய ஆசைகளுக்கு அடிமைப்பட்டிருப்பது மனத் துன்பத்துக்குக் காரணமாகிறது. மனம் தெய்வத்தின்பால் செலுத்தப்படுமானல் மனத்துன்பம் நீங்குகிறது. சரீர உணர்வைக் கடந்து தெய்வீக உணர்வு மேலெழும்பொழுது சரீரத் துன்பங்களைக்கடந்துபோய்விடுகிறோம். சரீரம் துன்பத்துக்கு ஆளானபொழுது தாங்கள் அதில் கட்டுப்படாதவர்களாக எத்தனையோ மகான்கள் வாழ்ந்திருக்கிறார்கள். சதாசிவ பிரமேந்திரர் என்னும் பெரியார் ஒருவர் நெரூரில் சமாதி அடைந்துள்ளார். அவர் வாழ்ந்திருந்த காலத்தில் ஒருசமயம் சாலையில் போய்க்கொண்டிருந்த பொழுது சில முரடர்கள் அவருடைய ஒரு

கையை வெட்டினார்கள். கை வெட்டப்பட்டுக் கீழே விழுந்த பொழுது தன் சரீரத்திற்கு ஒன்றும் நேராதது போன்று அவர் போய்க்கொண்டிருந்தார். அவருடைய போக்கு அவர்களுக்கு ஆச்சர்யத்தைக்கொடுத்தது. இத்தகைய மகான்கள் எத்தனையோ பேர் வாழ்ந்திருக்கிறார்கள்.

உயிர்கள் எல்லாம் வாழ்ந்து வருகின்றன. உண்பதும், உறங்குவதும், இனப் பெருக்கம் செய்வதும் எல்லா உயிர்களுக்கும் பொதுவான செயல். சரீர சுக போகத்துக்காகவும், பொருளுக்காகவும், புகழுக்காகவும் வாழ்க்கை அமைந்திருக்கிறது என்று எண்ணுகின்றவர்களுக்குக் கடவுள் சாம்ராஜ்யம் கிட்டுவதில்லை. தர்மத்துக்காகவும், தெய்வநிலை அடைவதற்காகவும் வாழ்க்கை அமைந்திருக்கிறது என்று வாழ்க்கையை அறநெறிக்காக வாழ்பவர்கள் பாக்கியவான்கள் ஆகிறார்கள். அவர்கள் தர்மத்துக்காகவும், சத்தியத்துக்காகவும் துன்பப்படுத்தப்படுகிறார்கள். அத்துன்பங்களெல்லாம் அவர்களைக் கடவுள் சாம்ராஜ்யத்துக்கு எடுத்துச் செல்கின்றன. சத்தியத்துக்காக ஹரிச்சந்திரன் எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளானான். தர்மத்தினின்றும் பிசகாதிருப்பதற்காகப் பாண்டவர்கள் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தார்கள். பீஷ்மர் மரணப்படுக்கையில் இருந்தார். பாரதப்போர் முடிந்தபின் கிருஷ்ணன் பாண்டவர்களை அழைத்துககொண்டு பீஷ்மரிடம் சென்றார். பாண்டவர்களைப் பார்த்த பீஷ்மர் கண்ணீர் உகுத்தார். கண்ணீர் உகுப்பதற்குக் காரணம் யாது என்று கேட்டபொழுது "கண்ணா, உம்துணை இருந்தும் தர்மத்துக்காகப் பாண்டவர்கள் எவ்வளவு துயரப்பட்டார்கள்! உம் துணையைப் பெற்ற பாண்டவர்கள் இத்தகைய துயரப்பட்டதை நினைத்தால் உம் போக்கு விளங்காததாக இருக்கிறது. பாண்டவர்களுக்கே இத்தகைய துயரங்கள் என்றால் உம் துணை பெறாத உலக மக்கள் எத்தகைய துயரப்படுவார்கள் என்றுதான் நான் கண்ணீர் உகுக்கிறேன்" என்று பீஷ்மர் பதிலளித்தார்.

தர்மத்திற்காகவும், சத்தியத்திற்காகவும், தெய்வத்திற்காகவும் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்களுக்குப் பேரின்பநிலை உரியதாகப் போகிறது. அவர்கள் ஒப்பற்ற பேறு அடையப் பெற்றவர்களாகப் பேரானந்தப் பெருநிலையில் இருப்பார்கள் என்பதே இயேசுநாதர் பகர்ந்துள்ளதின் கருத்தாகும்.

பிரபஞ்ச வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் இருக்கின்றன. தினை அளவு இன்பம் பெறுவதற்குப் பனை அளவு துன்பத்தை ஈடு கொடுத்தாக வேண்டும். அப்படி ஈடுகொடுத்துப் பெறுகின்ற உலக இன்பம் நம் உள்ளத்தைப் பாழ்படுத்துகிறது. ஆனால், இத்தகைய இன்பத்தைப் பெறுவதில் உலக மக்கள் எவ்வளவு துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். கடவுள் நாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது உடலுக்கும், உள்ளத்துக்கும் வரும் துன்பத்தை ஏற்றுக்கொள்கின்ற அளவு மனபரிபாகம் ஏற்படுகிறது. "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது பக்தர்களுடைய கொள்கை. கடவுளைக் குறித்துப் பக்தர்களும், ஞானிகளும் மேற்கொள்கின்ற துன்பங்கள் அவர்களுக்குத் துன்பங்களாகத் தென்படுவதில்லை. கடவுள் அருள் அவர்களுக்கு வருகின்ற துன்பங்களையெல்லாம் துடைத்துத் தள்ளிவிடுகின்றது. உலகத் துயரத்தைப் போக்குவதற்கு அருள்நாட்டத்தில் துயரம்கொள்ளுதல் வேண்டும்.

மகான்கள் தங்களை மறந்து சகல உலகினையும் நிரந்தரமாகக் காத்து வரும் பரம்பொருளைத் துணையாகக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் நெஞ்சத்தில் கவலையின்றி இருக்கின்றார்கள். உலக மக்கள் நெஞ்சில் கவலையைத் தினந்தோறும் தோற்றுவித்து அஞ்சி உயிர் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். நெஞ்சில் கவலையையும், அச்சத்தையும் கொண்டிருப்பவர்கள் அறியாமை உடைய மக்களாவார்கள். பரம்பொருளிடம் தஞ்சம் புகுந்து பரம்பொருளின் துணையை நாடி எல்லா உயிர்களையும் எவர் காத்து வருகின்றாரோ அவர் தங்களையும் காப்பாற்றுவார் என்று மகான்கள் கவலையற்று இருக்கிறார்கள். இயேசுநாதர் போன்றவர்கள் அதற்கு எடுத்துக்காட்டு ஆவார்கள். பக்தியுடன் வாழ்ந்து பரம்பொருளிடம் ஒப்படைத்துக் கவலையற்று இருக்கும்படி இயேசுநாதர் மக்களுக்குப் போதிக்கின்றார். அப்போதனையைச்சரியாகப் புரிந்துகொண்டு ஒழுகுகின்றவர்கள் துன்பத்தை மீளுபவர்கள் ஆகின்றார்கள்.

அறத்தாறு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 20-1-75 அன்று மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[216ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயலை வைத்துக்கொண்டு அறம் இன்னதென்பதைத் தீர்மானிக்க முடியாது. செயலுக்கு அடிப்படையாக எத்தகைய மனப்பாங்கு அமைந்திருக்கிறது என்பதை வைத்துக்கொண்டுதான் அறம் இன்னதென்பதைத் தீர்மானிக்க முடியும். மனதைப் பண்படுத்துவது ஒரு நாளில் ஆகும் காரியம் அன்று. பல ஜன்மாந்திரங்களில் பெறும் வாழ்க்கைப் பயிற்சியின் விளைவாக மனப் பண்பாடு வந்து அமைகிறது. ஐம்பொறிகளையும், உடலையும் பெற்றிருப்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவாகிறது. மனிதர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை மனப்பான்மைகள் இருக்கும். துரியோதனன் போன்று மனம் படைத்தவர்களும் இருக்கின்றார்கள். யுதிஷ்டிரன் போன்று மனம் படைத்தவர்களும் இருக்கின்றார்கள். துரியோதனனுடைய மனநிலை ஒரு கோடி என்றால் யுதிஷ்டிரனுடைய மனநிலை மற்றொரு கோடி ஆகிறது. இவ்விருவர்களுடைய மனநிலைகளுக்கிடையில் மனிதர்களுடைய மனநிலைகள் அமைந்திருக்கின்றன. நம்முடைய மனதை நாம் எவ்வளவுக்கெவ்வளவு திருத்தி அமைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் மேன் மக்களாகின்றோம். மனம் கீழ் நிலைக்குச் செல்வதற்கு இடம் தருகின்றவளவு நாம் கீழ் மக்களாகின்றோம். நவீன மனிதன் கீழ்மையில் உழன்றுகொண்டு இருக்கின்றான். பிறருக்கு அடிமை வேலை செய்வதற்கே நவீன மனிதன் விரும்புகின்றான். மனம் திருந்தப்பெற்றவன் பிறருக்கு அடிமையாக விரும்பமாட்டான். அவனுக்குத் தன்னம்பிக்கை ஏராளமாக இருக்கும். தன் முயற்சியைக்கொண்டு தான் நன்றாக வாழமுடியும் என்ற உறுதி அவனிடத்தில் இருக்கும். இன்றைய கல்வித்திட்டம் ஆங்கிலேயர் உருவாக்கிய திட்டமாகும். அவர்கள் குமாஸ்தாக்களை உருவாக்குவதற்கு இன்றைய கல்வித்திட்டத்தைத் தயார் செய்தார்கள். மனிதனை மனிதனாகச் செய்வதற்கு அவர்கள் கல்வித்திட்டத்தை உருவாக்கவில்லை.

நம் தேசிய சரித்திரம் ஸ்ரீ இராமகிருஷ்ணர், விவேகானந்தர் மூலமாகப் புதுப்பிக்கப்படுகின்றது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் நவீனக் கல்வியில் நுழைந்து பார்த்தார். அது பக்தியைக் கெடுத்துவிடும் என்று அறிந்தார். உடனே அதைக் கற்கமாட்டேன் என்று மறுத்துவிட்டார். ஆனால் விவேகானந்தரோ நவீனக் கல்வியைப் பூர்த்தியாகப் பெற்றார். விவேகானந்தருக்கு அமைந்த பேராசிரியர்களெல்லாரும் அவருடைய அறிவுத் திறமையை மிகவும் பாராட்டினார்கள். கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு "இக்கல்வியில் ஒரு பயனும் இல்லை" என்பதை தாம் அறிந்துகொண்டதாகச் சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். கல்வித்துறையில் அன்றைக்கு இருந்த அதே பரிதாபகரமான நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. கல்வித்துறையில் படிப்படியாகக் கீழேபோய்க்கொண்டிருக்கிறோம். நாம் அப்படிக் கீழே போவதைக் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு இன்றைக்கு யாரும் இல்லை.

நம் உடல் பிண்டம் ஆகின்றது. இப்பிரபஞ்சம் அண்டம் ஆகின்றது. உடலில் தோட்டித் தொழில் செய்கின்ற அவயவங்கள் இருக்கின்றன. மேலான எண்ணங்களை எண்ணுதற்குரிய அவயவங்களும் உடலில் இருக்கின்றன. அரிய பெரிய செயல்களைச் செய்வதற்கான கருவிகள் உடலில் இருக்கின்றன. தோட்டித் தொழில் செய்கின்ற அவயவங்களை நாம் புறக்கணித்துவிட முடியுமா? நாம் அவைகளைப் புறக்கணிப்போமானால் நாம் ஒழிந்து போவோம். மூளைக்கு எவ்வளவு மதிப்பு தருகின்றோமோ அதே அளவு மதிப்பை மற்ற அவயவங்களுக்கும் தரலாம். அதுதான் சரியானமுறையாகும். பிண்டத்திலுள்ள கோட்பாடுதான் அண்டத்திலும் இருக்கிறது. அண்டம் சமுதாயம் ஆகின்றது. சமுதாயத்தில் எல்லாவிதமான கிருத்தியங்களும் செய்கின்ற மக்கள் இருப்பது அவசியமாகின்றது. உடல் உழைப்புச் செய்து சம்பாதிக்கின்ற மக்கள் இருக்கின்றார்கள். அவர்களைப் பாவம் செய்தவர்களென்று நாம் வியாக்கியானம் செய்தால்

வாழ்க்கைத் தத்துவத்தை நாம் சரியாக அறிந்து கொண்டவர்கள் அல்லர். தத்துவப்படி எல்லாச் செயல்களும் புனிதம் நிறைந்தவைகளாம். செயலில் எந்தக் குறைபாடும் இல்லை. குறை பாடு மனதில் இருக்கின்றது. இதை அறிந்து கொள்ளாது உடல் உழைப்பைக் கீழானது என்று எண்ணுகின்றவர்கள் இருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் சரீரத்தைக்கொண்டு உழைக்கத் தயாராக இல்லை. அரைகுறையான மனோ முயற்சி செய்து பட்டம் வாங்கிக் கொண்டு வேலை தேடி அலைகின்ற கூட்டம் பெருகிக்கொண்டே போகின்றது. நான் தனிப் பட்டமுறையில் உழைத்துச் சம்பாதிக்கமுடியும் என்ற சுயநம்பிக்கை இல்லை. சுயநம்பிக்கையை இழந்து வேலைக்கு அலையும் மக்களை உண்டு பண்ணுவதுதான் ஆங்கிலேயர்கள் வகுத்துத் தந்த கல்வித் திட்டமாகும். ஒரு மனிதன் சுயநம்பிக்கையை இழந்துவிடுவானாகில் அவன் அனைத்தையும் இழந்தவனாகின்றான். மேலும், ஆங்கிலேயர்கள் மேனாட்டு நாகரிகத்தை இந்துக்களிடையே புகுத்தினார்கள். மேனாட்டு நாகரிகத்தின் மூலமாகத்தான் விமோசனம் உண்டு என்ற மயக்கத்தை உண்டு பண்ணினார்கள். அந்த மயக்கம் இன்னும் மக்களிடையே இருந்து வருகிறது.உத்தியோகத்தைநாடிஅலைகின்றவர்கள் இருக்கிறார்கள். உத்தியோகம் என்பதற்குப் பொருள் "முயற்சி" என்பதாகும். உடலைக் கொண்டு உழைப்பவன் உண்மையாகக் கல்வி கற்றவனாகிறான்.பிறர் உத்தியோகம் கொடுக்காவிட்டால் எப்படி வாழ முடியும் என்று எண்ணுபவனும், உடல் உழைப்பைப் புறக்கணிப்பவனும் சுயநம்பிக்கையை இழந்தவர்களாகிறார்கள். சுயநம்பிக்கையை இழந்தவன் எல்லாம் இழந்தவனாகிறான். எல்லாத் தொழில்களும் சிறப்புக்குரியவைகளாம். எத்தொழிலை வேண்டுமானாலும் நாம் செய்யலாம். எத்தொழிலைச் செய்வதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். வேலையில்லாத்திண்டாட்டம் என்பது சுயநம்பிக்கையில்லாதவர்களிடம்தான் இருக்கும்.

பொதுவாக நம் நாட்டில் வேலைதேடி வருபவனைப் பார்த்து 'நீ என்ன கற்றிருக்கின்றாய்?' என்று கேள்வி கேட்போம். ஆனால், அமெரிக்க நாட்டில் வேலை தேடிவருபவனைப் பார்த்து 'உனக்குஎன்ன செய்யத்தெரியும்?' என்று கேட்பார்கள். செய்யத்தெரிந்த தொழிலைச் செய்தால் அதற்கேற்ற சன்மானம் கிடைக்கும். இங்கே என்ன கற்றிருக்கிறாய்!என்று கேட்பது ஏட்டுக் கல்வியைக் குறிப்பதாகும். ஏட்டுக் கல்வி காரியத்திற்கு உதவாது. நவீனக் கல்வி பிறரைச் சார்ந்திருக்கும்படி செய்கிறது. நவீனக் கல்வி பெற்றவர்கள் செயலுக்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

இக்காலத்தில் கல்வி கற்றிருக்கின்றவர்கள் எல்லாரும் யாசகம் பண்ணுகின்ற முறையில் வெளிநாடு சென்று வருகின்றார்கள். பொருள் சம்பாதிக்கின்றவர்களும் யாசகம் பண்ணுகிற முறையில் வெளிநாடு சென்றுவருகிறார்கள். ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் பரஸ்பரம் உதவி இருக்கவேண்டும். இந்தியா வெளிநாடுகளில் இருந்து பொருள் உதவிபெறவிரும்பினால் இந்தியா தன்னிடம் இருந்து வெளிநாடுகளுக்கு ஏதாகிலும் தரவேண்டும். அப்படி ஒன்றையும் தராது பெறுகின்றபொழுது நாம் யாசகம் பெறுபவர்கள் ஆகின்றோம். யாசகம் பெறுகின்றவர்கள் முன்னுக்கு வரமுடியாது. நம்மிடத்தில் ஆத்மீகப் பொக்கிஷம் வேண்டியவாறு இருக்கின்றது. நம்மிடத்துள்ள ஆத்மீகப் பொக்கிஷம் வேறு எங்கும் இல்லை. இதை நாம் மறந்துவிட்டோம். நம்மிடத்துள்ள ஆத்மீகப் பொக்கிஷத்தை மற்ற நாடுகளுக்கு வழங்கி மற்ற நாடுகளிலிருந்து பொருளைப் பெறலாம். நம்மிடத்துள்ள பாரமார்த்திகத் தத்துவங்களை யெல்லாம் உலகத்தவர் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். மனிதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரக்கூடிய வாழ்க்கைக் கோட்பாடுகள் நம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. விஞ்ஞானத்துறையில் மேல்நாட்டவர்கள் முன்னேற்றம் அடைந்து இருக்கின்ற அளவு நாம் இன்னும் அடையவில்லை. அத்துறையில் நாம் இன்னும் ஆரம்பநிலையில் இருக்கிறோம். அத்துறையில் நாம் மற்றவர்களோடு போட்டிபோட முடியாது. ஆனால் நாம் மற்ற நாடுகளுக்குத் தரும் கொடை ஒன்று இருக்கிறது. அதுதான் ஆத்மீகப் பொக்கிஷம்.

அமெரிக்காவில் இராமகிருஷ்ண மிஷன் பல இடங்களில் இருக்கிறது. அந்த மிஷனில் சேர்ந்து இருந்த அமெரிக்கர் ஒருவர் இந்தியாவுக்கு வந்து இருந்தார். அவர் காஷ்மீரத்தில்

இருந்து கன்யாகுமரிவரையில் பிரயாணம் செய்தார். இந்தியாவைப்பற்றி அவருடைய அபிப்ராயத்தைக் கேட்டபொழுது அவர் பகர்ந்ததாவது: "அழுக்கு நிறைந்த, வறுமை சூழ்ந்த நிலையை இந்தியாவில் நான் எங்கும்பார்த்தேன். தொழில் நுட்பத்தில் இந்தியா இன்னும் பிற்போக்கான நிலையில் இருப்பதைப் பார்த்தேன். ஆனல் இந்தியாவில் அமைதியைப் பார்த்தேன். கூலி வேலை செய்பவன் முகத்திலும், பணக்காரன் முகத்திலும் அமைதி நிலவுவதைக் கண்டேன். எங்கள் நாட்டில் பரபரப்பும், அமைதியின்மையும் எங்கும் இருப்பதைக் காணலாம். ஆனல் இந்தியாவில் எங்கும் அமைதியைக் கண்டேன். இத்தகைய சாந்தத்தை எங்கள் நாட்டில் எவ்வளவு கொடுத்தாலும் பெறமுடியாது. இந்தியா உலகுக்குக்கொடுக்கும் கொடை அமைதிதான்".

அத்தகைய அமைதிக்கு அடிப்படைக் காரணம் நம்மிடத்துள்ள பாரமார்த்திக இயல்பே ஆகும். மக்கள் தங்களுக்குப் பொருள் கிடைக்காதபொழுது கடவுள் நமக்கு அளந்த படி இவ்வளவுதான் என்று எண்ணி அமைதியுற்றிருக்கிருர்கள். மழை பெய்யாது பஞ்சம் ஏற்பட்டால் கடவுளுடைய திருவுள்ளம் என்று பட்டினி கிடப்பார்கள். ஆனல் மேனட்டில் இத்தகைய கஷ்டங்கள் ஏற்படும்பொழுது மக்கள் புரட்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டு ஒழிந்து போவார்கள்.

மனதை அடக்கி ஆண்டு அமைதியுற்று இருக்கும் நிலை இந்தியாவினுடையதாகும். நம் நாட்டுக் கல்வி அதற்கு வழி வகுக்கவேண்டும். கல்வித்துறையில் ஈடுபட்டு இருப்பவர்கள் இன்று அதை மறந்து செயலாற்றி வருகிருர்கள். ஆகையினல் நம் நாட்டிலும் எங்கும் குழப்பமும், பரபரப்பும் ஏற்படுகின்ற நிலை உருவாகி வருகிறது. நம் நாட்டின் பழைய பண்பாகிய அமைதியைக் கடைப்பிடித்துத் தொழில் நுணுக்கத்தையும் அறிந்து செயல் படுவோமானல் நாம் நிறை மனிதர்கள் ஆவோம். நாம் நிறைமனிதர்கள் ஆவதற்குச் சுவாமி விவேகானந்தர் வழி வகுத்துக் கொடுத்திருக்கிருர்.

பழைய பண்பாட்டின்படி செயலில் உயர்வு, தாழ்வு இல்லை. எல்லாச் செயல்களும் அன்னை பராசக்தியினுடைய செயல்களாகும். ஆகையால், மனிதன் எச்செயலை வேண்டுமானலும் செய்யலாம். நாம் செய்யும் செயலில் அழுக்கில்லை. மனதில்தான் அழுக்கிருக்கிறது என்பதற்கு மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ளலாம்.

காட்டில் ஒரு முனிவர் தவம்செய்துகொண்டிருந்தார். ஒருநாள் தியானத்தை முடித்த பிறகு அமைதியாக அமர்ந்து இருந்தார். அவர் அமர்ந்திருந்த மரத்தின் கிளையில் அவருடைய தலைக்கு மேல் கொக்கு ஒன்று அமர்ந்திருந்தது. அது மலம் கழிந்தபொழுது அம் மலம் அவர் தோளின்மேல் விழுந்துவிட்டது. கோபத்தோடு அவர் அக்கொக்கை உற்றுப் பார்த்தார். அவருடைய கோபக் கனல் கொக்கை எரித்துவிட்டது. அவர் தவத்தினுடைய சக்தி அத்தகையதாக இருந்தது. அச்சக்தி தனக்கிருப்பதை அறிந்ததும் அவருக்குக் கொஞ்சம் செருக்கு வந்துவிட்டது. மனிதனுக்குச் செருக்கு பொல்லாதது. அத்தவசி பொல்லாத செருக்கைத் தன்னிடம்அனுமதித்து விட்டார். செருக்குடன் கிராமப்புறத்திற்கு வந்தார். தமக்கு வேண்டிய உணவுக்காக ஒரு வீட்டின்முன் நின்று 'பிக்ஷாந்தேஹி' என்றுகூறினர். அவ்வீட்டிற்குள் இருந்து 'சற்றுப்பொறுங்கள்' என்ற பதில் வந்தது. தவசி சற்றுப் பொறுத்திருந்தார். சிறிதுநேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு "என் தவம் எவ்வளவு பெரியது. அத்தவத்தின் மகிமையை இம்மாது அறியாதவளாகஇருக்கின்ருள்" என்று எண்ணிச் செருக்கடைந்தார். அவர் அப்படி எண்ணியதும் வீட்டிற்குள் இருந்து "பெரியோய், என்னைக் கொக்கு என்று நினைத்து விடாதீர்கள். நான் முக்கியமான பணிவிடையில் ஈடுபட்டிருக்கின்றேன். அப்பணிவிடை முடியும் வரையில் நீங்கள் பொறுத்திருக்கவேண்டும்" என்று அம் மாது கேட்டுக் கொண்டாள். அப்பொழுது அந்தத் தவசி காட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி இந்த அம்மையாருக்கு எப்படித் தெரியும்? என்று எண்ணியவராகப் பொறுமையுடன் காத்திருந்தார். பணிவிடை முடிந்த பிறகு பிக்ஷை தருவதற்கு அம்மாது வெளியே வந்தாள். "பெரியோய், என் கணவர் நோய்வாய்ப்பட்டு இருந்தார்.

நான் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தேன். ஆகையால், தங்களுக்குப் பிக்ஷை கொண்டுவரக் காலதாமதம் ஆகிவிட்டது. காலதாமதத்தை முன்னிட்டுத் தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் இப் பிக்ஷையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறித் தாம் கொண்டு வந்த பிக்ஷையை அச் சாதுவிற்கு அளித்தாள். "அம்மா, நீங்கள் கொக்கைப்பற்றிக் கூறினீர்கள். கொக்கு சமாச்சாரம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சாது கேட்டார். "தங்களைப்போன்று நான் சாஸ்திரம் படித்தவள் அல்லள். தவமும் செய்தவள் அல்லள். கன்னிப் பெண்ணாக இருந்தபொழுது தாய் தந்தையர்களைத் தெய்வமாகப் பாவித்து அவர்களுக்குப் பணிவிடை பண்ணினேன். மணமான பிறகு கணவரைத் தெய்வமாகப் பாவித்துப் பணிவிடை பண்ணி வருகிறேன். அதன் விளைவாக என் மனம் தூயது ஆயிற்று. ஆகையால் நீங்கள் எண்ணிய எண்ணம் என் மனதில் பிரதிபலித்தது. அதை நான் உங்களிடம் சொன்னேன். கொக்கைப்பற்றிய விஷயம் எனக்கு இம்முறையில் வந்து சேர்ந்தது. அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது. மேலும் நீங்கள் அரிய பெரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அருகிலுள்ள ஊரில் கசாப்புக் கடைக்காரர் ஒருவர் இருக்கின்றார். அவரிடம் போனால் மேலும் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம்" என்று அம்மாது கூறினாள்.

பிக்ஷையை வாங்கி அருந்தின அச்சாது, "கசாப்புக் கடைக்காரரிடம் போகும்படி இந்த மாது கூறுகிறாள். கசாப்புக் கடைக்காரரிடம் போவது பொருந்துமா" என்று எண்ணினார். இந்த மாதுவிடம் அதிசயத்தைக் கண்டோம். மேலும் அதிசயங்கள் அவரிடம் இருக்கலாம். எனவே, அவரைப் போய்ப் பார்ப்பது நல்லது என்று எண்ணி அவரிடம் சென்றார்.

முகத்தில் மீசையுடன் மாமிசத்தை வெட்டித் துண்டுபோட்டு விறுவிறுப்பாக வியாபாரம் செய்துகொண்டிருக்கும் கசாப்புக் கடைக்காரரைச் சாது பார்த்தார். அக்கசாப்புக் கடைக்காரர் அந்தச் சாதுவைப் பார்த்ததும் 'வாருங்கள், உங்களை அனுப்பி வைத்தவர் ஒரு பெண்மணி அல்லவா! சற்றுப் பொறுங்கள்' என்றார். அவர் சொல்லுக்குச் செவிசாய்த்தவராகச் சாது பேசாமல் நின்று தொழிலை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். வியாபாரம் நேர்மையான முறையில் நடந்தது. வியாபாரம் முடிந்ததும் பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு கசாப்புக் கடைக்காரர் சாதுவை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றார். வீட்டுத் திண்ணையில் சாதுவை அமரச் செய்துவிட்டு வீட்டுக்குள் சென்று வயதான பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை எல்லாம் முறையாகச் செய்தார். அதன் பிறகு, சாதுவைப் பார்த்துத் தாங்கள் பிக்ஷை எடுத்துக்கொள்ளலாம் என்றார். பிக்ஷை ஏற்கனவே ஆகிவிட்டது என்று சாது பகர்ந்தார். பிறகு சாதுவோடு அக்கசாப்புக் கடைக்காரர் உரையாடினார். "நான் கசாப்புத் தொழிலைத் தேடிச் செல்லவில்லை. அது குலத்தொழிலாக எனக்கு வந்து அமைந்தது. என் தந்தையிடம் இருந்து நான் அத்தொழிலைக் கற்றுக்கொண்டேன். கசாப்புத் தொழில் மட்டமானது என்று நான் கருதவில்லை. எந்தத் தொழில் செய்தாலும் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு நான் அதைச் செய்கின்றேன். சுயநலம் கருதாது என் தொழிலை நான் செய்து வருகிறேன். ஆகையால், தொழிலும் நன்றாக நடக்கிறது, நானும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். வாழ்க்கைத் தத்துவங்கள் எல்லாம் எனக்குத் தெளிவாக விளங்குகின்றன. அழுக்கு மனதில் இருக்கிறது; தொழிலில் இல்லை." இங்ஙனம் கசாப்புக் கடைக்காரர் அரிய, பெரிய விஷயங்களைச் சாதுவோடு பேசினார். மேலும் வேதாந்த விஷயங்கள் பலவற்றை அவருக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

கசாப்புத் தொழில் செய்துவந்த மனிதன் நிறைஞானி ஆனான். இதுதான் இந்தியப் பண்பு. இந்தியப் பண்பு பிரகாரம் தொழிலில் பெரியது சிறியது இல்லை. எத்தொழிலைச் செய்தாலும் அது சமுதாயத்திற்குப் பயன்படுகிற தொழிலாக இருந்தால் அதன் மூலம் சுயநலத்தைத் துடைத்துவிட்டு மேன்மை அடையலாம் என்பதுதான் இந்தியப் பண்பாகும். "Work is worship" என்பது நம் தேசிய லட்சியம். எப் பணிவிடை செய்தாலும் அப் பணிவிடையின் மூலம் கடவுள் தொண்டன்

என்ற மனப்பான்மையையும், சமுதாயப் பணியாளன் என்ற மனப்பான்மையையும் வளர்க்க வேண்டும். இந்த மனப்பான்மையைவளர்க்கின்றவன் கற்றவன் ஆகின்ருன்.அதிகம்படித்தவன் என்றும் உடல் உழைப்புச் செய்யக்கூடாது என்றும் எண்ணி அடிமை வேலைக்குக் காத்துக் கொண்டு இருப்பவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகின்ருன். வேலை செய்யாதிருக்கும் அளவு சமுதாயத்திற்குச் சுமையாகிறேன் என்று எண்ணிப் பார்க்காதவன் கற்றவன் ஆகமாட்டான்.

மாணுக்கனுக இருக்கும் பொழுதே பணிவிடை செய்ய ஆரம்பித்து விடவேண்டும். ஐந்து வயது வரையிலும் குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும். ஐந்து வயதிற்குப் பிறகு குழந்தைகள் பணிவிடையில் ஈடுபடவேண்டும். ஐந்து வயதிற்குப் பின் சிறுவர், சிறுமியர் பள்ளிக்கூடத்துக்குச் செல்கின்றனர். கல்வி கற்பதற்கு இடையில் அவர்கள் தாய், தந்தையர்களுக்கும், கல்வி ஸ்தாபனத்திற்கும், பொது மக்களுக்கும் பணிவிடை செய்து பழக வேண்டும். அப்படிச் செய்கின்றவர்கள்தாம் நல்ல குடிமக்கள் ஆகின்ருர்கள். பிரான்சு நாட்டில் கோடை விடுமுறையின்போது மாணுக்கர்கள் முப்பதுமைல்தூரம் இரயில்பாதை அமைத்தார்கள். ஜெர்மனியில் அறுவடை சமயம் வரும்பொழுது மாணுக்கர்கள் கல்லூரியை விட்டு அறுவடைக்குச் செல்கின்ருர்கள். இங்ஙனம் கல்வியும், தொழிலும் மாறி மாறி அமையும் பொழுதுதான் மாணுக்கர்கள் வாழ்க்கைக்கு ஆயத்தமாகிருர்கள். நம் மனப்பான்மை அந்தப் போக்கில் மாறி அமையவேண்டும். கல்வி கற்பதற்கிடையில் ஒருவன் எந்தத் தொழில் செய்வதற்கும் ஆயத்தமாக இருப்பானுனல் அவனுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வராது.இன்றைக்குச் சில வேலைகளுக்கு ஆளில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அதே வேளையில் பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. உடல் உழைப்பை ஒதுக்குகின்றவர்களுக்குத்தான் வேலையில்லாப் பிரச்சினை இருக்கிறது. உடல் உழைப்பை வழிபாடாகக் கருதி அதைச் செய்ய ஆயத்தமாக இருப்பவர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினையைப்பற்றிக் கவலையில்லை. ஆகவே எந்த வேலையையும் வழிபாடாகக் கருதுகின்றபொழுதுதான் நாம் முறையாகக் கல்வி கற்றவர் ஆகின்ருேம். கசாப்புக்கடைக்காரர் மூலம் இந்தச் சிறந்த கோட்பாடு விளக்கப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை அறிந்துகொண்டால் நாம் வீண் பொழுது போக்கமாட்டோம். நம் ஜீவிதம் ஏதாவது ஒரு விதத்தில் உலகுக்குப் பயன்படவேண்டுமென்ற மனப்பான்மை நமக்கு வந்து விட்டால் நமக்கு வழி பிறக்கிறது. இன்றைக்கு லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிருர்கள் என்ருல் அது முறைதவறிய கல்விக்கு எடுத்துக் காட்டாகின்றது. புறத்தே பார்த்து ஒரு செயலை உயர்ந்தது என்ருே, தாழ்ந்தது என்ருே முடிவுகட்டக் கூடாது.செயலுக்கு அடிப்படையாக இருக்கும் நோக்கத்தை வைத்துக்கொண்டுதான் உயர்வு, தாழ்வை முடிவுகட்டவேண்டும். சுயநல மற்ற நேர்மையான மனப்பான்மையோடு எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலை நாம் பாராட்டவேண்டும். சோம்பலுக்கு ஒரு நாளும் இடம்தரக்கூடாது. தூய மனதுடன் உலக நலனுக்காக என்று ஈசுவர ஆராதனையாகச் செயல் புரியத் தெரிந்துகொண்டவன் வாழ்வாங்கு வாழத்தெரிந்தவனுகின்ருன்.

மனிதன் தன் செயல் மூலமாகத் தன் பண்பை விளக்குகிருன். சரீரத்தில் உள்ள அவயவங்களெல்லாம் சரீர நலனுக்காகப் பாடுபடுகின்றன. மக்கள் யாவரும் சமுதாயத்தினுடைய அங்கங்கள் ஆகின்ருர்கள். சமுதாய நலனுக்காக அவர்கள் பாடுபடவேண்டும். செய்கின்ற செயலைச் சமுதாய நலனுக்கென்று செய்பவன் நல்ல குடிமகன் ஆகின்ருன்.

கர்மத்தின் பலன் மனமாசை நீக்குவதாகும். கர்மம் செய்வதன் மூலம் நம் மனம் தூயது ஆகுமானுல் அக்கர்மத்தின் மூலம் செய்தவனும் பயன் அடைகின்ருன்,சமுதாயமும் பயன் அடைகிறது. மனம் தூய்மை ஆக ஆக நாம் பரத்தை அடைவதற்குத்தகுதியுடையவர்களாகின்ருேம். உலகப் புகழ் பெறுவது இந்தியப் பண்பன்று; பாரமார்த்திகப் பெற்றியைப் பெறுவதே இந்தியப் பண்பாகும்.

உலக நன்மையின்பொருட்டு இந்தியா செய்ய வேண்டிய ஒரு பெரிய காரியமுள்ளது. பிறர்க்கு உதவி செய்வதன் மூலம் ஒருவன் தன்னை மேல்

நிலைக்கு உயர்த்திக் கொள்கின்ருன். பிறர்க்கு உதவ மறுக்கின்றவன் தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்கின்ருன். பிறர்க்கு மூன்று விதங்களில் உதவி செய்யலாம். அன்னதானம், அறிவுதானம், ஆத்மதானம் என அம்மூன்றும் பெயர்கள் பெறுகின்றன. தொழிற்சாலைகள் அமைப்பதும், சரீர சம்ரக்ஷணைக்கு வேண்டிய உதவி செய்வதும் அன்னதானப் பகுதியில் அடங்குகின்றன. வாழ்க்கையில் பகுத்தறிவு உடையவனுக ஒருவனை ஆக்குவதற்கும், நல்லது எது, கெட்டது எது என்பதனைப் பாகுபடுத்துகின்ற விவேகமுடையவனுக ஒருவனை ஆக்குவதற்கும் உதவுவது அறிவுதானம் ஆகின்றது. பரம்பொருளுக்கும், நமக்கும் உள்ள இணக்கத்தை அறிந்தும் பிரபஞ்சம் முழுவதும் பரம்பொருளின் தோற்றம் என்ற பெரிய தத்துவத்தை அறிந்தும் பெருவாழ்வு வாழ்கின்ற பொழுது நாம் உலகுக்கு ஆத்மதானம் செய்கின்றவர்கள் ஆகின்ருேம்.

இம்மூன்றனுள் ஏதேனும் ஒரு உதவியை உலகுக்குக் கொடையாகக் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும். நம்முடைய ஜீவிதத்தைக் கொடையாக வழங்குகின்ற அளவுதான் நாம் பெருவாழ்வு வாழ்ந்தவர்களாகிருேம்.நம்வாழ்வு அலாதியாக நமக்காக அமைந்ததன்று; அது உலகுக்காக அமைந்ததாகும். இவ்வுண்மையை அறிந்து ஒவ்வொருவரும் அதைச் செயலுக்குக் கொண்டு வருகிறபொழுது நாடு பொன்னுடாகத் திருந்தி அமையும். பண்டைய நாகரிகம் மீண்டும் நாட்டில் சிறப்புற்று விளங்கும். நம் நாடு உலகத்தவர்களுக்கு ஆத்மதானம் செய்யும் நிலையில் இருக்கிறது என்பதை அறியாத நிலையில் நம் மக்கள் இருக்கிருர்கள். ஆத்மதானம் செய்கிற நிலைக்கு நம்மை ஆயத்தப்படுத்தி வெளிநாட்டவரிடமிருந்து பொருளாதாரம், தொழில் முதலியவற்றில் உதவிபெறுவோமானுல் அது நம் நாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரியும். உலக முழுவதும் ஒரே குடும்பம் என்ற நிலைக்கு நவீனச் சூழ்நிலை போய்க்கொண்டிருக்கிறது. உலகக் குடும்பத்துக்கு இந்தியா ஆத்மீகத்துறையில் ஆச்சாரிய ஸ்தானம் பெறும் நிலையில் இருக்கிறது. ஆத்மீகச் செல்வத்தை வளர்ப்பதில் இந்திய மக்கள் தீவிரமாகப் பாடுபடவேண்டும். ஆத்மீகத்தை உலகுக்கு வழங்குகின்ற பரிபாகமுடைய மக்களாக இந்தியர்கள் தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும். நம் தேசிய பொக்கிஷமாகிய ஆத்மீகம் என்னும் மேலான பண்பை ஏற்று அதை நன்ருக ஜீரணம்செய்து நம் நாட்டுக்குரிய நல்லசெல்வர்கள், செல்விகள் ஆக நம்மை ஆயத்தப்படுத்துவோமாக.

ஆத்மீகப்பண்பை வளர்க்கும் பழக்கவழக்கங்களில் நாம் ஊறி வரவேண்டும். லௌகீக மனப்பான்மையை விட்டுவிட்டு, தெய்வீக மனப்பான்மையை வளர்ப்பதுதான் அறம் எனப்படும். கூலிக்கு வேலை செய்கிறேன் என்ற உணர்ச்சியோடு ஒருவன் ஒருவேலையைச் செய்தால் அது லௌகீகப் புத்தியை வளர்க்கும். தனக்கு அமைந்த வேலையைக் கடவுள் பணியென்று எண்ணி ஒருவன் அதைச் செய்வானுனல் தெய்வீக மனப்பான்மை அவனிடம் வளர்கிறது. பெற்ருேர்களைக் குழந்தைகள் தாய் தந்தையர்கள் என்ற நோக்கத்தில் மானுட வடிவங்களாகக் கருதுவார்களானுல் அது அவர்களிடத்தில் லௌகீகப் புத்தியை வளர்க்கிறது. தாய், தந்தையர்களைத் தெய்வ வடிவங்களாகக் கருதி குழந்தைகள் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வார்களானுல் அது அவர்களிடத்தில் தெய்வீகத் தன்மையை வளர்க்கிறது. அஃதே போன்று கணவன், மனைவியைப் பெண் வடிவத்தில் காணுது பராசக்தி வடிவத்தில் காண்பானுனல் அது அவனிடம் தெய்வீகத் தன்மையை வளர்க்கிறது. மனைவி கணவனை ஆண் வடிவத்தில் காணுது சிவ சொரூபமாகக் காண்பாளானுல் அது அவளிடத்தில் தெய்வீகத் தன்மையை வளர்க்கிறது. கணவன் பராசக்தி சொரூபத்தில் மனைவியை வைத்து அவளுக்குத் தொண்டு புரிவானுனல் அது "அறத்தாறு" ஆகும். மனைவி கணவனைச் சிவசொரூபமாகப்பாவித்து அவனுக்குத் தொண்டு புரிவாளானுல் அது "அறத்தாறு" ஆகும். இங்ஙனம் குழந்தைகள் பெற்ருேர்களைத் தெய்வமாகப் பாவித்து அவர்களுக்குத் தொண்டு புரிவார்களானுல் அது "அறத்தாறு" ஆகும். ஒருவர் மற்ருெருவரைத் தெய்வமாகப் பாவித்துச் செய்யும் தொண்டு அனைத்தும் அறத்தாறு ஆகும். மனத்தைத் திருத்தி அமைப்பது இந்தியப் பண்பாகும். மனம் திருந்தி அமைகின்ற அளவு அறப்பணி நிகழ்கின்றது.

(தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-143

830. प्रकटा कृती ப்ரகடா கிருதீ — எல்லார்க்கும் தெளிவுபட விளங்கும் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்திலிருக்கும் அனைத்துமாய் அம்பிகை தோற்றத்திற்கு வந்திருக்கிறாள். அப்படியிருப்பதால் எல்லாருடைய காட்சிக்கும் எட்டக்கூடியவளாக அம்பிகை இலங்குகின்றாள். அவளைக் காணாதார் உலகில் யாருமில்லை. ஸ்தாவர ஜங்கமமாயுள்ள ஜீவர்களனைவரும் அம்பிகையின் சந்நிதானத்திலேயே இருந்து வருகிறார்கள். அம்பிகையினால் பேணப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறார்கள். ஸ்தாவரங்களாயிருக்கும் ஜீவர்களுக்கு ஸ்பரிசம் அல்லது ஊறு என்னும் ஒரே இந்திரியந்தான் அமைந்திருக்கிறது. இந்த ஓர் இந்திரியத்தைக்கொண்டே இந்தச் சிற்றுயிர்கள் அம்பிகையின் பாங்குகளையும் ஆதரவையும் நன்கு அறிந்து வருகின்றன. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். வரிசையாகப் பல செடிகளை நட்டு அவைகளுக்கு மூன்று பக்கம் வெளிச்சம் வாராவண்ணம் மறைப்புக்கட்டிவிட்டால் அத்தனை செடிகளும் வெளிச்சம் வருகிற ஒரு பக்கத்துக்கே கிளைகளை அனுப்பும். ஸ்பரிசத்தின் வாயிலாக வெளிச்சத்தை அவைகள் அறிந்து கொள்கின்றன. தங்கள் வாழ்வுக்கு இன்றியமையாத வெளிச்சத்தை நன்கு பயன்படுத்த அவைகள் முயலுகின்றன. அவைகள் வெளிச்சத்தை அறிந்துகொள்ளுவது அன்னையின் சாந்நித்தியத்தை அறிந்துகொள்ளுதற்கு நிகராம். இங்ஙனம் அண்டங்கள் எங்குமுள்ள உயிர் வகைகளனைத்தும் அதன் அதன் இயல்புக்கேற்ப சூழ்நிலைகளையும் வாழ்க்கை வசதிகளையும் நன்கு அறிந்துகொள்கின்றன. அதற்கேற்றவாறு தங்களுடைய வாழ்க்கையையும் அவைகள் இனிது அமைத்து வைக்கின்றன. தாயின் பராமரிப்பைக் குழந்தை அறிந்துகொள்ளுதற்கு நிகராக அனந்தங்கோடி ஜீவ வகைகள் யாவும் அன்னை பராசக்தியின் சாந்நித்தியத்தை நன்கு உணர்ந்து அந்தச் சாந்நித்தியத்திலேயே வளர்ந்து அவைகள் மேன்மையுறுவது அன்னையின் மகிமையாம். பராசக்தியிடத்துள்ள இந்த மேன்மையை இந்த நாமம் விளக்குகிறது.

831. प्राणेश्वरी ப்ராணேச்வரீ — இந்திரியங்களுக்கெல்லாம் அதிஷ்டான தேவதையாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிராணன் அல்லது உயிர்த்தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு ஒவ்வொரு ஜீவனும் தனக்கு அமைந்துள்ள அந்தக் கரணங்களைப் பயன் படுத்தி வருகிறது. அந்தக்கரணங்கள் நன்கு இயங்குவதற்கு அம்பிகை வல்லமை தந்தருளுகின்றாள். அத்தகைய வல்லமைக்குப் பிராணன் என்று பெயர். உயிர் வகைகள் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களிடத்திலிருந்து வாழ்க்கைக்கு இன்றியமையாத வல்லமையைப் பெற்று வருகின்றன. நிலத்தினின்று அன்னத்தையும், நீரினின்று பானத்தையும், நெருப்பினின்று கதகதப்பையும், காற்றினின்று மூச்சையும் வாங்கி உயிர்வகைகள் விருத்தியடைந்து வருகின்றன. இத்தகைய உயிர்த்தத்துவங்களை அன்னை வழங்கி வருவதால் அவள் பராணேஸ்வரீ எனப் பகரப் பெறுகிறாள். இனி, இந்தப் பிராணனில் முக்கியப் பிராணன் என்றும், பஞ்சப் பிராணன் என்றும், உப பஞ்சப் பிராணன் என்றும் பிரிவுகள் இருக்கின்றன. இவை யாவுக்கும் அதிபதியாக இருப்பவள் அன்னை பராசக்தி. ஆதலால் அவள் ப்ராணேஸ்வரீ என்னும் பொருத்தமான நாமத்தைப் பெற்றிருக்கிறாள். அவளுடைய சாந்நித்தியத்தால் அன்றி எந்த உயிரும் நிலைபெற்றிருக்க மாட்டாது.

832. प्राणदात्री ப்ராணதாத்ரீ — உயிரை வழங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உயிருடையது எது? உயிரற்றது எது? என்பதை ஆராய்ந்து பார்த்து நாம் அறிந்து கொள்கிறோம். மக்களுள் பத்துப்பேர் பேச்சற்று அசைவற்றுப் போர்க்களத்தில் கிடக்கின்றனர். அவர்கள் போரில் மடிந்துபோய்விட்டார்களா இன்னும் உயிர்பிடித்திருக்கிறார்களா என்பதைச் சோதித்துப் பார்த்துக் கண்டுபிடிக்

கலாம். பிரேதமாகப் போனவர்களின் சரீரத்தினின்று கதகதப்புப் போய்விடும். மூச்சு நின்றுவிடும். இந்த அறிகுறிகளிலிருந்து உயிர் போய்விட்டது என்று யூகிக்கிறோம். பேச்சற்று இருந்தாலும் மயங்கிக் கிடந்தாலும் சுவாசிக்கும் செயல் நிகழ்ந்து கொண்டிருக்குமாகில், மேனியில் கதகதப்பு இருக்குமாகில் அம்மனிதன் சாகவில்லை என்று யூகிக்கிறோம்.

கடும் பனிக்காலத்தில் மரம், செடி, கொடிகளின் இலைகள் யாவும் பட்டுப்போகின்றன. அதினின்று அம்மரங்கள் பட்டுப்போய் விட்டன என்று நாம் யூகிக்கலாகாது. புறத்தோற்றத்தில் பட்டுப்போனவைகள் போன்று அவைகள் தென்படினும் ஒருவித உறக்க நிலையில் அவைகள் உயிர்பெற்று இருக்கின்றன. வசந்த காலம் வருகிறபொழுது வெறும் கவையாகவும், கொம்பாகவும் இருந்தவைகள் தளிர்த்து உயிர்த் தத்துவத்தை விளக்குகின்றன. அதே பனிக் காலத்தில் பூமியினுள்புதைந்துகிடக்கும் பாம்பு, தவளை முதலியன வசந்த காலம் வருகிற பொழுது மேலே வந்து நடமாடுகின்றன. பாறையினின்று வெளியே வராதபடி அடைபட்டுக்கிடக்கும் தேரை உண்டு. இவையாவுக்கும் அந்தந்த நிலையில் அன்னை உயிர்த்தத்துவத்தை ஊட்டி வருவதால் அவள் ப்ராணதாத்ரீ என்னும் பெயர் பெற்றுள்ளாள்.

833. पञ्चाशत्पीठरूपिणी பஞ்சாசத்பீட ரூபிணீ— ஐம்பது பீடங்கள் ரூபத்தில் இருப்பவள்.

தக்ஷப்பிரஜாபதி நிகழ்த்திய யாகம் ஒன்றுக்கு அப்பிரஜாபதியின் செல்வியாகிய சதிக்கும் சிவனுக்கும் அழைப்பு அனுப்பவில்லை. சதியைத் தக்ஷப்பிரஜாபதி சிவனுக்கு மணந்து கொடுத்த பிறகு தன்னுடைய மருமகனுகிய சிவனுர் மீது வெறுப்புத்தட்டியது. ஆதலால் அழைப்புப் போகவில்லை. தந்தையின் வீட்டுக்குச் செல்வி அழைப்பில்லாமலேயே போகலாம் என்று சதிதேவி சிவனுரிடம் தெரிவிக்க அவர் அதை ஆமோதிக்கவில்லை. விருப்பமிருந்தால் அவள்மட்டும் போகலாம் என்றும் அழைப்பில்லாத இடத்துக்குத் தாம் போவதில்லையென்றும் சிவனுர் மறுத்துவிட்டார். சதிதேவி தந்தையின் யாகசாலைக்குச் சென்றபொழுது அவளுக்கு அன்புடன் வரவேற்பு அமையவில்லை. அதைக் குறித்து வருந்திய சதிதேவி தன்னுடைய உடலை அந்த யாகசாலையிலேயே உகுத்துப் பிணமாக்கிவிட்டாள். அதன் விளைவாக யாகத்துக்கும் இடைஞ்சல் உண்டாயிற்று. சதிதேவியுடன் வந்தவர்களுக்கிடையிலும் தக்ஷப்பிரஜாபதியின் சிப்பந்திகளுக்கிடையிலும் பிணக்கு ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட சிவனுர் தாமே அந்த யாகசாலையை நோக்கி வந்தார். சதிதேவிக்கு நிகழ்ந்த விபத்தைக் குறித்து வருந்தி அந்தச் சவத்தைத் தூக்கித் தம் தோளில் போட்டுக் கொண்டு சுய அறிவை இழந்தவராக நாலா பக்கமும் அலைந்து திரிந்தார். இந்தச் சங்கடத்தைத் தேவர்கள் திருமாலிடம் தெரிவித்தார்கள். சிவனுர் மீது சதியின் சவம் இருக்கும் வரையில் அவருக்குச் சுய அறிவு வாராது என மஹாவிஷ்ணு உணர்ந்தார். ஆதலால் அவர் சிவனுரைப் பின்தொடர்ந்து சதிதேவியின் சவத்தைத் துண்டுகளாகச் சிதைத்துக்கொண்டே சென்றுர். அப்படி அவர் சிதைத்தது ஐம்பத்தொரு துண்டுகளாயின. ஒவ்வொரு துண்டு வீழ்ந்த இடத்திலும் சக்திதேவியின் புனித க்ஷேத்திரம் ஒன்று வடிவெடுத்தது. ஈண்டு ஐம்பது என இயம்பப்பட்டிருப்பதை ஐம்பத்தொன்று என வைத்துக்கொள்வது உசிதம். பரத கண்டத்தின் எல்லாப் பாகங்களிலும் சேர்ந்து அம்பிகைக்கு உரிய க்ஷேத்திரங்களாக அமைந்திருப்பவை ஐம்பத்தொன்ருகும். ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் அம்பிகையின் மகிமையும் சாந்நித்தியமும் யாண்டும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. இப்புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் பக்தியுடன் யாத்திரை பண்ணுவது அம்பிகைக்குரிய நல்ல வழிபாடு ஆகும்.

ஐம்பத்தொரு க்ஷேத்திரங்களையும் ஐம்பத்தொரு அக்ஷரங்களாக எடுத்துக்கொண்டால் எல்லாவிதமான ஓசை வடிவினளாகவும் அம்பிகை இலங்குகின்ருள் என்னும் கோட்பாடு தத்துவத்துக்கு ஒத்திருக்கிறது.

834. विशृङ्खला விச்ருங்கலா — கர்ம பந்தம் எதிலும பாதிக்கப்படாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஒரு சான்றின் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவது உசிதம். பிரபஞ்சம் பஞ்சபூதங்களால் ஆனது. இந்த ஐந்து பூதங்களுள்

நான்கு பூதங்களைக் கர்மத்தின் வாயிலாகப் புனிதத்தை இழக்கும்படி செய்யலாம். தூய பூமியை மலம், மூத்திரத்தால் தோஷமுடைய தாக்கலாம். நீரைச் சேறுபடியச் செய்து அசுசி யாக்கலாம். பிணத்தைப் போட்டு நெருப்பின் தூய்மையைப் பாழாக்கலாம். கரியமிலவாயு முதலியவைகளைக் கிளப்பிக் காற்றின் தூய்மை யைக் கெடுக்கலாம். ஆனால் எத்தகைய கர்மத்தைக் கொண்டும் ஆகாசத்தை மலினப் படுத்த யாருக்குமே இயலாது. ஜட ஆகாசத் தின் மகிமையே அவ்வளவு பெரியதென்றால் இனி, சித் ஆகாச சொரூபிணியாயுள்ள அம் பிகையை யார்தான் எக்கர்மத்தின் வாயிலாக மலினப்படுத்த முடியும்? யாருக்குமே அது சாத்தியப்படாது. பாப கர்மம், புண்ணிய கர்மம் ஆகிய இரண்டு கர்மங்களும் அவளை வந்து தாக்கமாட்டா. பரம்பொருள் வழிபாடு செய்பவர்களையே இரண்டு வினைகள் வந்து பாதிப்பதில்லை என்னும் கோட்பாடு 'இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்னும் கோட் பாடாக வந்துள்ளது. கர்ம அதீதத்திலுள்ள அம்பிகையைக் கர்மமயமாயுள்ள பிரகிருதி எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்பது கோட்பாடு.

835. विविक्तस्था விவிக்தஸ்த்தா—ஜனங் கள் இல்லாத இடத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

எங்கும் நிறைபொருளாயிருக்கும் அன்னை பாரசக்தி ஜனங்கள் இல்லாத இடத்தில் மட் டும் சாந்நித்தியம் கொண்டிருப்பது பொருந் தாது. இந்த நாமம் ஆத்மசாதகன் நிறை வேற்றவேண்டிய நிபந்தனையைத் தெளிவுறுத்து கிறது. இனிதினிது ஏகாந்தம் இனிது என் னும் கோட்பாடு ஆத்மசாதகனுக்கு உரியதா கிறது. மக்களுள் பலர் ஏகாந்தத்தில் வசித் திருக்கமாட்டார்கள். எப்பொழுதும் அவர்கள் ஜனக்கூட்டத்தையே நாடுவார்கள். அதற்கு நேர்மாறாக ஆத்மசாதகனொருவன் தன்னந்தனி யனாகத் தான் இருக்குமிடத்தைப்பற்றி வேறு யாரும் அறிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் வசித்து வருவானாகில் அன்னை பராசக்தியின் சாந்நித்தியத்தை உள்ளத்தின் உள்ளே உணரு வதற்கு அது மிகப்பொருத்தமான சூழ்நிலை யாகும். பகிர்முக திருஷ்டியிலேயே மனதைச் செலுத்தி மக்களுக்கிடையிலே வாழ்ந்திருக்கும் பாங்கை உலகத்தவர்கள் பெற்றிருக்கிறார்கள். தெய்வ வழிபாட்டையும் அவர்கள் மக்கள் கூட்டத்திலேயே செய்து பழகியவர்களாக இருக்கிறார்கள். அன்னவர்கள் ஏகாந்தவாசம் பண்ணத்துணிய மாட்டார்கள். ஏகாந்தத்தில் கொஞ்சகாலம் இருந்தால் அவர்களுக்குப் பைத் தியம் பிடித்துப்போகும் அல்லது பெரும் வேதனைக்கு உட்பட்டிருப்பார்கள். இக்கார ணத்தை முன்னிட்டே குற்றவாளிகளில் சில ரைச் சிறைச்சாலையில் ஏகாந்தத்தில் அடைத்து வைப்பார்கள். பகிர்முக திருஷ்டியிலேயே மனதைச் செலுத்தி வைத்திருப்பது குறைநிலை யாகும். அயர்ந்து உறங்குகின்றவன் அருகில் உறங்குபவர்களுடைய ஞாபகம் அற்றவனா கிறான். அந்தப் பாங்கை ஜாக்ரதாவஸ்தையில் கொண்டுவருவது நல்ல ஆத்மசாதனம் ஆகும். பன்னிரண்டு வருஷகாலம் எந்த மனிதரோடும் தொடர்பு வைக்காதும் மனத் தடுமாற்றம் உண் டாகாதும் ஆத்மசாதகன் ஒருவன் இருப்பானா கில் அவன் சித்தபுருஷன் ஆவான் என்பது கோட்பாடு. தன்னுடைய மனத்தின் பரிபக்கு வத்தை உள்ளபடி அறிந்துகொள்ள விரும்புகிற ஒருவன் பிறர் யாருக்கும் தெரியாது ஓரிடத்தில் தன்னந்தனியாக ஏகாந்த வாசம் செய்வானாகில் தன்னுடைய தரம் தனக்கே நன்கு விளங்கும். பண்படையாதவன் அத்தகைய சூழ்நிலையி னின்று கிளம்பி ஜன சமுதாயத்தை நாடி அதி விரைவில் ஓடி வருவான். அதற்கு மாறாக அந்த ஏகாந்த வாசத்தில் அவன் இனிமை காண்பானா கில் சாதனத்திலே அவன் பண்பாடடைகிறான் என்பது வெளிப்படை. அத்தகைய பொருத்த மான சூழ்நிலையொன்றில் ஆத்மசாதகன் ஒரு வன் அன்னை பராசக்தியின் சாந்நித்தியத்தைத் தெளிவுற உள்ளத்தினுள்ளே உணர்வானாகில் அவன் சாதனத்தில் நெடும் தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறான் என்பது வெளியாகிறது. ஆதலால் அன்னை பராசக்தியின் சாந்நித்தியத் தைத்தங்களுடைய உள்ளங்களினுள்ளே உணர விரும்புகின்றவர்கள் இடையிடையே ஏகாந்த வாசத்தை நாடுவது முற்றிலும் அவசியமா கிறது. ஏகாந்தத்தில் இனிமை காண்பவன் அம்பிகையின் சாந்நித்தியத்தை உணர்வான்.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

இனி, ஆத்மாவின் நான்கு லக்ஷணங்கள் விளககப்படும், நிரூபிக்கப்படும். அந்த நான்கு லக்ஷணங்களாவன: (1) ஆத்மா ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கும் வேறானது, அப்பாற்பட்டது. (2) அன்னமயம், பிராண மயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என்னும் ஐந்து கோசங்களைக் காட்டிலும் வேறுபட்டது. இந்த இரண்டும் அதத்வ்யா விருத்தி லக்ஷணம் ஆகும். அதாவது அனாத்மா வான (ஆத்மா அல்லாததான) மூன்று சரீரங் களையும் ஐந்து கோசங்களையும் ஒவ்வொன்றாக இது ஆத்மா அன்று, இது ஆத்மா அன்று என்று ஒதுக்கித் தள்ளுவதன் மூலம் மிஞ்சி யுள்ள பிரம்ம வஸ்துவைக் காட்டுவது. இதற்கு நேதி மார்க்கம் என்றும் பெயர். அது போலவே ஆகாசம் முதல் சரீரம் வரை காணப்படும் பொருள்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாக இது ஆத்மா அன்று என்று தள்ளி மிஞ்சிய வஸ்துவை ஆத்மா என்று காட்டுவதும் அதத்வ்யா விருத்தி லக்ஷணம் ஆகும்.

(3) ஜாக்ரத, சொப்பன, சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளிலும் (நிலைகளிலும்) சாக்ஷி யாக உள்ளது. இது தடஸ்த லக்ஷணம் எனப் படும். (கூரைமேல் காகம் உட்கார்ந்திருக்கும் வீடு என்கிறோம். கூட்டத்தில் குல்லாய் போட்டவன், தடித்தவன், உயரமானவன் என்று அடையாளம் காட்டுகிறோம். மற்றவர் கள் புரிந்து கொள்கிறார்கள். இது அப்போ தைக்கு உண்மை. ஆனால் மாறலாம். இதற்குத் தடஸ்த லக்ஷணம் என்று பெயர்.) கரையில் உள்ள மரம் நதியில் இல்லாவிட்டாலும், அது நதியைச் சேர்ந்தது இல்லாவிட்டாலும் நதி யைக் காட்டுகிறது. உண்மையில் அவஸ்தா திரயமே இல்லாதபடியால் அதற்குச்சாக்ஷியாய் இருக்கும் நிலை பிரம்மத்திற்கு இல்லை. ஆனாலும் கல்பிதமான அவஸ்தா திரயங்களுக்குப் பாஸக மாக (ஒளி தருவதாக, பிரகாசிக்கச் செய்வ தாக, உணரச் செய்வதாக) ஸவிசேஷ பிரம்மம் (குணங்களுடன் கூடியதாக, விசேஷங்கள், செயல்களுடன் கூடியதாக உள்ள பிரம்மம்) இருப்பதால், இத்தகைய குணங்களைக் கொண்டு, நிர்விசேஷ பிரம்மத்தை (நிர்க்குணப் பிரம்மத்தை) நாம் தெரிந்து கொள்ளலாம். கல்பிதமான (கற்பனையான) பிரபஞ்சம் அதன் அதிஷ்டானமான (ஆதாரமான, தங்குமிட மான, இருப்பிடமான) பிரம்மத்திற்குத் தடஸ்த லக்ஷணமாகிறது.

(4) சத்-சித்-ஆனந்தம் பிரம்மத்தினுடைய ஸ்வரூபம், அதனால் ஆகியது, இயல்பு, மய மானது என்று விளக்கலாம். God is Truth, Truth is God என்ற இந்த இரண்டு வாக்கி யங்களும் பொருளில் சற்று வேறுபாடு கொண் டவை. (கடவுள், உண்மை சத்தியம் ஆனவர்; உண்மை, சத்தியமே கடவுள்.) இதே போல இயல்புமயம், என்று விளக்கத்திற்காகச் சொல் லப்படுகின்றனவே தவிர பிரம்மமே அனைத்து மாம், அதுவே எல்லாமாகிறது. ஸத்-சித்- ஆனந்தம் பிரம்மத்தின் சொரூப லக்ஷணம் எனப்படுகிறது. பூரணம், நித்தியம், சுந்தரம், சிவம், அக்ஷரம், அமிர்தம் என்பன எல்லாம் பிரம்மத்தின் சொரூப லக்ஷணங்கள் ஆகின்றன.

இந்த அத்தியாயத்தில் மூவகை சரீரங்களைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது நிரூபிககப்படுகிறது. மூவகை சரீரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாவிட்டால் அவை களுக்கு ஆத்மாவிலக்ஷணன் (வேறானவன், அப் பாற்பட்டவன்) என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது. ஆகையால் மூவகைச் சரீரங்களைப் பற்றி முதலில் அறிந்து கொள்வோம்.

ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் என்று சரீரம் மூவகைப்படும். எல்லாருக்கும் பிரத்யக்ஷமாய்த் தெரிவதும், கை கால் முதலிய அவயவங்களைக் கொண்டதும் கம்பம்போல் இருப்பதும் எதுவோ அது ஸ்தூல சரீரம் ஆகும். சூக்ஷ்ம சரீரம்என்பது ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து பிராணன்கள், மனம், புத்தி ஆகியபதினேழு அவயவங்களைக் கொண் டது (பொதுவாக மனம், புத்தி, சித்தம், அகங் காரம் என நான்காகப் பிரித்துப் பேசப்படும் அந்தக்கரணம்தான் சூக்ஷ்ம சரீரம் என்று சொல் லப்படும். இங்கு விரிவாக ஆராயப்படுகிறது. ஆகையால் பின்னால் வரும் விளக்கங்களைக்

கொண்டு கர்மேந்திரியம் ஐந்தையும்கூட சூக்ஷ்ம சரீரத்தில் சேர்த்திருப்பதின் காரணம் தானே விளங்கும்.) அக்ஞானமே காரண சரீரம்.

சரீரம் என்ற பதத்திற்குக் குறைவை அடைவது, தேய்வது என்பது பொருள். एतेषां शीर्यते क्षीयतइति व्युत्पत्त्या शरीरमिति नाम । ஸ்தூல சரீரம் ஆகாரமில்லாவிட்டால் இளைத்துவிடும், பல ஹீனப்படும்,காரியத்துக்கு உதவாததாகிவிடும். ஆகாரம் இருந்தாலும் வியாதிகளால் நலிவடையும். வியாதியும் இல்லாமல் முதுமையினால் தளர்ச்சியடையும், சுருங்கும். சூக்ஷ்ம சரீரமும் புஷ்பம் தளிர்களைப் போலச் சில சமயம் வளர்கிறது, சில சமயம் குறைவை அடைகிறது. ராக துவேஷம் முதலான அந்தக்கரண விருத்திகள் அதிகரித்தால் சூக்ஷ்ம சரீரவளர்ச்சி என்றும் அவை குறைந்தால் சூக்ஷ்ம சரீரத்தின் குறைவு என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். காரண சரீரத்திற்கும் வளர்ச்சியும் தேய்வும் உண்டு. "நான் ஜீவன்" என்கிற பாவம் உறுதியாக இருக்கிறபோது வளர்ச்சி என்றும் "நான் பிரம்மம்" என்கிற பாவம் வலுக்கிற போது குறைவு, தேய்வு என்றும் சொல்லப் படுகிறது. (திருடன் ஒருவனுக்குத் திருட்டுப் பொருள்நிறையக் கிடைக்கும்போதும் பிடிபடாமல் இருக்கும்போதும் வளர்ச்சி, திருட்டுப் பொருள் கிடைக்காத போதும் பிடிபட்டாலும் க்ஷீணதசை ஆகிறது. அது போன்றது இது. ஜீவபோதத்தைக் கட்டிப் பாதுகாக்கிறநிலைமை காரண சரீரம் நீடிப்பதற்கு உதவுகிறது. அது வளர்ச்சி எனப்படுகிறது. ஞானம் வந்தால் காரண சரீரமே போய்விடுகிறது. அதுதேய்வு, மறைவு எனப்படுகிறது.) இந்தச் சூக்ஷ்மகாரண சரீரங்களின் வளர்ச்சியை அக்ஞானிகளிடமும் அவைகளின் குறைவை, மறைவை ஞானிகளிடமும் காணலாம். ஆகையால் மூவகைச் சரீரங்களுக்கும் கிழத்தனம், தேய்வு ஏற்படுவதால் சரீரம் என்று சொல்லப்படுகிறது. எது ஓயாது தஹனமாய்க்கொண்டிருக்கிறதோ அது தேகம் என்றும் சொல்லப்படுகிறது. எரிக்கப்படுவதால் தேஹம் என்ற பெயர் வந்தது என்றும் சொல்வதுண்டு.

கேள்வி: உலகில் ஸ்தூல சரீரத்தைத்தான் மரணத்திற்குப் பிறகு எரிக்கிறார்கள். சூக்ஷ்ம காரண சரீரங்களை எரிப்பதில்லையே, எரிக்க முடியாதே, அப்படி இருக்க அவைகளுக்கு தேஹம் என்று பெயர் எப்படி வந்தது?

பதில்: அக்னியைவிடக் கொடூரமான தாபதிரயங்களால் (மூன்றுவித துக்கங்களால் = ஆதிபௌதிகம் = பஞ்சபூதங்களால் வரும் தீங்குகள், கஷ்டங்கள்—வெள்ளம், பூகம்பம், புயல், காட்டுத்தீ போன்றவைகளால் ஏற்படும் கஷ்டங்கள். ஆதிதைவிகம் = தெய்வத்தால் ஏற்படுவது—கொள்ளை நோய், பஞ்சம் போன்றவைகளால் வரும் கஷ்டங்கள். அத்யாத்மிகம் = தன் சரீரத்திலேயே நோய் வருதல் சரீர ஊனங்கள், மனம் சரியில்லாமல் நாமே படும் மனத் துயரம் இவைகளால் வரும் கஷ்டங்கள்.) எல்லாச் சரீரங்களும் தகிக்கப்படுவதால் மூவகைச்சரீரத்திற்கும் சரீரம் என்ற பெயர் பொருத்தமானதே. ஸ்தூல பூதங்களிலிருந்து உண்டானபடியால் சரீரம் ஸ்தூலமாக இருக்கிறது. சூக்ஷ்ம பூதங்களிலிருந்து உண்டானபடியால் அந்தக்கரணம் சூக்ஷ்மமாய் இருக்கிறது. அதற்கு ஸ்தூலத் தன்மை இல்லை. தான் மறைந்து இருந்து கொண்டு சப்தம் முதலான விஷயங்களை அறிவிப்பதால் சூக்ஷ்ம சரீரத்துக்கு, அந்தக்கரணத்திற்கு லிங்க சரீரம் என்றும் பெயர். ஸ்தூலம், சூக்ஷ்மம் ஆகிய இரண்டிற்கும் காரணமாக, ஆதாரமாக இருப்பதால் அச்ஞானத்தைக் காரண சரீரம் என்று சொல்கிறோம்.

கேள்வி: முன்பு ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்கள் இரண்டும் பஞ்சபூதங்களிலிருந்து உண்டானவை என்று சொல்லப்பட்டன. இப்போது அவை இரண்டும் காரண சரீரத்திலிருந்து உண்டானதாகச் சொல்லப் படுகின்றனவே, இவற்றுள் எது சரியானது?

பதில்: அத்யாரோப சிருஷ்டியில் (ஆத்மாவில் கிரமமாகப் பிரபஞ்சத் தோற்றம் ஏற்படும் பொழுது) சரீரம் பஞ்சபூதங்களிலிருந்து உண்டானதாகச் சொல்லப்பட்டது. அது சரியே. ஆனால் மொத்தமாகச்சிருஷ்டியைக்கூறும்போது பிரபஞ்சம் முழுவதற்கும் அச்ஞானம் காரணமானதாலும் ஆத்மாவுக்குச் சரீரம் ஏற்படுவதற்கும் அக்ஞானம் காரணமானதாலும், ஸ்தூலம், சூக்ஷ்மம் என்ற இரண்டு சரீரங்களுக்கும் அக்ஞானம் காரணம் என்று கூறப்படுகிறது. இதுவும் சரியே. சிருஷ்டியைக் கிரம சிருஷ்டி, யுகபத் சிருஷ்டி என்று இருவகையாகப் பேசுவ

துண்டு. வரிசைக்கிரமமாக மூலப்பிரகிருதி, மாயை, அவித்தை, ஆவரணம் (மறைப்பு), விக்ஷேபம் (பொய்த் தோற்றம்) ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், மண், ஜீவராசிகள் என்று இங்ஙனம் வரிசைக்கிரமமாகச் சிருஷ்டியை விளக்குவது கிரமசிருஷ்டி என்று சொல்லப்படுகிறது. எல்லாப் பிரபஞ்சமும் அக்ஞானத்தால், ஆத்மாவைப்பற்றி அறியாததால் உண்டானதாகச் சொல்வது யுகபத் சிருஷ்டி எனப்படும். அஜன் குமாரர் தசரதர், தசரதரது குமாரர் ராமன்— என்றும் சொல்கிறோம். ஸ்ரீ ராமன் சூரியகுலத் தோன்றல் என்றும் சொல்கிறோம். இதுபோன்றது கிரமசிருஷ்டி, யுகபத் சிருஷ்டி.

கேள்வி: ஸ்தூல சரீரம் கண்ணுக்குத் தெரிவதால் அதைப்பற்றிச் சந்தேகம் இல்லை. சூக்ஷ்ம சரீரம் நமக்குத் தெரியாததால் அது இருக்கிறது என்று எப்படித் தீர்மானிக்க முடியும்?

பதில்: பதினேழுவிதமான கரணங்களின் காரியங்களால், செயல்களால் இந்த சூக்ஷ்ம சரீரம் இருக்கிறது என்பதை உணரலாம். இந்தப் பதினேழுவித கரணங்களின் காரியத்தை ஸ்தூல சரீரத்தால் செய்ய முடியாதா எனில் செய்ய முடியாது என்பதுதான் பதில். ஏனெனில் சுஷுப்தி, மயக்கம், மரணம் ஆகிய நிலைகளில் ஸ்தூல சரீரம் இருந்தபோதிலும் மேலே கண்ட பதினேழு கரணங்களின் காரியங்கள் ஏதும் காணப்படுவதில்லை. விழிப்பிலும் சொப்பனத்திலும் அந்தக்கரணங்களின் வேலை காணப்படுகிறது. ஆகையால் ஸ்தூல சரீரத்திற்கு அன்னியமாக ஒன்று இருந்துகொண்டு அதை இயக்குகிறது. அதைப் பதினேழு அவயவங்கள் கொண்ட சூக்ஷ்மசரீரம் என்கிறார்கள்.

கேள்வி: இந்த ஸ்தூல சரீரம் இல்லாமல் சூக்ஷ்ம சரீரம் காரியம் செய்ய முடிவதில்லையே, அதனால் இரண்டும் சேர்ந்துதான் பார்த்தல் முதலான செயல்களைச் செய்கிறது என்று சொல்லக்கூடாதா?

பதில்: நன்கு ஆராய்ந்து பார்த்தால் பார்ப்பது முதலான காரியங்களை சூக்ஷ்ம சரீரம் செய்கிறதே தவிர ஸ்தூலசரீரம் அன்று என்பது தெரியவரும். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கிக்கொள்ளலாம். சமையல்செய்ய, செங்கல் சுட, விறகுபோட்டு எரிக்கிறோம். விறகுக் கட்டையில் அடங்கியிருக்கிற நெருப்பு அவைகளுக்கு உஷ்ணத்தைக் கொடுக்கிறது. கட்டை இன்றி அக்னி வேலை செய்வதில்லை. ஆனாலும் உஷ்ணம் கொடுப்பதும் சமையலைப் பக்குவம் செய்வதும் நெருப்பின் செயலே தவிர கட்டையின் வேலை இல்லை. அதுபோன்று ஸ்தூல சரீரத்தை உபயோகித்துக்கொண்டு சூக்ஷ்ம சரீரம் எல்லாக் காரியங்களையும் செய்த போதிலும் அவை சூக்ஷ்ம சரீரத்தின் வேலையே தவிர ஸ்தூல சரீரத்தின் வேலை இல்லை. ஆகையால் பார்ப்பது முதலிய காரியங்களிலிருந்து பதினேழு அவயவங்களைக் கொண்ட சூக்ஷ்ம சரீரம் ஒன்று இருக்கிறது என்று தீர்மானிக்கிறோம். கண், காது, நாக்கு, மூக்கு, தோல் ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்கள். கர்மேந்திரியங்கள் ஐந்து: வாக்கு, கை, கால், குதம், (மலத் துவாரம்) குறி (மூத்திர துவாரம்). பஞ்சபிராணன்கள்: பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன். அந்தக்கரணம் இரண்டு: மனம், புத்தி. இப் பதினேழு அவயவங்களுடன் கூடியது சூக்ஷ்ம சரீரம்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகியவை ஞானேந்திரியங்களால் கிரகிக்கப்படும் விஷயங்கள். நமது அறிவை, அனுபவத்தை விசாலப்படுத்துவதால், வளர உதவுவதால் இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்று பெயர். சுகத்தையும், அறிவுப் பிரகாசத்தையும் தருகிற, உண்டாக்குகிற சத்துவ குணத்திலிருந்து இவை உண்டாயிருக்கின்றன. பேசுவது, எடுப்பது, நடப்பது, வெளிப் போக்குவது, சந்தோஷம் ஆகிய கிரியைகளைச் செய்வதால் வாக்கு முதலியவற்றுக்குக் கர்மேந்திரியங்கள் என்று பெயர். சஞ்சலமுடையதும், அழுக்குடையதுமான ரஜோ குணத்திலிருந்து உண்டானபடியால் இவை கிரியா சாதனங்கள் ஆகும். உள்ளே மூச்சை இழுத்தல், வெளியே மூச்சு விடுதல் ஆகியவைகளால் சரீரத்தைக் காப்பாற்றிப் பலத்தையும் கொடுப்பதால் இவைகளுக்குப் பிராணன்கள் என்று பெயர். ரஜோ குண காரியமாதலால்தான் இவைகளுக்கு இந்தச் சக்தி உண்டாகிறது. எண்ணுதல் என்னும் செயலைச் செய்யும் அந்தக்கரண விருத்திக்கு மனம் என்றும் தீர்மானம் செய்யும் விருத்திக்குப் புத்தி என்றும் பெயர். சூக்ஷ்ம சரீரத்தின் செயல்கள் இங்ஙனம் இருக்கின்றன.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (247) நம் தேசியப்பண்பு கீழ்நிலை அடையக் காரணம் என்ன?

ஒரு நாட்டின் பண்பு காலமெல்லாம் ஒரே பாங்கில் இருப்பதில்லை. உடைமையும், வறுமையும் ஒருவழி நில்லா என்பது இயற்கையைப் பற்றிய கோட்பாடு. அக்கோட்பாடு ஒரு நாட்டுக்கும் உரியதாகிறது. ஒரு வருஷத்தில் பருவங்கள் மாறி மாறி அமைந்து வருகின்றன. சில பருவங்கள் நலனையும் மகிழ்ச்சியையும் தருவனவாக இருக்கின்றன. வேறு சில பருவங்கள் இடைஞ்சல்களாகவும், துன்பத்தை விளைவிப்பனவாகவும் இருக்கின்றன. அவைகளை அமைகிற பாங்கில் ஏற்றுக்கொண்டு சமாளிப்பது நம்முடைய கடமையாகும். இனி, தனி மனிதனுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவன் யாண்டும் முன்னேற்றமடைந்து வருவதில்லை. சில காலங்களில் ஆக்கமே வடிவெடுத்தவனாகின்றான். வேறு சில காலங்களில் பொருளைப் பெரிதும் இழந்துவருகின்றான். சில காலங்களில் ஆரோக்கியமே வடிவெடுத்தவனாயிருக்கிறான். மற்றும் சில காலங்களில் நோய்வாய்ப்பட்டவனாகிறான். இவ்வுண்மைகள் ஒரு தேசத்திற்குப் பொருந்துகின்றன. நாடு ஒன்று சில காலங்களில் பண்புடன் வாழ்ந்து வருகின்றது; வேறு சில காலங்களில் பண்பில் கீழ்மையுறுகிறது. இயற்கையைப் பற்றித் தவிர்க்க முடியாத நியதி ஆகிறது இது. ஆயினும் கீழ்மையுற்று இருக்கிற காலங்களில் நெறிபிறழாது மக்கள் தாக்குப் பிடித்து வருவார்களானால் அதுவே பாராட்டுதற்குரிய பண்பு ஆகும். ஆக, இயற்கையின் போக்கையனுசரித்துக் கஷ்ட தசையிலும் நன்னெறி பிறழாதிருப்போமானால் நல்ல காலம் மீண்டும் வரும். இயற்கை நல்குகிற நலன்களுக்கிடையிலும், கேடுகளுக்கிடையிலும் நல்வழி பிறழாதிருப்பது நம் கடமையாகும். கேட்டின் மூலம் நம் தரம் சோதிக்கப்படுகிறது. ஆகவே கேடு காலத்திலும் நாம் நேர்மையாக இருந்து பழகுவோமானால் ஒரு நாளும் நாம் கெட்டுப் போகமாட்டோம்.

கேள்வி: (248) கல்வித்துறையில் மாற்றம் எப்படிக் கொண்டு வருவது?

கல்வித்துறையில் மாற்றம் கொண்டு வருவது மிக எளிது. கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகளை நாம் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பிரதிகூலமான சூழ்நிலையிலும் நாம் அவைகளை நன்கு அனுஷ்டிக்க முடியும். சில சான்றுகள் எடுத்துக் கொள்வோம். நவீனக்கல்வி முறையில் குரு பக்திக்கு இடமில்லை. நம்முடைய பழங்காலத்துக்கல்வி முறைப்படி மாணக்கனிடத்துக் குருபக்தி ஓங்குதற்கேற்ப அவன் தரத்தில் மேலே வருகிறான். எழுத்து அறிவித்தவன் இறைவனாகும் என்பது மாறாத உண்மை. இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் மாணக்கனுக்கும் ஆசிரியருக்குமிடையில் வாழ்க்கையையொட்டிய இணக்கம் ஏதுமில்லை. குறிப்பிட்ட வேளையில் மணியடித்தவுடன் ஆசிரியர் வகுப்புக்கு வருகிறார். புகட்ட வேண்டிய பாடத்தை ஏதேனும் ஒரு போக்கில் புகட்டி முடிக்கிறார். பிறகு அவர் தம்போக்கில் வகுப்பை விட்டு வெளியேகுகிறார். தம் வகுப்பிலிருக்கும் மாணக்கர்களுள் பலரை அவர் அடையாளம் தெரிந்து கொள்ளமாட்டார். இக்குறைபாட்டைத் திருத்தியமைப்பது ஆசிரியருக்கு இயலும். ஒவ்வொரு மாணக்கனோடும், அவர் நெருங்கிப் பழகலாம். மாணக்கனுடைய முன்னேற்றத்தில் சிரத்தை மிகக்காட்டலாம். இங்ஙனம் அன்பு நெறியை அனுஷ்டிப்பதற்கேற்ப நல்லிணக்கம் உருவெடுக்கிறது. நல்ல குருபக்தி அமையுமானால் அதன் வாயிலாக இக்காலத்தில் கல்வி முறையிலுள்ள கேடுகள்பல நன்கு தவிர்க்கப்படும். ஆசிரியரிடத்து வியாபார மனப்பான்மை இருக்குமானால் கேடுகள் மேலும் அதிகரிக்கும். தாயன்பும், தந்தையின் ஒழுங்குப்பாடான திட்டமும், ஆசிரியருடைய பெருமையும் பேருக்கமும் ஓர் ஆசிரியரிடம் ஒன்று சேருமானால் அவர் மூலம் மாணக்கர்கள் பலபேர் நன்கு திருந்தியமைவார்கள். கொற்றவன் எப்படியோ குடிமக்கள் அப்படி என்பது கோட்பாடு. கல்வித்துறையில் கல்வி புகட்டுபவன் எப்படியோ கல்வி ஏற்பவர்கள் அப்படி மாறியமைகின்றனர்.

நல்லாசிரியர்கள் நாட்டில் அதிகரிக்கும் பொழுதே கல்வித்துறையில் புனிதம் ஓங்கும்.

பூமியில் சாகுபடி செய்து நல்ல விளைவு எடுப்பதற்கு நல்ல விதையைச் சேகரிப்பது முதல் கடமையாகிறது. அதே பாங்கில் நல்லாசிரியர்களை உருவாக்குவதில் சமுதாயம் கண்ணும் கருத்துமாக ஈடுபடுமானால் கல்வித்துறை புனிதம் அடைவது திண்ணம்.

கேள்வி: (249) சுவாமிஜி வியாக்யானம் எழுதிய திருவாசகம் புத்தகத்தில் மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைக்கவில்லை, அதுசித்தரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடல் புராணத்தில் சோழனின் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விளக்கம் தேவை.

மானுட வடிவெடுத்துள்ள ஜீவன் ஒருவன் செவிடாகப் பிறந்தால் அவன் ஊமையாகவும் அமைவது திண்ணம். ஏனென்றால் பிறந்த குழந்தை ஒன்று காதால் கேட்டதை நாவால் சொல்லிப் பழகுகிறது. உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் இக்கோட்பாடு உண்மை. செவிடாகப் பிறந்தது ஓசை எதையும் கேட்பதில்லை. ஆகையால் அது ஓசையை உண்டுபண்ணிப் பழகுவதில்லை. எனவே அது ஊமையாகிறது. ஓசையை உண்டுபண்ணுவதற்கு மேல் சொல் ஒன்றையும் அதற்கு விளக்கமாக உள்ள பொருளையும் இணைத்துப் பழகவேண்டும். அது மிக முக்கியமான பயிற்சி. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். பார்வை என்னும் சொல் இருக்கிறது. இது சூழ்நிலைக்கேற்பப் பலவாறு பொருள்படுகிறது. அப்படிப் பொருள்படுவது பழக்கத்தால் வருகிறது. திடீரென்று ஒருநாள் காது கேட்கும் திறமை வந்து விட்டால் அதினின்று கேட்ட சொல்லை எப்பொருளோடு இணைப்பது என்னும் பயிற்சி பெறாத ஜீவன் ஒருவன் சொல்லையும் அதன் பொருளையும் இணைக்கும் பயிற்சி பெற்றவன் அல்லன். பிறரால் தூண்டப்பெற்று ஓசை உண்டுபண்ணினால் அது யந்திரம் பேசுவது போன்று பேசுமேயொழிய பொருள் சேர்ந்த பேச்சாகாது. கனவிலே நம்மால் உண்டு பண்ணப்பட்ட மானுடன் ஒருவன் பேசுகிறான். அப்படிப் பேசுவது நம்முடைய மனதின் கூறேயொழிய அப்பேச்சு பேசுகிற மானுடனொருவன் நம்முடைய மனதுக்குப் புறம்பாக இல்லை. அதே விதத்தில் பேசாதிருந்த பெண்ணொருத்தியை இறைவன் பேசுவித்தார் என்றால் அப்பேச்சும் அதன் பொருளும் இறைவனுக்குச் சொந்தம். பேசிய பெண்ணோ உயிரோடு கூடிய இயந்திரமாகிறது. அதில் சிறப்பு ஏதுமில்லை.

பிறகு திருச்சாழலில் அடங்கியிருக்கும் விஷயம் இரண்டு தோழிகளுக்கு இடையில் சிவமகிமை வினா விடையாக அமைந்திருக்கிறது. அதில் புத்தமத சைவமத சம்வாதம் ஏதும் இடம்பெறவில்லை. இப்பொழுது ஆராய்ச்சி பண்ணினாலும் இவ்வுண்மை எல்லார்க்கும் வெளிப்படையாக விளங்குகிறது. பௌத்தர்கள் கேட்ட கேள்விக்கு விடையாக ஊமைப் பெண் பேசியது என்னும் அதிசயச் செயலை இதனோடு இணைப்பது முற்றிலும் பொருத்தமற்றதாம்.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் வியாசர் இயற்றிய ஏனைய புராணங்களோடு சேர்ந்து இடம் பெறுகிறது. இந்தப் புராணங்களில் கற்பனைக் கதைகள் அல்லது கட்டுக்கதைகள் ஏராளமாக அடங்கி இருக்கின்றன. சில கட்டுக் கதைகளுக்கு அடிப்படையாகத் தத்துவ விளக்கங்கள் அமைந்திருக்கின்றன. ஏனைய கதைகள் பாமரர்களுக்கிடையில் ஊக்கத்தை ஊட்டுவதற்கு அமைக்கப் பெற்றவை. அவைகள் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் ஆகமாட்டா. எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்பது கோட்பாடு. புராணங்களை வாசிப்பவர்களும் கேட்கிறவர்களும் அவைகளை வாச்சியார்த்தம் அல்லது சொற்படி கருத்தை வாங்கிக்கொள்ளலாகாது. அதற்கு லக்ஷ்யார்த்தம் அல்லது இன்ன நோக்கத்தோடு சொல்லப்பட்டது என்பதை அறிந்து கொள்வது முற்றிலும் அவசியமாகிறது. ஆகவே வாச்சியார்த்தம், இலக்ஷ்யார்த்தம் ஆகியவைகளைச் சரியாகப் பொருள்படுத்தத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு மனக்குழப்பம் உண்டாவது திண்ணம். ஊமைப் பெண்ணைப் பேசவைத்தது பாலர் போன்றிருப்பவர்க்கு உற்சாகம் ஊட்டுவதற்கு அமைந்துள்ள வெறும் கட்டுக் கதையாம். அது தத்துவமாகாது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

2. நிறமாலேயும், ஜகத்தும் :

களிக்கூடத்தில் (Nursery school) பாடம் பயிலும் குழந்தைகள், புவியில் இருந்து கொண்டு, "நிலா நிலா ஓடிவா" என்று பாடுவதற்குப் பதிலாக, சந்திரமண்டலத்தில் இருந்துகொண்டு "புவியே புவியே ஓடிவா" என்று பாடினல் ஆச்சரியப்படுவதற்கில்லை. விஞ்ஞானிகளின் முன்னேற்றத்திற்குக் காரணம் கடின உழைப்பு, இடைவிடாத முயற்சி, புதுமையைக் காணவேண்டுமென்ற துடி துடிப்பு இவைகளேயாம். தம் ஜீவிதத்தில் இப்பண்புகளைக் கொண்டு திகழ்ந்த மாமேதை சர் ஐசக் நியூட்டன் ஆவார்.

பலவிதமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த நியூட்டனின் மனத்தை நிறங்களும் கவர்ந்தன. நீலவானம், கார்மேகம், பசும் வயல்கள் போன்றஅழகான நிறங்களைக் கண்டு நாம் ரசிக்கிருேம். ஆனல் நாம் எப்போதாவது "நிறம் என்ருல் என்ன?" என்று ஆராய்ந்ததுண்டா? இந்தக் கேள்வி இளம் வயதிலேயே நியூட்டனுக்கு எழுந்தது. அதன் விளைவு அவருடைய நிறப்பிரிகைக் கொள்கை(Dispersion Theory). முப்பட்டைக் கண்ணுடியை (Prism) வெயிலில் பிடித்து, வானவில்லில் (Rainbow) தோன்றும் வர்ண ஜாலத்தைச் சுவரில் விழச்செய்து பள்ளி மாணுக்கர்கள் மகிழ்வதைப் பார்த்திருக்கிருேம். நியூட்டன் சிறுவயதில் அத்தகைய ஒரு கண்ணுடிப்பட்டகத்தை (Prism) கடையிலிருந்து வாங்கிப் பல சோதனைகளைச் செய்தார். தன்னுடைய அறை முழுவதையும் இருட்டாக்கினர். அவ்விருண்ட அறையில் ஒருசிறு துளை வழியாகக் கதிரவனின் வெண்ணிற ஒளியை நுழைய விட்டு அதனை அவர் கடையிலிருந்து வாங்கிய முப்பட்டகத்தின்மீது படச்செய்து மறுபுறத்தில் ஒரு திரையைப் பிடித்து அதில் வானவில்லின் ஏழு நிறங்களாலான ஒளிப்பட்டையைப் பெற்ருர். அவர் பெற்ற இந்நிறப்பட்டை ஏழு நிறங்களாலான நிறமாலை (Spectrum) ஆகும். இக்காலத்தில் இதை ஒரு சிறு குழந்தைகூட அறியும். பள்ளிகளில் செய்துகாட்டக்கூடிய ஒரு எளிய பரிசோதனையாகும் இது. ஆனல் வெள்ளை நிறமாகத் தோன்றும் கதிரவனின் ஒளி அடிப்படையில் ஏழு நிறங்களால் ஆகியது என்று முதன்முதலில் கண்டுபிடித்த பெருமை நியூட்டனையே சாரும். ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சூரிய பகவான் வருகிருர் என நம் முன்னேர் கூறியதும் இவ்வேழு நிறங்களைக் குறிக்கத்தானே!

முப்பட்டைக்கண்ணுடி வழியாக ஒளிக்கதிர் செல்லும்போது அது ஒளிவிலகல் (Refraction) அடைகிறது. ஒளிவிலகல் நிகழும்போது ஒவ்வொரு நிறக்கதிரும் வெவ்வேறு அளவிற்கு வளைகிறது. அதாவது வெவ்வேறு அளவு விலகுகிறது. அதனல்தான் முக்கோணப் பட்டகத்தின் ஊடே ஒளி செல்லும்போது ஒவ்வொரு நிறமும் வெவ்வேறு அளவிற்கு விலகுவதால்-வளைவதால்-நிறப்பிரிகை (Dispersion) நிகழ்ந்து நிறமாலை உண்டாகிறது. சூரிய ஒளிக்கும் திரைக்கும் இடையில் முப்பட்டைக் கண்ணுடி இருப்பதால்தான் நிறமாலை தோன்றுகிறது. முப்பட்டைக்கண்ணுடி இல்லையெனில் நிறமாலையும் இல்லை. சூரிய ஒளியைக் காட்டிலும் நம்மை மிகவும் கவர்ச்சி செய்வது நிறமாலையேயாகும். பிரிசத்தை நீக்கினல் நிறமாலை மறைந்துவிடும். தாற்காலிகமான நிறமாலை நம்மைக் கவருகிறது. அதுபோன்று சூரிய ஒளி போன்ற பரப்பிரம்மம், முப்பட்டைக்கண்ணுடி போன்ற மாயை வழியாகப் பார்க்கும்போது நிறமாலை போன்ற நிலையற்ற 'ஜகத்'தாகத் தென்படுகிறது. நிறமாலை, பிரிசத்தை நீக்கினல் மறையும் ஒரு மித்தை. அதுபோன்றே மாயையை நீக்கினல் ஜகத்தும் இல்லை. சாசுவதமானது கதிரவனின் வெள்ளொளி போன்ற பரப்பிரம்மமே. அப் பரப்பிரம்மத்தைப் பற்றுவதைவிடுத்து நிலையற்ற நிறமாலை போன்ற 'ஜகத்'தைப் பற்றுவானேன்?

"முப்பட்டைக் கண்ணுடி வழியாக வருகிற சூரியகிரணம் வெவ்வேறு நிறங்களுடையதாகிறது. அந்நிறங்கள் மித்தை. பரப்பிரம்மம் மாயையின் முலமாகத் தென்படும்பொழுது அது ஜகத்தாகத் தென்படுகிறது. ஜகத் மித்தை." — ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

12. மிதிலைக் காட்சிகள் :

'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்பார்கள். யோகிகளுக்கு ஏகாந்தம் இனிமையைத் தரும். ஆனால் துயருறுவோர்களுக்குத் தனிமை துன்பத்தை அதிகப்படுத்தும். தனிமையில் இருக்கும் பொழுதுதான் உள்ளத்திலுள்ள பழைய நினைவுகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகத்துக்கு வந்து கொண்டிருக்கும். அசோகவனத்தில் சிறையிருந்த சீதை தனியாக இருக்கும் பொழுது அவள் உள்ளத்தில் எழுந்து வந்த எண்ணக் காட்சிகளைக் காண்போம்.

ராமனைப் பிரிந்து துயருறும் இந்தவேளையில், மிதிலையில் நடந்த திருமணக் காட்சிகள் மிதிலைச் செல்வியின் மனத்தில் தோன்றுகின்றன. ராமன் தன் கைத்தலம் பற்றிய காட்சியும், ராமன் தன் காலை எடுத்துவைக்கத் தான் அம்மி மிதித்து அருந்ததியைப் பார்த்த நிகழ்ச்சியும், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்த கோலமும் அவள் மனத்திரையில் படங்களாகின்றன.

இந்தத் திருமணச் சடங்குகளை மிகவும் கவனமாக நினைவில் வைத்திருப்பவர்கள் பெண்கள் தாம். சாதாரணமாகவே அவர்கள் உள்ளம் இந்நிகழ்ச்சிகளை அசை போட்டுக்கொண்டே இருக்கும்; விசேஷமான காலங்களில்—இன்ப, துன்பச் சூழ்நிலைகளில் – இவற்றை நினைத்துப் பார்க்க அவர்கள் தவறுவதேயில்லை. அறம் சுவராகி நின்ற அரங்கன்மேல் காதல் கொண்ட ஆண்டாளும் கூட இதற்கு விலக்கல்லள். அரங்கனுக்கும் தனக்கும் நடந்த மணத்தைக் கனவில் கண்டபொழுது மாதவன் தன் கைத்தலம் பற்றியதையும், அம்மி மிதித்து அருந்ததியைப் பார்த்ததையும் அழகாகப் பாடுகின்றாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி :—

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழிநான்."

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி நான்."

இன்பமான நேரங்களில் மட்டுமல்லாது துன்பம் சூழ்ந்தபோதும் இக்காட்சிகள் பெண்கள் மனத்தில் தோன்றும் என்பதை மகாபாரதத்தில் காணலாம். கேடுற்ற கௌரவர்களின் அறங்கெட்ட சபைக்கு இழுத்துவரப்பட்ட பாஞ்சாலி, முற்றும் முறையிழந்து மூங்கையர் போல் வீற்றிருந்த பாண்டவர்களைப் பார்த்து, விம்மி அழுது,

"விதியோ கணவரே?
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டி என்னை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணம் செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?"

என்றும் கல்லும் கனியும் வண்ணம் கேட்டதாகப் பாடுவார் மகாகவி பாரதியார். பாஞ்சாலி நினைத்தது போன்று சீதையும் தன் மண நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்திருந்தாள், ராமனை நினைத்து அசோக வனத்தில் தனித்திருந்தபோது.

13. ஆரண்ய வாழ்க்கையின் ஆரம்பத்தில்......:

அயோத்தியிலும் ஆரண்யத்திலும் கண்ணை இமை காப்பதுபோன்று சீதையை ராமன் பாதுகாத்து வந்தான். அவள் மனம் துன்பத்தின் சாயலைக்கூட உணரக்கூடாது என்பதில் ராமன் கண்ணும் கருத்துமாக இருந்தான். வனவாசத்தின் கடுமையை முதன் முதலில் சீதை உணர்ந்தது விராதனின் செயல்களிலிருந்துதான். அவனிடமிருந்து அவர்கள் தப்பித்துக்கொண்ட முறையில் வனவாசத்தின் கசப்பான அனுபவங்களைத் திடமனத்துடன் ஏற்றுக்கொள்ளப் பழகியிருந்தாள் சீதை.

ஒரு சமயம் ராமன் சீதையின் மடியில் தலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தபோது இந்திரன் மகன் ஜயந்தன் காக்கை உருவம் எடுத்து வந்து சீதையின் மேனியைக் குத்திக் காயப்படுத்தித் துன்புறுத்தினன். இதனை அறிந்த ராமன், சினம் பொங்க, ஒரு புல்லை எடுத்து பிரம்மாஸ்திர மந்திரத்தை உச்சரித்துக் காகத்தின் மேல் ஏவினன். ஜயந்தன் நடுங்கி, எல்லா உலகங்களுக்கும் ஓடி, வேறு வழியின்றி மீண்

டும் ராமனிடமே வந்து சரண் அடைந்தான். கருணாமூர்த்தியான காகுத்தன் காகத்தின் வடிவத்திலிருந்த ஜயந்தனின் ஒரு கண்ணை மட்டும் பிரம்மாஸ்திரத்திற்கு இலக்காக்கி அவனை மன்னித்து அருளினன்.

இவ்வாறு தன் பொருட்டுப் பிரம்மாஸ்திரம் ஏவிக் காக்கையைத் தண்டித்த காகுத்தன் கயவர்கள் சிறையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தன்னை விடுவிக்க ஏன் இன்னும் வரவில்லை என்பது சீதையின் மனத்தில் பெரிய கேள்விக்குறியாகவே இருந்தது.

கர, தூடணரையும், பதினாலாயிரம் அரக்கரையும், வில் ஒன்றில் கடிகை மூன்றில் தனக்காக விண்ணில் ஏற்றிய தாசரதி, தசகண்டன் சிறையிலிருந்து தன்னை மீட்க இன்னும் வரவில்லையே என்று ஏங்கினள் சீதை.

மணவறையில், கைத்தலம் பற்றி 'வாழ்நாள் முழுவதும் பிரியாது உன்னைக் காப்பேன்' என்று உறுதியளித்த உத்தமன் பத்துமாத காலம் தன்னை விட்டுப்பிரிந்து தன்னைத் தவிக்க விட்டுப் போனது அவள் மனத்தைக் கலக்கியது.

உடன் பிறந்தவன் உள்ளம் வருந்துகின்றானே என்று துடித்தவன், உடன் பிறவாத் தம்பி குகனிடமும் கருணைகாட்டிய காகுத்தன், கைப்பிடித்த மனைவியின் கஷ்டத்தைப் போக்க நினைக்கவில்லையே என்று கலங்கினள் ஜானகி.

சிறையிருந்த சீதையின் உடல் இருந்த நிலையையும், அவள் உள்ளத்தில் தோன்றிய உணர்வு அலைகளையும் இவ்வாறு படம்பிடித்துக் காட்டுகின்றான் கம்பநாடன்.

அசோகவனச் சீதையின் நிலையை இருமகா கவிஞர்களும் எவ்வாறு எடுத்துரைத்தார்கள் என்பதைக் கண்டோம். இனி, அனுமன் சீதையைப் பார்ப்பதற்கு முன், அசோகவனத்தில் அன்றிரவு சீதையின் செயல்கள் பற்றிக் காணலாம்.

14. இருண்ட வானில் ஒரு மின்னல்:

சோகத்தைப் போக்கும் சோலையில் சோகமே உருவான சீதை, தன் சோகத்தைப் போக்க வருவான் வருவான் என்று யாரை எதிர்பார்த்திருந்தாளோ அந்த நாயகன் பத்து மாதங்களாகியும் இன்னும் வரவில்லை. ஆனல் இந்தப் பத்து மாதங்களிலும் தோன்றாத சில புதிய மாறுபாடுகள் தன்னுள் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தன அன்றிரவு. உடனே இதனைத் தன் ஒரே தோழியான திரிசடையிடம் தெரிவிக்க முனைகின்றாள் சீதை. ஏனைய அரக்கியர் போன்று திரிசடையும் உறங்கிக் கொண்டிருக்கின்றாள். இந்தத் திரிசடை அரக்கப் பாலைவனத்தில் தோன்றிய ஒரு சோலை, சீதையின் துயரக்கடலில் ஒரு மரக்கலம், திசை மாறிய கப்பலுக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரம். உலக மாதாவான சீதை கலங்கிய போதெல்லாம் அவளுக்கு உறுதுணையாக இருந்து தேற்றியதால் திரிசடையைத் 'தாயினும் இனிய அன்பினள்' என்பான் கம்பன். அரக்கியரிடையில் தன் தூய்மைக்குப் பாதுகாப்பாக அவள் இருந்ததால் சீதையே அவளைத் 'தூயவள்' என்றழைப்பாள். கொடும் சொல் வீசும் அரக்கியர் கூட்டத்தில் இன்சொல் பேசும் திரிசடை ஒருத்தியே சீதைக்குத் துணை. குணங்களால் உயர்ந்தவனாகிய வீடணனின் திருமகள் திரிசடை. தன்னிடம் தோன்றிய மாற்றங்களைத் தெரிவிப்பதற்காகத் திரிசடையைத் துயில் எழுப்புகின்றாள் சீதை. கனவு கலைக்கப்பட்டவள் போன்று துயில் நீங்கினள் தூயவள். ஆர்வத்தோடு தன் அனுபவத்தை அவளிடம் கூறுவாள் சீதை :—

"அன்புடைய தோழி! இதோ பார்! என் இடப்பக்கத்துக் கண்ணும், புருவமும், நெற்றியும் துடிக்கின்றனவே! இதன் பொருள் என்ன? ஏதாவது நன்மை தோன்றுவதற்கு இவை அறிகுறிகளா? அல்லது என் தீவினைப் பயனாக, நல்லது வருவது போன்ற ஆசையை என்னுள் ஏற்படுத்தி, மிகப்பெரிய இன்னலைத் தருவதற்கான முன் அறிவிப்பா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! முன்பு ஒருநாள் மிதிலைக்குக் கௌசிகமுனிவருடன் ராமன் வந்தபோது எனது இடத்தோளும் கண்ணும் புருவமும் துடித்த நினைவு எனக்கு இருக்கின்றது. ஆனல் அறந்தரு சிந்தையனாகிய என் ஆவி நாயகன் ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, பூழி வெம் கானம் நண்ணியபோது என் வலப் புருவமும் கண்ணும் துடித்தன. வனத்தில் வஞ்சக அரக்கன் என்னைச் சிறையெடுக்க வந்த நாளன்றும் என் வலப்பக்கம் துடித்தது. இன்றோ என் இடப்பக்கம் துடிக்கின்றது!

கடல் சூழ்ந்த இவ் இலங்கையில் கயவனால் கடுஞ்சிறை வைக்கப்பட்ட எனக்கும்கூட ஏதாவது நலன் விளையுமோ? இந்த நிமித்தத்தின் காரணத்தை ஆராய்ந்து சொல்வாயாக!"

திரிசடை கவனமாகக் கேட்டாள். அவள் மனம் வியப்புற்றது. நிமித்தத்தின் பலனைச் சீதைக்குத் தெரிவிக்கின்றாள். அதே சமயம் சீதை கண்ட நிமித்தங்கள் நிச்சயம் நல்ல பலனைத் தரும் என்பதற்குச் சான்றாகத் தான் அச்சமயம் கண்ட கனவினையும் விரிவாகத் தெரிவிக்கின்றாள். திரிசடையின் விளக்கத்தைப் பார்ப்பதற்கு முன், இந்தக் கட்டத்தில் ஆதி கவியின் கதைப் போக்கிலிருந்து கம்பன் வேறுபடும் விதத்தைச் சிறிது நோக்குவது அவசியமாகிறது.

15. வால்மீகியின் கதைப் போக்கு:

அசோகவனத்திற்குள் நுழைந்த அனுமன் சீதையைப் பார்த்த பின்னர், அவளைத் தனியாகச் சந்திப்பதற்கேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒரு மரக்கிளையில் அமர்ந்திருக்கின்றான். அப்போது ராவணன் அங்கு வருகின்றான். சீதையிடம் கடுமையாகப் பேசி விட்டுச் சினத்துடன் திரும்பிச் செல்கின்றான். அவனுடைய தகாத மொழிகளால் அம்புபட்ட மான் போல் சீதை மனமுடைந்து வருந்துகின்றாள். ராவணன் கட்டளைப்படி சீதையைக் காத்து நின்ற அரக்கியர் கூட்டம் அவளை மிரட்ட ஆரம்பிக்கின்றது. அவர்களை அடக்குவதற்காகவும், சீதையைத் தேற்றுவதற்காகவும் திரிசடை தான் கண்ட கனவுச் செய்தியை விரித்துரைக்கின்றாள்; சீதையின் உடலில் தோன்றிய நன்னிமித்தங்களையும் சுட்டிக் காட்டுகின்றாள். இதனைக் கேட்ட அரக்கியர், சீதையை மிரட்டுவதைக் கைவிட்டு விட்டு உறங்க ஆரம்பித்து விடுகின்றனர். திரிசடையும் உறங்கிவிடுகின்றாள். ஆனால் மனம் நொந்த சீதை தன் உயிரைப் போக்கிக்கொள்ள முடிவு செய்து ஒரு சிம்சுபா மரத்தின் அருகில் போய் நிற்கின்றாள். அப்பொழுது அவளுக்குச் சில நன்னிமித்தங்கள் தோன்றுகின்றன. அம்மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த அனுமன் சீதையின் கவனத்தைத் திருப்பும் பொருட்டு ராம காதையை இனிய குரலில் பாடுகின்றான். பின்னர் சீதை அனுமன் சந்திப்பு நடைபெறுகின்றது. வால்மீகியின் இந்தக் கதைப் போக்கினைக் கம்பன் மாற்றுகின்றான்.

16. கம்பன் செய்த மாற்றம்:

அனுமன் சீதையைத் தேடிக்கொண்டு அசோகவனத்துள் புகுந்தபோது, அரக்கரின் நடுவில் பத்துமாதங்கள் அல்லல்பட்டு மீட்சிக்கு வழி புலப்படாதிருந்த சீதைக்கு நல்ல நிமித்தங்கள் தோன்ற ஆரம்பித்தன. அருகில் உறங்கிக்கொண்டிருக்கும் திரிசடையை எழுப்பித் தன்னிடம் தோன்றியுள்ள நிமித்தங்களுக்கு விளக்கம் கோருகின்றாள். திரிசடை அவற்றிற்கு விளக்கம் தருவதற்கிடையில், அந்த விளக்கத்தை உறுதி செய்வது போன்று அமைந்த தான் கண்ட கனவினையும் சீதைக்கு எடுத்துரைக்கின்றாள். இவர்களுடைய பேச்சுக்குரல் உறங்கிக்கொண்டிருந்த அரக்கியர் சிலருக்கு விழிப்பை உண்டாக்க, அவர்கள் மற்றவர்களையும் எழுப்பிவிட, தூக்கத்தினால் தங்கள் காவல் தடைப்பட்டுவிட்டதே என்று எல்லா அரக்கியரும் ஓடிவந்து சீதையை நெருங்கிச் சூழ்ந்துகொள்ள ஆரம்பிக்கின்றனர். அச்சமயம் அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்த அனுமன் அரக்கியரின் இந்தப் பரபரப்பான நடமாட்டத்திற்குக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ளும்பொருட்டு விரைவாக அரக்கியர் சூழ்ந்துள்ள இடத்திற்குச் செல்கின்றான். அரக்கியர் கூட்டத்திற்கு நடுவில் கூர்ந்து நோக்குகின்றான். சீதையைக் காண்கின்றான். மகிழ்ச்சி பொங்கச் சீதையின் பண்பு நலன்களைப் போற்றுகின்றான். இவ்வாறு அனுமன் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும்போது அசோகவனத்தின் வாயிலில் வேறு ஓர் அரவம் கேட்கின்றது. பரிவாரங்கள் சூழ ராவணன் வந்துகொண்டிருக்கின்றான். தான் வந்த சமயம் நல்ல சமயம் என்று எண்ணிய ராமதூதன் சீதையை நன்கு பார்த்துக்கொண்டிருப்பதற்கு ஏற்றவாறு ஒரு மரக்கிளையில் தன்னை மறைத்துக்கொண்டு அமர்ந்துகொள்கின்றான். ராவணன் — சீதை பேச்சுக்களைக் கேட்கின்றான். அரக்கியரையும் சீதையையும் அரட்டிவிட்டுப் போகின்றான் அரக்கர்கோன். அரக்கியர் சீதையை மிரட்டுகின்றனர். திரிசடை தலையிட்டு அவர்களை அடக்குகின்றாள். அனுமன் சீதையைத் தனித்துப் பார்க்க விரும்பி, அரக்கியரெல்லாம் உறங்

கும் வண்ணம் ஒரு மந்திரம் உச்சரிக்கின்ருன். திரிசடையும் மற்ற அரக்கியரும் உறங்கிப் போகின்றனர். அரக்கியர் உறங்கியதைக்கண்ட சீதை தன் நிலேக்கு வருந்தி, தனக்கு இனி உய்வு இல்லே என்று முடிவு செய்து, தன் உயிரைப் போக்கிக்கொள்வதற்காகப் 'போது லாம் மாதவிப் பொதும்பர்' எய்தினள். சீதை யின் எண்ண ஓட்டத்தையும், நோக்கத்தையும் ஊகித்த அனுமன் ராம நாமத்தைச் சொல்லிக் கொண்டே அவள் முன் தோன்றிப் பணிந்து வணங்கினன். இவ்வாறு கதை நடத்துவான் கம்பன்.

ஆதிகவியின் கதைப் போக்கினைச் சிறிது மாற்றிக் கதை நிகழ்ச்சிகளே விறுவிறுப்பும் வேகமும் உடையவையாக ஆக்கியிருக்கின் ருன் கவிச்சக்கரவர்த்தி என்பது தெளிவாகும். இனி, இரு கவிஞர்களும் திரிசடையின் கனவுச் செய்தியை எவ்வாறு விவரிக்கின்ருர்கள் என்று பார்ப்போம்.

17. வால்மீகி கண்ட திரிசடையின் கனவு:

சீதையைத் துன்புறுத்திய அரக்கியரிடம் திரிசடை தான் கண்ட கனவினைக் கூறுகின் ருள்:-

''ராமனும் இலக்குவனும் நான்கு தந்தங்களே யுடைய மலேபோன்ற பெரிய யானையின்மீது அமர்ந்து வந்து ஜானகியைக் கண்டார்கள். வெண்பட்டாடையும் வெண்பூமாலேயும் அணிந் தவர்களாக இவர்கள் காணப்பட்டார்கள். அந்த அதிசய யானே ஆகாயவழியிலேயே இலங் கைக்கு நேர் மேலாக வந்து நின்றது. ஆகாயத் தில் நின்ற அந்த யானையின்மீது சீதை சென்று ஏறிக்கொண்டாள்.

''ராமன் மட்டும் பதினறு காளைகள் பூட்டிய தேரிலேறி இலங்கைக்கு வந்து சேர்ந்ததையும், அண்டங்கள் எல்லாவற்றையும் ராமன் விழுங் கும் பயங்கரமான காட்சியையும் கண்டேன்.

''பாற்கடலின் நடுவே ஒரு வெண்மலே தோன் றிற்று. அதன் சிகரத்தில் வெள்ளே யானே ஒன்றிருந்தது. அதன்மீது ராமன் இலக்குவன் சீதை ஆகிய மூவரும் அமர்ந்திருந்தனர். ராமன் கிழக்குத் திசையைப் பார்த்து அமர்ந் திருந்தான். பிரும்மரிஷிகள் புண்ணிய தீர்த் தங்களால் ராமனே அபிஷேகம் செய்தார்கள். தேவர்களும், மகரிஷிகளும், சித்தர்களும், பிரம்ம னுடன் வந்து ராமனே வணங்கினர்கள். அப் போது ராமன் மகாவிஷ்ணு போன்று காட்சி யளித்தார்.

''ராவணன் எண்ணெய் பூசிய மொட்டைத் தலேயுடன் சிவந்த ஆடையுடுத்தி அலரிப்பூ மாலே அணிந்து கள் அருந்தி வெறிபிடித்திருந் தான். புஷ்பக விமானத்திலிருந்து ஒரு பெண் ணுல் இழுக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான். சிவந்த மாலேயையும் சாந்தையும் அணிந்திருந்த ராவணன் கழுதை பூட்டிய தேர் ஒன்றில் ஏறித் தென்திசை நோக்கிச் சென்று ஒரு சேற்று மடு வில் மூழ்கிப் போனன்.

"கறுப்புநிறமுள்ளவளும் சேறுபூசிய மேனி யுடையவளும் சிவந்த ஆடை அணிந்தவளு மான ஒரு பெண் ராவணனேக் கழுத்தில் கட் டித் தென்திசை நோக்கி இழுத்துச் செல்கின் ருள். குடிபோதையில் நகைத்துக்கொண்டு, மதி மயங்கி ராவணன் கழுதை மீது ஏறித் தென்திசையில் போகின்ருன். மறுபடியும் பூமியில் விழுகின்ருன். அறிவுகெட்டு, பயந்து நடுங்கிய ராவணன் மீண்டும் எழுந்து பித்த னேப் போன்று பிதற்றிக்கொண்டு துர்நாற்ற மெடுக்கும் மலச்சேற்றில் விழுந்து மூழ்கிப் போனன்.

"மிகுந்த பலசாலியான கும்பகர்ணனும் இவ் வாறே ஆனன். ராவணனின் புதல்வர்கள் மொட்டையடித்து, எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ராவணன் பன்றிமீதும், இந்திரஜித் முதலே யின்மீதும், கும்பகர்ணன் ஒட்டகத்தின் மீதும் ஏறித் தென்திசைக்குச் சென்றனர். விபீஷ ணன்மட்டும் வெண்கொற்றக் குடையுடன், வெண்மையான மாலேயணிந்து, வெண்மை யான ஆடையுடுத்தி, வெண் சந்தனம் பூசி, சங்கம் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க, அரக்கியர் சூழ வீற்றிருந்தார். அவ் வீடணன் நான்கு அமைச்சர்களோடு, மேகம் போன்று நிறமுடையதும், இடிஇடிப்பது போன்று முழங்குவதுமான நான்கு தந்தங் களேயுடைய சிறந்த யானேமீதேறிச் சென்று ராமபிரானேச் சரணடைகின்ருர்.

"நால்வகைப் படைநிறைந்த இந்த அழகிய இலங்கை நகரின் விண்முட்டும் மாளிகைகள் இடிந்து விழுந்து மண்மூடிப்போயின. அரக்கர்

கோனல் அருமையாகக் காக்கப்பட்ட இந்த இலங்கை ஆற்றல் மிக்க ராம தூதனை குரங்கு ஒன்றினல் அக்கினிக்கு இரையாக்கப்பட்டது. அவலம் கொண்ட அரக்கியர் அழுது கூக்குர லிட்டுக்கொண்டு சானக்குழிகளில் விழுந்து அழிந்தனர்.

"அரக்கப் பெண்களே! என்னுடைய இந் தக் கனவு நிச்சயம் பலிக்கப்போகிறது. இந் தச் சீதாப் பிராட்டி படும் துயரத்தை நீண்ட நாட்கள் ராமன் பொறுத்துக்கொள்ளமாட்டார். எனவே உங்கள் உயிர் நிலைக்கவேண்டுமானல் இவ் உத்தமியின் பாதங்களைச் சரணடைந்து மன்னிப்புக்கோருங்கள். மேலும் என் கனவை உறுதிப்படுத்துவது போன்று சீதையின் மேனியிலும் இப்பொழுது நல்ல அறிகுறிகள் பல தோன்ற ஆரம்பிக்கின்றன. தாமரை மலர் போன்று இவள் இடக் கண் துடிக்கின்றது. இவள் இடத் தோள் மயிர்க்கூச்செறிந்து பூரிக்கின்றது. மரக்கிளையில் வசிக்கும் பறவை ஒன்று மனத்தில் களிபேருவகைகொண்டு விட்டுவிட்டு எழுப்பும் இனிய இசையானது அவள் உறவினர் ஒருவரின் வருகையை அவளுக்குக் குறிப்பாக உணர்த்துவதுபோன்று தோன்றுகின்றது!"

திரிசடையின் கனவுச் செய்திகள் முன்பின் தொடர்பின்றி, வேறுபட்ட பல காட்சிகளைக் குறிப்பிடுபவையாக இருப்பது நோக்கத்தக் கது. கனவின் இயல்பு இத்தகையதுதான். இதனை அற்புதமாக எடுத்துக் காட்டிய ஆதி கவியின் திறமை வியப்புக்கு உரியது. இந் தக் கனவில் ராமனின் பெருமை, ராவணன் அடைந்த இழிவு, அவனைப் பின்பற்றியவர் களின் அழிவு, விடணனின் சரணகதி, அனு மன் ஏற்படுத்திய இலங்கையின் அக்கினிப் பிரவேசம் முதலியவற்றைக்காணலாம். அதோடு கூடச் சீதையின் மேனியில் ஏற்பட்ட நல்ல நிமித்தங்களையும் திரிசடையே பார்த்து அரக்கி யரிடம் தெரிவிக்கின்ருள்.

அரக்கியரிடம் திரிசடை தன் கனவுபற்றிக் கூறியதைச் சீதாபிராட்டி கேட்டுக்கொண் டிருந்தாளா என்பது தெரியவில்லை. ஏனெனில், அடுத்த 28வது சர்க்கத்தில் 'சீதை தன் தலைப் பின்னலால் சுருக்கிட்டு உயிர் நீக்க முயன்ற நிகழ்ச்சியைக் கூறப்புகுந்த வான்மீகி முனிவர், "ராவணனுடைய இழிவான வார்த்தைகளைக் கேட்ட சீதை வெறுப்படைந்து, கானகத்தில் சிங்கத்தின் கையிலகப்பட்ட பெண்யானைக் குட்டிபோல் நடுங்கிக்கொண்டிருந்தாள்" என்று ஆரம்பிக்கின்ருர். சீதை தன் முடிவைச் செய லாக்க முயன்றபோது திரிசடையும் மற்ற அரக்கியரும் என்ன செய்தார்கள் என்பதும் தெரியவில்லை. அரக்கியரைத் திரிசடை அதட் டிக்கொண்டிருந்தபோதே சீதை ஒரு தனியிடத் துக்குச் சென்று தன்னுடைய முடிவைச் செய லாக்க முனைந்தாள் என்றும், அச்சமயம் அவ ளுக்கே சில நல்ல நிமித்தங்கள் தோன்றின என்றும், அதனல் அவள் சிறிது தயங்கி நின்ற போது அனுமன் ராம காதையைப் பாடினன் என்றும் இதற்கிடையில் திரிசடையும் அரக்கிய ரும் உறங்கிவிட்டனர் என்றும் வான்மீகியாரின் கதைப்போக்கிலிருந்து ஊகிக்கவேண்டியுளது.

ஆனல் அனுமன்-சீதை உரையாடலின் போது அரக்கியர் உறங்கிப்போய்விட்டனர் என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில், அனு மன் பின்னர் அசோகவனத்தை அழிக்க முற் பட்டபோது அரக்கியர் ஓடிவந்து சீதையிடம்:

"இந்தக் குரங்கு யார்? நீ எப்படி இதனுடன் பேசிக்கொண்டிருந்தாய்? பயப்படாமல் உண் மையைச் சொல்!"

—வான்மீகி, சுந்தர. சர்க். 42: 6-7.

என்று கேட்பதாக வான்மீகியார் தெரிவிக் கின்ருர். இதே அரக்கியர் ராவணனிடம் ஓடிச் சென்று, சீதையுடன் ஒரு குரங்கு பேசிக் கொண்டிருந்ததென்றும், சீதை இருக்கும் இடம் தவிர அசோகவனத்தின் மற்ற எல்லா இடங் களையும் அது அழித்துவிட்டதென்றும், [வான் மீகி, சுந்தர. சர்க். 42: 13-21] தெரிவிக்கின் ருர்கள். இவற்றிலிருந்து சீதை-அனுமன் உரையாடலைக் காவல் அரக்கியர் கவனித்திருப் பதாகத் தெரிகின்றது. அப்படியானல் அவர் கள் ஏன் அதைத் தடுக்கவில்லை? அப்போது திரிசடையின் நிலை என்ன? ஆதிகவியின் கதைப்போக்கில் அமைந்துள்ள இச்சந்தேகங் களையெல்லாம் தெளிவாக்குவதற்காகவே கம் பன் இக்கதைப் போக்கினை மாற்றினன் போலும். கம்பனின் கதைப்போக்கினை முன் னர் கண்டோம். இப்போது கம்பன் கூறும் திரிசடையின் கனவினைக் கவனிக்கலாம்.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

14. தசாங்கங்களை உடையவன் முருகப் பெருமான்:

— பருவத்து

66. அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்
67. பேரின்ப வெள்ளப் பெருக்குஆறும் மீதானம்
தேரின்பம் நல்கும் திருநாடும்—பார்இன்பம்
68. எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும்-தொல்உலகில்
69. ஈறும் முதலும்அகன்று எங்கும்நிறைந்த ஐந்து
கூறிநடாத்தும் குரகதமும்—ஏறுமதம் [எழுத்தைக்
70. தோய்ந்து களித்தோர் துதிக்கையினல் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும்-வாய்ந்தசிவ
71. பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டும் நறும்தொடையும்—காரணத் [துள்
72. ஐந்தொழிலும் ஓவாது அளித்துஉயர்ந்த வான் [கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்
73. நீக்கம்இன்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்து அருளும் ஆணையும்—தேக் [கமழ்ந்து
74. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கம்எனப் பெற்றேனே—"

முருகப் பெருமானுக்கு உரிமையுடையனவாகத் தசாங்கங்களைப்பற்றிச் சொல்லவேண்டும் என்னும் எண்ணம் குமரகுருபரருக்கு உண்டாயிற்று.

முருகனின் அவதாரத்தைப்பற்றிச் சொல்லுகின்றவர், இப்பத்து அங்கங்களையும் முருகனுக்குச் சொல்லுகின்றார்.

பேரரசன் ஒருவன் ஆட்சிக்கு வரும்போது அவனுக்குப் பத்து அங்கங்கள் லட்சணமாகச் சொல்லப்படும். அவ் உறுப்புக்கள் அவ் அரசனின் பெருமைக்கு அடையாளங்களாகும்.

மலை, ஆறு, நாடு, தலைநகரம், குதிரை, யானை, மாலை, கொடி, முரசு, ஆணை [உத்தரவு] ஆகியவை அப்பத்து அங்கங்கள் ஆகும்.

நாட்டை ஆட்சி செய்பவன் அரசன். அவன் நாட்டில் அமைந்திருக்கக்கூடிய மலையின் வளத்தையும், ஆற்றின் வெள்ளப் பெருக்கையும், நாட்டின் பெருமையையும், தலைநகரத்து அழகையும், பட்டத்துக் குதிரையின் கம்பீரத்தையும், பட்டத்து யானையின் பெருமிதத்தையும், அரசன் தனக்கு அடையாளமாகக்கொண்டு அணிந்திருக்கும் மாலையின் இயல்பையும், தனது அந்தஸ்தைக் காட்டும் கொடியின் சிறப்பையும், அரசனுடைய கொடைக்கும், வெற்றிக்கும் அடையாளமாக விளங்கும் முரசின் பெருமையையும், நாடு முழுவதும் செல்லக்கூடிய அவ் அரசனுடைய கட்டளையையும் புலவர்கள் புகழ்ந்து பாடுவார்கள்.

இவ்வாறு அரசனைப் புகழ்ந்து பாடுவது புலவர்களின் இயல்பு. மலையையோ, நாட்டையோ, யானையையோ தனித்தனியே புகழ்ந்து பாடக்கூடிய வழக்கம் சங்ககாலம் தொட்டு இருந்து வந்தது. காலப் போக்கில் இவற்றைத் தசாங்கங்களாக ஆக்கித் தொகுத்துப் புகழ்ந்து பாடுவது ஓர் இலக்கிய மரபாகிவிட்டது.

அவ் இலக்கிய மரபையொட்டிக் குமரகுருபரரும் தசாங்கங்களை முருகனுக்காக்கித் தம் கந்தர் கலிவெண்பா நூலில் இயம்பியுள்ளார்.

1. மலை: ஆன்மாக்கள் இறைவனை உணரக்கூடிய பக்குவ நிலையை அடைகின்ற காலம் வரும்போது, அளவு கடந்த பேரன்பை இறைமீது பொழிகின்றன. அத்தகைய பேரன்பு பூண்ட ஆன்மாக்களின் உள்ளத்துள்ளே புகுந்து திகழக்கூடிய இன்பமலை முருகப் பெருமானுடைய மலை.

2. ஆறு: நன்மைதரக்கூடிய அழகு வாய்ந்த பேரின்பம் வெள்ளப் பெருக்காகப் பொங்கி வருகின்ற ஆறு.

3. நாடு: மேலான இடமாகிய வெட்ட வெளியைப்பற்றி ஆராய்கின்ற காரணத்தால் எல்லாருக்கும் இன்பம் தரும் அழகியநாடு.

4. தலைநகரம்: உலகத்தில் உண்டாகக்கூடிய இன்பங்கள், இன்பங்களால் ஏற்படுகின்ற விளைவுகள் ஆகிய எல்லாவற்றையும் கடந்து, அப்பாற்பட்டு விளங்குகின்ற பெரிய பூமியில், பிறப்பு இறப்பு இவ் இரண்டும் இல்லாத தன்மை உடையதாக முருகன் தலைநகர் அமைந்துள்ளது.

5. பட்டத்துக் குதிரை: இந்தப் பழமையான உலகத்தில் அழிவும் தொடக்கமும் இல்லாமல், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் திருவைந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரமே அப்பெருமானுக்குப் பட்டத்துக் குதிரையாகிறது.

6. பட்டத்து யானை: தங்களின் சமயத்தில் [மதத்தில்] நம்பிக்கைகொண்டு, சமய நம்பிக்கையில் அழுத்தம் உடையவர்களாய்த் தோய்ந்து மகிழ்ச்சி அடைகின்றவர்கள், துதி செய்கின்ற காரணத்தால், ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்று சொல்லக்கூடிய பஞ்ச மலங்களையும் அழித்து ஒழிக்கக்கூடிய சிவஞானம் செவ்வேளுக்குப் பட்டத்து யானையாகும்.

7. மாலை: பூரணத்துள் பரிபூரணமாகப் பரிமளிக்கும் போதமாகிய அறிவைப் புத்தம் புதிய மலராகக்கொண்டு, அன்பார்ந்த நெஞ்சக்குள் பொங்கியெழும் பக்தி உணர்வை நாராகக்கொண்டு அடியார்கள் தங்களுடைய உள்ளத்துக்குள் தொடுப்பதை நறுமண மாலையாகக் கொண்டவன் அறுமுகன்.

8. கொடி: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் இடைவிடாது நிகழுவதற்கு ஏதுவான காரணங்களை உண்டாக்கிக் கொடுத்து உயர்த்தப் பெற்றது அவனுடைய கொடி.

9. முரசு: புத்தம் புதிய நாத தத்துவத்தை எழுப்புவது முரசு.

10. ஆணை: எப்போதும் இடைவிடாது தொடர்ந்து, கண்ணுடியில் பொருள்களைக் காட்டி அசையச் செய்கின்றவனைப் போல, இவ்வுலகம் அனைத்தையும் படைத்து, அவற்றை ஆட்டிப் படைத்து இயங்கச் செய்யும் பேராற்றல் படைத்தது அம்முருகனுடைய ஆணைச் சக்கரம்.

புலவர்கள் அனைவரும் மனமகிழ்ச்சியோடு புகழ்ந்து பாடுகின்ற இப் பத்தையும் தசாங்கங்களாகப் பெற்ற பேரருளாளன் திருமுருகன்.

தெய்வம் பூமியில் அவதாரம் செய்து சூரபத்மனை அழித்த செய்தி முருகனது வரலாறு. மனிதராக அவதாரம் செய்தார் என்றுசொன்னதற்கேற்ப அரசர்களுக்கு லட்சணமாகச் சொல்லப்படும் தசாங்கங்களை முருகனுக்கு இணைத்துக் குமரகுருபரர் கூறுகின்றார்.

15. முருகன் திரு அவதாரம்: சிவனார் கண்களில் நெருப்புப் பொறி.

— தேசுதிகழ்

75. பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதைஇடப்
பாங்கு உறையும் முக்கண் பரஞ்சோதி—ஆங்கு
[ஒருநாள்

76. வெம்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கு
ஐந்து முகத்தோடு அதோமுகமும்–தந்து [இரங்கி

77. திருமுகங்கள் ஆறுஆகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறிஆறு உய்ப்ப

பிரகாசமாய்த் திகழ்கின்ற அழகிய கயிலாய மலையில், மலர்சூடிய உமையம்மையைத் தம் இடப்பாகத்திலே கொண்டு விளங்குகின்றவர் முக்கண்களை உடைய சிவபெருமான் ஆவார். கொடிய அசுரர்கள் செய்கின்ற கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ள இயலாத தேவர்கள் அனைவரும் ஒருங்கே கூடி வந்து, கைலாச மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம் முறையிட்டனர். அரக்கர்களின் கொடுமைகளிலிருந்து தங்களைக் காக்கவேண்டுமெனக் குறையிரந்தனர்.

அதனைக் கேட்டார் சதாசிவம். கருணை கூர்ந்தார். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் தம் ஐந்து திருமுகங்களுடன் அதோமுகம் [கீழ் நோக்கிய முகம்] என்னும் ஒரு திருமுகத்தையும் கொண்டார். சித்பரனாகிய சிவபெருமான் கொண்ட நெருப்புப் போன்ற அவ் ஆறு திருமுகங்களில் இருந்தும் ஒரே சமயத்தில் ஒரே விதமாக ஆறு தீப்பொறிகள் வெளியாகின.

இப்பிரபஞ்சத்துக்கு மூலகாரணப் பொருளாய் விளங்குவது சிவம். அச்சிவத்தோடு அபின்னமாக இருக்கும் சக்தி அல்லது ஆற்றலால் அச்சிவம் தொழிற்படுகின்றது. பரமசிவத்தைச் சிருஷ்டியில் தொழிற்பட வைப்பது, அக்னியின் சூடு அபின்னமாக எப்படித் திகழ்கிறதோ அதுபோல, சிவத்தில் அபின்னமாக ஐக்கியப்பட்டிருக்கும் சக்தியே ஆகும். சிவ பரம்பொருள் ஆண் அல்லன்; பெண் அல்லள்; அலியும் அல்லன். இருந்தாலும் அச்சிவனது அளப்பரிய ஆற்றலைச் சக்தி எனப் பெண்பாலாகக் கூறும் மரபு உண்டு. எனவே, சிவத்தை அவளது கணவன் எனக் கூறும் மரபும் உண்டு.

சக்தியே சிவத்தைத் தொழிற்பட வைக்கும் எனத் தத்துவ ஞானிகள் கூறுவார்கள்.

"சிவம் சக்தி தன்னை ஈன்றும் சக்திதான் சிவத்தை [ஈன்றும்
உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகு உயிர் [எல்லாம் ஈன்றும்"

எனச் சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திரம் கூறுகிறது. சிவம் சக்தி இரண்டும் பேதம் அற இணைந்து தொழிற்பட உலகும் உயிர்களும் தோன்றி இயங்குகின்றன.

சிவமும் சக்தியும் வேறுபாடு இல்லாமல், ஒரே பொருளின் இரண்டு பரிணமங்களாகத் திகழ்கின்றன. எனவே, தேவர்கள் வந்து முறையிடுவதைக் குமரகுருபரர் இங்கே சொல்லுமிடத்து, "உமையம்மையை இடப் பாகத்திலே கொண்ட முக்கண் பரஞ்சோதி" எனச் சிவத்தையும் சக்தியையும் இணைத்தே கூறுகின்றார்.

தேவர்கள் தங்களுடைய துன்பத்தைத் துடைக்கவேண்டும் என்று சிவபெருமானிடம் முறையிட்டு வேண்டுகிறார்கள். அப்போது சிவ பெருமான் தொழிற்பட்டு வேண்டிக்கொண்ட வர்களுடைய துன்பத்தைப் போக்க வேண்டும். அவ்வாறு சிவம் இயங்குவதற்குத் துணையாய் அமைவது சக்தி. எனவே, சிவபெருமான் சக்தியை இடப்பாகத்தில் கொண்டு விளங்கு கின்றார் எனத் தத்துவத்திற்கு உகந்த முறை யில் குமரகுருபரர் இங்கே குறிப்பிடுகின்றார்.

"பாகத்தில் ஒருவன் வைத்தான்" என இதனைக் குறிப்பிடுகின்றார் கம்பர். "உண்ணா மூலை உமையாளொடு உடனாகிய ஒருவன்" என்கிறார் சம்பந்தப் பெருமான். சிவசக்தியே தொன்மைக் கோலம் என்கிறார் மணிவாசகர்.

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி!"

— இவ்வாறு அவர் சிவசக்தி இணைந்த திரு மேனிக் கோலத்தைப் புனைந்துரைக்கின்றார்.

இங்கு மற்றொரு உதாரணமும் நினைத்துப் பார்க்கத் தக்கது. உபநிஷத்துக்களில் ஒன்று கேனோபநிஷதம். இது ஸாம வேதத்தைச் சார்ந்தது. இதில் மூன்றாவது காண்டம் 25-வது மந்திரத்தில், "ஸர்வ ஸோபமானா உமாஹைவதீ" என அம்பிகையைக் கூறி, அவளே தேவர்களுக்குப் பிரம்மம் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

தேவர்களுக்குப் பிரம்மமான அம்பிகையும் சிவமும் இணைந்திருக்கத் தேவர்கள் வந்து முறை யிட்டார்கள் எனக் குமரகுருபரர் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தம் ஆகிறது.

ஐந்து முகங்களோடு அதோ முகமும்கொண்டு ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தான் சிவ பெருமான்.

16. சரவணத்தில் முருகன் அவதரித்தல் :

— விரிபுவனம்

78. எங்கும் பரக்க இமையோர்கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் [—அங்கண்
79. எடுத்துஅமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதி [என்று எம்மான்
கொடுத்தவிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்த [தொரு
80. பூதத் தலைவ கொடுபோதி எனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுஉய்ப்பப்-போதொருசற்று
81. அன்னவளும் கொண்டு அமைதற்கு ஆற்றாள் [சரவணத்தில்
சென்னியில்கொண்டு உய்ப்பத் திருஉருவாய்..."

— சிவபெருமானின் திருமுகங்களிலிருந்தும் தோன்றிய ஆறு தீப்பொறிகளும் அண்ட சரா சரம் முழுவதும் பரவின. இந்நிலையைக் கண்டு தேவர்கள் அனைவரும் மிகவும் பயந்தனர்.

இதையறிந்தார் சிவபெருமான். அந்நெருப் புப் பிழம்பு பொறிகளைத் தம்முடைய அழகிய கரங்களால் எடுத்து அடக்கி வைத்துக் கொண்டு வாயு பகவானை அழைத்தார். "நீ இப்பிழம்புகளை எடுத்துச் செல்க!" என ஆணையிட்டார். வாயு பகவானும் எடுத்துச் சென்றார். ஆனால், அக்னியின் வேகத்தை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. நெருப்பின் வெம்மையைப் பொறுத்துக் கொண்டே மெல்ல மெல்லக் கொண்டுபோய் அக்னிதேவனிடம் சேர்த்துவிட்டான். அக்னி தேவனாலும் அவ்வெம்மையைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அவனும் விரைவாக எடுத்துச்சென்று குளிர்ச்சி நிறைந்த கங்கையில் சேர்த்துவிட்டான்.

அவ் ஆறு நெருப்புப் பிழம்புகளின் வெப்பத்

தைக் குளிர்ந்த கங்காதேவியாலும் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவளும் அவற்றை இயலாமல் தாங்கிக்கொண்டு விரைந்துசென்று சரவணப் பொய்கையிலே சேர்த்துவிட்டாள். அப்பொழுதே அந்நெருப்புப் பொறிகள் ஆறும் ஆறு அழகிய குழந்தைகளாக வடிவெடுத்தன.

சரவணம்-சரவனம்-நாணல் புதர். நாணல் புதர் நிறைந்த பொய்கை சரவணப் பொய்கை. குழந்தை ஒன்று உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலை யாகிய நெருப்பு, [வெப்பம்], வாயு, தண்ணீர், குளிர்ச்சி ஆகியவை அமைந்த ஒரு சூழ்நிலை இங்கே சொல்லப்படுகிறது.

17. உமையொரு பாகனின் உள்ளம் உவப்ப உயர்ந்தோன் : "—முன்னர்

82. அறுமீன் முலையுண்டு அழுது விளையாடி
நறுநீர் முடிக்கு அணிந்த நாதன்—குறுமுறுவல்
83. கன்னியோடும் சென்றுஅவட்குக் காதல்உருக் [காட்டுதலும்
அன்னவன் கண்டு அவ்வுருவம் ஆறினையும்— [தன்இரண்டு
84. கையால் எடுத்து அணைத்துக் கந்தன்எனப் பேர் [புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய
85. முகத்தில் அணைத்துஉச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச்—சகத்துஅளந்த
86. வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில்அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே"

—ஆறு குழந்தைகளும் கார்த்திகைப் பெண் கள் ஆறுபேரும் அருந்தக் கொடுத்த பாலமுதை அருந்தின; விளையாடி மகிழ்ந்தன. அப்போது, கங்கையைத் தலையிலேகொண்ட சிவபெருமான், புன்முறுவல் பூக்கும் உமாதேவியோடு அச்சர வணப் பொய்கைக்குச் சென்றான். விரும்பத் தகுந்த அவ் அழகிய குழந்தைகளை உமாதேவிக் குக் காட்டினான். உலகையெல்லாம் ஒருங்கே ஈன்றெடுத்த அன்னை தனது இரு கைகளால் அக்குழந்தைகள் ஆறையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து அணைத்தாள். ஸ்கந்தன் என்னும் சொல்லுக்கு ஒன்று சேர்க்கப்பட்டவன் என்பது பொருள். அன்னையும் ஒன்று சேர்த்த அம்மக வுக்குக் கந்தன் என்னும் பெயரை இட்டாள். தாயார் விருப்புடன் செய்கின்றவாறு, அம்மக வைத் தனது முகத்தோடு சேர்த்து அணைத்து, உச்சி மோந்து, மகிழ்வுடன் திருவமுதம் புகட் டினாள். வெள்ளை விடைமேல் ஆரோகணித் துள்ள விமலன் சிவபிரான் கைகளில் அம் மகவை அளித்தனள். உள்ளம் உவப்பு அடைய எம்பெருமான் கைகளில் தவழ்ந்தான் முருகன். இறைவன் உள்ளம் களிப்புறப் பெரியோனாகத் திகழ்ந்தவன் முருகப்பெருமான்.

சக்தியால் தொழிற்பட்டு இயங்குவது சிவம் என்பதற்கேற்ப, இங்கே சக்தியாகிய அம்பிகை முருகனாகிய மகவைத் தன் கரங்களால் எடுத் துப் பிரானிடம் கொடுத்து இயங்க வைக்கிறாள்.

"பஞ்ச க்ருத்ய பராயணா", "பஞ்ச ப்ரம்ம ஸ்வரூபிணீ" என லலிதா ஸஹஸ்ர நாமம் சக்தி கிருத்யங்களுக்குக் காரணமாயிருப்பதைக் கூறு வது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

18. ஆட்டுக் கிடாயை அடக்குதல் : "—கிள்ளைமொழி

87. மங்கை சிலம்பின் மணிஒன்பதில் தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
88. விருப்பால் அளித்த நவவீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு—நெருப்பில்உதித்து
89. அங்கண் புவனம் அனைத்தும் அழித்துஉலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்து— [எங்கோன்
90. விடுக்குதி என்றுஉய்ப்ப அதன்மீதுஇவர்ந்து
நடத்தி விளையாடும் நாதா" [எண்திக்கும்

— கிளிபோன்று மென்மையான அழகிய மொழி பேசுபவள் உமையம்மை. அவள் திரு வடிகளில் சிலம்பு அணிந்துள்ளாள். அச்சிலம் பில் மணிகள் உள்ளன. அவ் மணிகளுள், நவசக்திகள் தோன்றினர். மாணிக்கவல்லி, மௌத்திகவல்லி, புஷ்பராகவல்லி, கோமேதக வல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகத வல்லி, பவளவல்லி, இந்திர நீலவல்லி ஆகி யோர் நவசக்திகள் ஆவார்கள்.

நவசக்திகளைப் போல, சப்த மாதாக்கள் [ஏழு தாய்மார்கள்], சப்த கன்னிகைகள் [ஏழு கன்னிகள்] எனப்படுபவர்களும் பெண் தெய் வங்களாகச் சொல்லப்படுகிறார்கள். ஏழு தாய் மார்கள் ஏழு ஆண் தெய்வங்களின் சக்திகள். ஏழு கன்னிகைகள் மணம் ஆகாத ஏழு பெண் தெய்வங்கள் ஆவார்கள்.

மேற்குறித்த நவசக்திகளின் கருப்பாசயத் துன்பம் ஒழிந்துபோகும்படியாகப் பிறந்தவர் கள் நவவீரர்கள் ஆவார்கள்.

வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீர மகேஸ்வரர், வீரபுரந்தரர், வீரராக்ஷசர், வீர மார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்பவர் கள் அந் நவவீரர்கள் ஆவார்கள்.

இந் நவ வீரர்களுள் நறுமலர் மாலை அணிந்த வீரவாகு தேவர் மூத்தவர் ஆவார். வீரவாகு தேவர், நாரத முனிவர் நடத்திய யாகத்தீயில் தோன்றி இவ்வுலகம் அனைத்திற்கும் அழிவை உண்டாக்கிச் செருக்குடன் திரிந்துகொண்டிருந்த சிவந்த கோபக் கண்களை உடைய ஆட்டுக் கிடாயைப் பற்றிக்கொண்டுவந்து முருகவேள் முன்னர் விட்டான். "எம்பெருமானே! இக்கிடாய்மீது ஏறி அமர்ந்து செலுத்துக" என்று விண்ணப்பித்துக்கொண்டான்.

வீரவாகுவின் வேண்டுகோளை ஏற்று, அக் கிடாய்மீது ஏறி, எட்டுத் திசைகளிலும் செலுத்தி விளையாடல் செய்தவன் முருகன்.

"கிள்ளை மொழி மங்கை"—கிளி போன்று இனிமையாகப் பேசும் உமையம்மை என்றார் குமரகுருபரர். அம்பிகையைக் கிளி என்று வெறும் உபசார வழக்காக, இலக்கிய வழக்காகச் சொன்னாரா? இல்லை! அவ்வாறு கிளி என்று சொன்னதிலும் ஒரு தத்துவம் அடங்கியிருப்பதாகச் சொல்வார்கள் பெரியவர்கள்.

கிளியின் உடம்பு முழுவதும் பச்சை நிறம். மூக்கு-அலகுமட்டும் சிவப்பு நிறம். சிவனுடைய திருமேனி செம்மேனி. "சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" "செந்தழல் புரை திருமேனி", செந்தாமரைக் காடனைய மேனி", "பவளமால்வரை" என்றெல்லாம் சிவபிரானுடைய செம்மேனி துதிக்கப்படுகிறது. அம்பிகையின் நிறமோ பச்சை.

கிளியினிடத்தும் பச்சை நிறமும், சிவப்பு நிறமும் கலந்திருப்பது சிவசக்தி சொரூபத்தை உணர்த்துகிறது.

"பஞ்ஜரசுகி" என்று அம்பிகையை லலிதாத்ரிசதி கூறுகிறது. "ஓங்காரப் பஞ்ஜரசுகி" என்று ஆதிசங்கரர் அம்பிகையைக் குறிப்பிடுகிறார். பஞ்ஜரம்-கூண்டு-கூடு. சுகி-கிளி. சான்றோர்களின் கருத்து இணைந்து வருவதை இங்கே காணலாம்.

19. பிரம்மனைச் சிறையில் அடைத்தவன் :

— படைப்போன்

91. அகந்தை உரைப்ப மறைஆதி எழுத்துஎன்று
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்
92. சிட்டித் தொழிலதனைச் செய்வதுஎங்ஙன் என்று
குட்டிச் சிறையிருத்தும் கோமானே" [முனம்

படைப்புத் தொழிலை நடாத்தும் நான்முகனாகிய பிரம்மன், தான் படைப்புத் தொழிலை மேற்கொண்டு விளங்குவதால் செருக்குடன் திகழ்ந்தான்.

அப்பிரமனிடத்துப் பிரணவத்தின் பொருள் விளக்கத்தை முருகன் வினவினான். ஏற்ற விளக்கத்தைப் பிரம்மனால் கூற இயலவில்லை. பிரணவத்தின் உண்மைப் பொருளை அறிந்து கொள்ளாமல், எப்படிப் படைத்தல் தொழிலைச் செய்யமுடியும்? எனக் கேட்டு, பிரம்மனைத் தலையில் குட்டிச் சிறையில் அடைத்தான் முருகன்.

20. பிரணவத்திற்குப் பொருள் புகன்றவன் குமரன் :

— மட்டவிழும்

93. பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் [போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே"

தேன் துளி சிதறும் புதிய கொன்றை மாலையை யணிந்த செஞ்சடை வேதியன், முருகனைக் குருவாகப் போற்றி வேண்டிக் கொள்ள, சுவாமிநாதனாக இருந்து, முதன் முதலில் பிரணவ மந்திரப் பொருளை உரைத்தவன் முருகன்.

21. வீர வடிவேல் விடுத்தவன் முருகன் :

— கோள்நெடுவேல்

94. தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே"

— எல்லாருக்கும் அச்சத்தைத் தரும்படியான வேலை உடைய தாரகாசுரன் இறந்து போகும் படியாகவும், மாயவேலைகளை எல்லாம் செய்யும் கிரவுஞ்சமலை பொடிப் பொடியாக ஆகும்படியாகவும் வீரம் பொருந்திய வேலாயுதத்தை விடுத்தவன் முருகப் பெருமான்.

அசுரர் கூட்டத்தைச் சார்ந்தவன் தாரகாசுரன். தேவர்களைப் பாதுகாப்பதற்காக அசுரர்களுடன் முருகப் பெருமான் போரிட்டபொழுது தாரகாசுரனைக் கொன்றான்.

தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் இடையூறு விளைவித்து வந்த, மாய வேலைகளையெல்லாம் செய்து வந்த கிரௌஞ்ச கிரியைத் தனது வேலை எறிந்து தூள் தூளாக்கியவன் முருகப் பெருமான்.

சுயநலமற்ற வாழ்வு

(சுவாமி துருவானந்தர்)

வாழவேண்டும் என்று எண்ணுகிற ஒவ்வொருவனும் நிறையப் பணம் சேர்க்க வேண்டும், தனக்கு நல்ல குழந்தைகள் பல பிறக்க வேண்டும், சுகமான வாழ்வுக்குக் கார், பங்களாவும், தன் ஏவலுக்குப் பணிவிடை செய்ய ஏவலாளர்களும் வேண்டும் என்று நினைக்கின்றான். ஆனால் ஆசைக்கோர் அளவில்லை என்றபடி ஆசை பெருகப் பெருக அமைதியை இழத்தலும் தொடர்ந்து வருகிறது. அமைதியை இழந்தவன் வாழ்வை வெறுத்து மரணத்தைத் தழுவ விரும்புகிறான். அந்த முயற்சியில் ஈடுபடுகிறபொழுது அது தற்கொலை என்று சொல்லப்படுகிறது. ஆகத் தற்கொலை செய்பவர்களை ஆராய்ந்து பார்த்தால் தாங்கள் எண்ணிய ஆசைக் கனவுகள் நிறைவேறாத போது எழுந்த ஏமாற்றம் அவர்களுக்கு வாழ்வில் வெறுப்பை ஊட்டி விட்டது. நம் மனக் கோட்டைகளெல்லாம் நிறைவேறும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. நாம் எதற்குத் தகுதியோ அதைத்தான் நாம் பெறுவோம். ஆசைக்கு வசப்பட்டு இவ்வுலகுக்குள் வந்த பிறகாவது அவ்வுண்மையை அறிந்து ஆசையை விட முயலவேண்டும். இல்லையேல் எந்த ஆசைக்கு உள்ளத்தில் இடங் கொடுத்தோமோ அந்த ஆசையே நம் இனிய வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். அமைதியை இழத்தலும் தற்கொலையும் ஒன்றே.

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவிலிருந்த பொழுது அவரைச் சந்திக்க வந்த எத்தனையோ பேர்களில் எம்மாகால்வி என்ற நாடக நடிகையும் ஒருவராவார். அன்றைய அமெரிக்காவிலே திகழ்ந்த சிறந்த நடிகையாக மக்களால் அவள் புகழப்பட்டவள். கோடிக் கணக்கான டாலர் செல்வத்திற்கு அதிபதியாக இருந்தாள். பலரை மகிழ்வித்துக் களிப்பூட்டிய அவள் உள்ளத்தில் இருள் பரவி வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்து கொள்ளப் பல தடவை முயன்றாள். இறுதியில் அவள் நல்வினைப் பயனாக சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தாள். சுவாமிஜியின் அருள் பிரவாகத்தால் பரிசுத்தமடைந்து அதன் பின்னர் அவருடைய சிஷ்யை ஆனாள்.

இன்று பெருஞ் செல்வத்தில் திளைப்பவர்கள், பெரும்புகழ் ஈட்டுபவர்கள், ஏமாற்றம், தோல்வி முதலியன ஏற்படுகிறபொழுது அவற்றைத் தாங்கமாட்டாது உயிரைவிடத் துணிந்துவிடுகின்றனர். உயிரை விடுவது பெரிதன்று. அமைந்த வாழ்க்கையில் வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும் சரி, யார் இறுதிவரையிலும் மனங்கலங்காது இருக்கிறார்களோ அவர்களே வீரர்கள் ஆவர். அற்பச் சிந்தனைகளுக்கு ஆளாகி வேதனைப்பட்டு வாழ்வில் வெறுப்படைபவர்கள் வாழ்வில் எதையும் சாதிக்கமுடியாது.

ஏற்பது இகழ்ச்சி என்ற கோட்பாட்டைச் சமுதாயம் பின்பற்றுமானால் ஊழலற்ற, நேர்மையான ஆட்சி நாட்டில் நிலவுவதைக் காணலாம். ஊழலற்ற ஆட்சி நிலவும்பொழுது மக்களும் சந்தோஷமாக வாழ்வார்கள் என்பதில் ஐயமுண்டோ?

"கர்மம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய். ஆனால் கர்மபலனில் பற்று வைக்காதே" என்கிறார் கிருஷ்ண பரமாத்மா. இந்தக் கோட்பாட்டை எல்லாரும் பின்பற்ற இயலுமா எனத் தயங்க வேண்டுவதில்லை. நாம் கடைப்பிடிக்கக் கூடியதையே கண்ணன் கூறுகிறான்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர்கள் தங்கள் சொந்த பலத்தில் நிற்கும்படி பயிற்சி அளிக்கவேண்டும். அதாவது பிறரின் தயவை எதிர்பாராது சுயமாக எதையும் செய்யும்படி பயிற்சி தரல்வேண்டும். இன்றைய இளைஞன் ஒருவனுக்குத் தன் வீட்டையோ, அல்லது தான் தங்கியிருக்கும் அறையையோ சுத்தமாக வைத்துக்கொள்ளும் பயிற்சி இல்லை. கக்கூஸ் சுத்தம் செய்தல், சாக்கடை கழுவுதல் முதலிய வேலைகளுக்கும் அவர்கள் ஆள் வைத்து வேலை வாங்குகிறார்கள். இப்படிப் பிறரையே எதிர்பார்க்கும் பழக்கம் வளர வளர அவன் ஒவ்வொன்றையும் பிறரிடம் ஒப்படைத்துப் பொறுப்பற்ற நிலைக்குப் போய்விடுவான். 'ஏற்பது இகழ்ச்சி' என்ற இக்கோட்பாட்டை இளமை முதலே பின்பற்ற வேண்டும். இப்

போதுள்ள சூழ்நிலையில் பணத்தால் யாரையும் எங்கும் எளிதில் வசப்படுத்திவிடலாம் என்று மக்கள் ஆணித்தரமாக நம்புகின்றனர். எவ்வளவு இழிவான நிலைக்கு நாம் வந்துவிட்டோம் என்பதற்கு இதைவிட வேறு என்னவேண்டும்? 'பணம் பாதாளம்வரை பாயும்' என்று பழமொழி வேறு சிருஷ்டித்துவிட்டார்கள். உண்மையிலேயே இது ஒழிக்கப்படவேண்டியதில்ஒன்று. நேர்மை, சத்தியம், நல்லொழுக்கம் முதலியன ஒருவனிடம் இருக்கும்வரை அவனை எந்தச் சக்தியும் அசைக்க முடியாது என்று மக்கள் உணரும்படி செய்யவேண்டும். தேர்வில் நிறைய மார்க்குகள் எடுப்பவர்களுக்கு அரசாங்கச் சலுகை, இதர சன்மானம் முதலியன வழங்கப்படுவனபோன்று சத்தியம், நேர்மை, உழைப்பு முதலிய நல்ல பண்பை உடையவர்களுக்கு அரசாங்கமும் ஏனையவர்களும் அவரவர் நிலையறிந்து பரிசுவழங்கி ஊக்குவித்தால் நன்மை பயக்கும்.

யாரிடத்தில் சிறிதும் சுயநலமில்லையோ அவர்கள் யாரிடமிருந்தும் எதையும் ஏற்கமாட்டார்கள். ஆனால் இப்போதைய நிலையில் எங்கும் லஞ்சப்பேய் மறைமுகமாகத் தாண்டவமாடுகிறது. லஞ்சம் என்கின்ற இந்த ஒருவிஷயத்தில் மட்டும் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் ஒன்றுகின்றனர். ஒருவரை மற்றொருவர் காட்டித் தருவதில்லை. இவர்களுக்குள் இரகசிய இணக்கம் காரியம் ஆகும்வரை கருங்கல் போன்று உறுதியாக இருக்கும். அரசாங்கம் ஆயிரக்கணக்கான சட்டங்கள் போட்டு லஞ்சத்தை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும். அந்தச் சட்டம் போட்ட ஆளின் மனதையே கூட மாற்றும் ஆற்றல் லஞ்சத்துக்கு உண்டு. அதனால்தான் இது தொன்றுதொட்டு அழிக்க முடியாத ராக்ஷச விருட்சமாக வேர் ஊன்றிவிட்டது. இதனை வெட்டியெடுக்க ஒரு வழியிருக்கிறது. சுயநலமின்றித் தங்கள் கடமையைத் தெய்வப் பணியாகச்செய்யும் நோக்கமுள்ளவர்கள் யாரிடமிருந்தும், எங்கிருந்தும் வேலைக்குக் கைக்கூலி வாங்காது இருந்தால், அங்ஙனம் கொடுக்க வருகிற ஆட்களையும் பிடித்துக் கடுமையான தண்டனை கொடுத்தால் நாட்டில் லஞ்சத்தை அறவே ஒழிக்க முடியும். இதைச் செயலுக்குக் கொண்டுவந்த சகோதரிகள் சிலரின் வரலாறு மற்றவர்களுக்குச் சான்றாக விளங்குகிறது. ராமநாதபுரத்தை ஆண்ட அரசர்களில் ஒருவர் தம் ஆயுள்காலத்தில் ராமநாதபுரத்திலிருந்து, ராமேசுவரம் வரை அன்ன சத்திரங்களை இலவசமாக நடத்த விரும்பினார். பசியோடு வருகிற யாருக்கும் எந்த நேரத்திலும் உணவு வழங்கிட வேண்டும். ஆனால் எந்த விதத்திலும் கட்டணம் வசூலிக்கக் கூடாது. அங்ஙனம் வசூலித்தால் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று ஆணையிட்டார். அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி அதிகாரிகளும் பயந்து அன்னச்சத்திரங்களை எந்தவிதக் குறைபாடின்றிக் கவனித்து நடத்தி வந்தனர். அரசனுக்கு இருகுமாரத்திகள் இருந்தனர். அவர்கள் இருவரும் மணம்புரிந்து கணவன்மார்களோடு அரண்மனையில் வாழ்ந்து வந்தார்கள். இருமருமக்களையும் அரசன் அழைத்துத் தாம் ஆணையிட்டபடி அன்னசத்திரங்கள் முறையாக நடக்கின்றனவா, அதிகாரிகள் எப்படிநடக்கின்றனர் என்று கண்காணித்து வர அனுப்பிவைத்தார். விசுவாசமுள்ள அதிகாரிகளிடமிருந்து சில ஆதாரபூர்வமான தகவல்கள் சில நாட்கள் கழித்து வரத்தொடங்கின. அரசன் தம் பெண்களையும் வரவழைத்தான். 'தம் ஆணையை மீறி அன்னச்சத்திரத்தில் சாப்பிட வருகிறவர்களிடம் முறை தவறிப் பணம் வசூலித்த பாதகர்களைப் பற்றித் தகவல்கள் வந்துள்ளன. அவர்களை என்ன செய்யலாம் என்று தம் பெண்மக்களைப் பார்த்துக் கேட்டார். 'தந்தையே, நீங்கள் முன்பு அறிவித்தபடி மரணதண்டனை தான் அதற்குப் பொருத்தமானது' என்றனர். அதற்கு அரசன் 'உங்களுடைய கணவன்மார்களே இந்த இழிவான செயலைச் செய்துள்ளதாக நிரூபிக்கப்பட்டு அவர்களும் ஒப்புக் கொண்டனரே' என்றார். அவ்வீர மடந்தையர்கள் சிறிதும் அஞ்சாது "தந்தையே, கணவர்களே ஆனாலும் சரி, எப்போது நேர்மையிலிருந்து பிசகினார்களோ அவர்கள் உலகில் வாழத்தகுதியற்றவர்கள். அவர்களுக்கு நாங்கள் வாழ்க்கைத் துணைவியாக இருக்க வெட்கப்படுகிறோம். லஞ்சம் வாங்குபவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று ஏற்கனவே நீங்கள் அறிவித்தபடி

மரணதண்டனை வழங்கிவிடுங்கள்" என்று தந்தையிடம் சொல்லிவிட்டு அப்பால் சென்று விட்டனர். அரசனும் மருமான்கள் இருவருக்கும் மரணதண்டனை வழங்கியதாகச் சொல்லப் படுகிறது. இப்போதும் ராமநாதபுரத்தினருகே அக்கா மடம், தங்கச்சிமடம் என்று அவ்வீர வனிதையர்கள் ஞாபகமாக அவை இலங்கி வருவனவாகச் சொல்லப்படுகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

இந்தக் குறளுக்கு ஒப்ப வாழும் மனிதன் இலட்சியவாதி எனப்படுகிறான். வாழ்வாங்கு வாழுதல் என்றால் என்ன என்பதை இன்றைய மாணவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர் இல்லை. அதை வீட்டிலாவது புகட்டித் தருவ தற்குப் பெற்றோர் இல்லை. விவேகானந்தர் சிறியவனாக இருந்தபோது 'உன் இலட்சியம் என்ன?' என்று நண்பர்கள் கேட்டனர். உடனே அவன் எல்லாவற்றிலும் சிறந்த உன்னத நிலையை அடைவேன் என்று விடையளித்தான். நம் சிறுவர், சிறுமிகளிடத்தில் உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன என்று கேட்டால், வக்கீல் ஆவேன், டாக்டர் ஆவேன், இன்ஜினியர் ஆவேன், இல்லையெனில் சினிமா நடிகனாவேன் என்பார்கள்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" என்ற குறட்பாவுக் கேற்பக் கல்வியின் நோக்கமே கடவுளை அடைவதாம். இப்போதுள்ள கல்வியின் நோக்கம் கடவுளை மறப்பதாக உள்ளது. இளம் வயதிலேயே இலட்சிய வாழ்க்கையைப் பற்றிய அடித்தளத்தை சிறுவர் சிறுமிகளுக்கு அமைத்துவிட்டால் அவர்கள் அற்பமான சிறிய இலட்சியக் கனவுகளை எண்ணிக் காலங்கழிக்க மாட்டார்கள். ஆஞ்சநேயனை உங்கள் வாழ்க்கையின் இலட்சிய புருஷராக அமைத்துக் கொள்ளுங்கள். அவரைப் போன்ற தூய்மையும், பற்றற்ற சேவையும் யார் ஒருவனிடத்தில் உள்ளனவோ அவன் "செயற்கரிய செயலைச் செய்வான்" என்று இன்றைய இளம் தலைமுறையினர்க்கு விவேகானந்தர் வீர உரை ஆற்றுகிறார். நாம் எதை நினைக்கிறோமோ அதை அடைகிறோம். நல்லதையே நினைப்பவர்கள் நல்லவர்களாக மாறுவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. வாழ்வில் ஒருவன் நல்லவனாகவும், மற்றொருவன் கெட்டவனாகவும் வருவது அவனவன் எண்ணுகிற எண்ணத்தின் விளைவே ஆகும். ஆகவே வள்ளுவரும் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றார். நல்லதையே எண்ணி, நல்லதையே பேசி, நலமே செய்பவர்கள் யாண்டும் நல்லவர்களாக ஆவார்கள். ஆகவே நமக்கமைந்த இவ்வாழ்வைப் பிறர் நலனுக்கும், பரமனுடைய அருளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவோமாக.

செய்திகள்

ஜூலை மாதம் 19, 20 தேதிகளில் இரவு 7 மணியிலிருந்து 8 மணிவரையில் காமயக் கவுண்டன்பட்டி ஸ்ரீஅய்யனார் கோவிலில் ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர் கீதை வகுப்பும், 26ம் தேதி புதுச்சேரி அருட்கோன் வேதானந்தர் பொதுப்பணிக் கழகத்தில் "அருள்நெறி" என்னும் தலைப்பில் ஸ்ரீமத் துருவானந்தர் சொற்பொழிவும் நடாத்துவார்கள்.

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் ஜூன் மாதம் 10 ஆம் தேதி ஆரம்பித்த அந்தர்யோகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதியுடன் அவ்அந்தர்யோகம் முடிவடைகிறது.

சேலம் ஸ்ரீசாரதா கல்லூரியில் 'ஓம் நம சிவாய' என்னும் பஞ்சாட்சரமந்திரம், கோடி அர்ச்சனை மகோத்ஸவம் ஆகஸ்டு மாதம் 13ஆம் தேதியிலிருந்து 19ஆம் தேதி வரையில் நிகழும். இதில் அன்பர்களும் தாய்மார்களும் ஏழு நாட்களிலுமோ, வசதிப்படும் நாட்களிலோ கலந்து கொள்ளலாம். தங்குவதற்கு இடவசதி தனித்தனியாக அமைக்கப்படும். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் 6 (ஆறு) விதம் நேரில் செலுத்தலாம். கலந்துகொள்ள விரும்புபவர்கள் முன் கூட்டியே கலந்துகொள்ளும் நாட்களைக் கடிதத்தின் மூலம் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறைக்குத் தெரிவிப்பது நலம். நிகழ்ச்சி நிரல் இந்தத் தர்ம சக்கர இதழின் அட்டை நான்காம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 11ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு மேல் அவரவர் ஊர்களுக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கிதை 13-ம் பதிப்பு பிரசார விலை	ரு. 16-00
திருவாசகம்-பிரசார விலை	... 14-00
கர்மயோக விளக்கம்	... 10-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்சரின் பெருமை	... 6-00
விவேகானந்த விவரணம்	... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
தினசரி தியானம்-பிரசார விலை	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை	... 3-00
அனுஷ்டான வேதாந்தம்	... 3-00
எதிர்கால இந்தியா	... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம் ௸	... 3-00
சின்மயானந்த குரு ௸	... 3-00
ஆனந்தமானபரம் ௸	... 3-00
சுகவாரி ௸	... 3-00
மௌனகுரு வணக்கம் ௸	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ௸	... 2-50
பரசிவ வணக்கம் ௸	... 1-00
பஜனைப் பாடல்கள்	... 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி ௸	... 1-50
பரமஹம்ஸர் பாமாலை	... 1-50
சந்நியாசி	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலி மோட்சம் (நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	ரு. 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	... 1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*ஆத்ம சக்தி	... 0-75
*சக்தி தத்துவம்	... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
தெய்வீக மகிமைகள்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
*கணபதி	... 0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
The Bhagavad Gita (10th Imp.)	...20-00
The Indian National Education	... 8-00
Sri Lalitambika Sahasranama Stotram	...10-00
Ramakrisna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
Mahabharata (with plastic cover)	... 4-00
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
The Bhagavad Gita (Small Size)	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
Bheeshma The Superman	... 3-50
Hinduism Hosts Christianity	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
* Introducing the Gita	... 1-50
The Garland of Paraaparam	... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	... 1-00
* Key to Higher Life	... 0-75
* The Teacher	... 0-60
* The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக திருவாசகத்திற்கு ரு. 3-25ம் மஞ்ஜரீக்கு ரு. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரு. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரு. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரியில் பஞ்சாட்சர மந்த்ர கோடி அர்ச்சனை

ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதியிலிருந்து 19ஆம் தேதி வரை

நிகழ்ச்சி முறை

காலை

	மணிமுதல்	மணி வரை
திருப்பள்ளி எழுச்சி	5-45	6-00
நாம அர்ச்சனை	6-00	7-00
தியானம்	7-00	7-10
சிற்றுண்டி	7-30	
வாசிப்பு-சத்சம்பாஷணை	9-00	10-00
நாம அர்ச்சனை	11-00	12-00
தியானம்	12-00	12-10
நண்பகல் உணவு	12-30	

மாலை

	மணிமுதல்	மணிவரை
சிற்றுண்டி	4-00	4-30
பஜனை	4-30	5-00
நாம அர்ச்சனை	5-00	6-00
தியானம்	6-00	6-10
சொற்பொழிவுகள் (விபரம் கீழே)	6-30	7-30
கலா நிகழ்ச்சி ,,	7-30	8-00
இரவு உணவு	8-30	

இங்ஙனம்
சித்பவானந்த

சொற்பொழிவுகள், கலா நிகழ்ச்சிகள்

13—8—80 முதல் 19—8—80 வரை (இரவு 6-30 மணிமுதல் 8-00 மணிவரை)

தேதி	நேரம்	தலைப்பு	பேசுபவர்
13	6-30–7-00	தாயுமானவர்	குமாரி சீ. ஆர். சகுந்தலா, ஸ்ரீ சாரதா கல்லூரி.
,,	7-00–7-30	ஆண்டாள்	ஸ்ரீமதி மண்டோதரி கணேஷ் ,,
,,	7-30–8-00	மாணிக்கவாசகர் (நாடகம்)	ஸ்ரீ சாரதா வித்யாலயம், சேலம்.
14	6-30–7-00	சைவம்	புலவர் க. தில்லைக்கோவிந்தன்.
,,	7-00–7-30	வைஷ்ணவம்	புலவர் S K. இராமராசன், வேலூர்.
,,	7-30–8-00	பாதுகாபட்டாபிஷேகம் (நாடகம்)	S.V.V.H.S. திருப்பராய்த்துறை.
15	6-30–7-00	காரைக்கால் அம்மையார்	ஸ்ரீமதி R. பாரிஜாதம், M.A. ஸ்ரீ சாரதா கல்லூரி.
,,	7-00–7-30	ஆழ்வார்கள்	குமாரி R. ரேணுகாதேவி, ,,
,,	7-30–8-00	தர்மரும், தர்மதேவனும் (நாடகம்)	ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்.
16	6-30–7-00	பட்டினத்தார்	புலவர் திரு ச. நடேசன், கரூர்.
,,	7-00–7-30	ஔவை	ஸ்ரீமதி அன்புமீனாட்சி, மதுரை
,,	7-30–8-00	பிரம்மரிஷி (நாடகம்)	S.V.V.H.S. திருப்பராய்த்துறை
17	6-30–7-00	திருநாவுக்கரசு	திரு. S. சாலமன் பாப்பய்யா, M. A. மதுரை.
,,	7-00–7-30	வள்ளலார்-சுத்தசன்மார்க்கம்	திரு. N. மகாலிங்கம், B.Sc. F.I.E. பொள்ளாச்சி
,,	7-30–8-00	சுந்தரரைத் தடுத்தாண்ட படலம் (நாடகம்)	ஸ்ரீ சாரதா வித்யாலயம், சேலம்.
18	6-30–7-00	தாயுமானவர்	திரு. K. இராமமூர்த்தி M.Com. மதுரை.
,,	7-00–7-30	ஞானசம்பந்தர்	வித்துவான் திரு. M நீலகண்டன்.
,,	7-30–8-00	தவப்புதல்வர்கள் (நாடகம்)	S.V.V.H.S. திருப்பராய்த்துறை.
19	6-30–7-00	சுந்தரர்	திரு. M சிவப்பிரகாசம், திருவேடகம்.
,,	7-00–7-30	கீதை பொது நூல்	திரு. V.S. நரசிம்மன், திருவேடகம்.
,,	7-30–8-00	பக்தன் (நாடகம்)	ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.